Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

பொழிவு - 10
குவிப்பு - 11
பக்கங்கள் - 20
விலை ரூபா 25.00
நவம்பர் - 2007
(ISSN 1800-2641)

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, St. Sebastian's St., Mannar, Sri Lanka.
Telephone No : 023-2222377/ 060-2233276, Fax No - 023 - 2222377, E-mail - nesanmn@yahoo.com

# திருத்தந்தை 23 புதிய கர்தினால்களை நியமித்தார்





திருத்தந்தை 16ம் பெனடிக்ற் பாப்பரசர் ஒக்ரோபர் மாதம் 17ம் திகதி 23 புதிய கருதினால்மாரின் பெயர்களை வெளியிட்டுள்ளார். பாப்பரசர் பணியை ஏற்றபின் இரண்டாவது தடவையாக புதிய கருதினால்மாரின் அறிவிப்பை செய்த திருத்தந்தை இந்தியாவின் மும்பாய் மறை மாவட்ட பேராயர் ஒஸ்வோல்ட் கிராசியாஸ் ஆண்டகையை கர்தினாலாக நியமித்துள்ளார். இந்தியாவின் கருதினாலாக இருந்த பேராயர் ஐவன் டயஸ் ஆண்டகை உரோமாபுரிக்கு பணி மாற்றம் செய்யப்பட்ட பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


இத்தாலி, ஸ்பெயின், ஆயன்ரீனா, மெக்சிக்கோ, ஈரான், ஜேர்மனி, போலந்து, பிரான்ஸ், செனிகல், இந்தியா, பிறேசில், கென்னியா ஆகிய நாடுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 23 கர்தினால்மார்களில் 18 பேர் 80 வயதிற்கு உட்பட்டவர்கள் என்பதும் இவர்களே பாப்பரசர் தெரிவின்போது வாக்களிக்க தகுதி உடையவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. 80 வயதிற்கு மேற்பட்ட ஐவருக்கு அவர்களின் பணியை மதிக்கும் விதமாக கருதினால் பட்டங்களை திருத்தந்தை வழங்கியுள்ளார்.

# மன்னார் ஆயர்
## ஜனாதிபதியைச் சந்தித்தார்



கடந்த ஒக்ரோபர் மாதம் 26ம் திகதி மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை கொழும்பு பேராயர் மேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை மற்றும் மடுத் திருப்பதி பரிபாலகர் அருட்பணி எமிலியானுஸ்பிள்ளை ஆகியோர் அலரிமாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்தித்தனர். எமில் அடிகளாரை ஜனாதிபதி கைகுலுக்கி வரவேற்கின்றார்.

# அமதிகளின் யாழ் மாகாணத்திற்கு
# இரண்டு புதிய குருக்கள்



அருட்சகோ. எட்வின்



அருட்சகோ. கொன்பியூசியஸ்

அமலமரித் தியாகிகளின் யாழ் மாகாணத்தைச் சார்ந்த அருட்சகோதரர் தேவதாசன் எட்வின் அ.ம.தி. [விடத்தல்தீவு] அவர்கள் எதிர்வரும் 12.11.2007 அன்று மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்படவுள்ளார். அருட்சகோதரர் அகஸ்ரீன் கொன்பியூசியஸ் அமதி [யாழ். மண்டதீவு] அவர்கள் எதிர்வரும் 13.12.2007 அன்று யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர் மேதகு. சௌந்தரநாயகம் ஆண்டகையினால் குருவாக திருநிலைப்படுத்தப்படவுள்ளார். இவர்களுக்கு மன்னாவின் செபம் கலந்த நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றோம்.

[புதிய குருக்களைப் பற்றிய விரிவான தகவல்களை பக்கம் 02இல் காணலாம்]

# அனைத்து மதங்களையும் ஒன்றிணைத்து சமாதான முயற்சிகளை முன்னெடுக்க ஏற்பாடு

## ஜனாதிபதியுடனான சந்திப்பை அடுத்து மன்னார் ஆயர் ஊடகங்களுக்குத் தகவல்

அனைத்து மத நிறுவனங்களையும் ஒன்றிணைத்து சமாதான முயற்சிகளுக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போவதாக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு. இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்களை துரிதமாக முன்னெடுப்பதற்கு வசதியாக வன்னிக்கு சென்று பேச்சுக்களை தொடர்வதற்கான வாய்ப்பான நிலைமைகள் பற்றி ஆராயவுள்ளதுடன், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான தற்போதைய தீவிர யுத்த முனைப்புகளை தடுத்து நிறுத்துவது தொடர்பாக பேசவுள்ளதாகவும் தெரிவித்தார். ஜனாதிபதியுடனான தனது சந்திப்புத் தொடர்பாக மன்னார் ஆயர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், 'அப்பாவி மக்களை தாக்குதல்கள் மூலமான பாதிப்புகளிலிருந்து விடுவிக்கும் வகையில் மடுத் தேவாலயப் பகுதியை யுத்த சூனியப் பிரதேசமாக பிரகடனப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார். எமது பிரச்சினைகளை ஜனாதிபதி மிகவும் அக்கறையோடு விசாரித்தார். மடுப் பிரதேசத்தில் 25,000 இற்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்கள் வாழுகின்றனர். இந்த மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு சிரமங்களைக் கவனத்திற்கொண்டு இப்பிரதேசத்தை யுத்த சூனியப் பிரதேசமாக பிரகடனப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

அனைத்து அரசியல், மற்றும் மத நிறுவனங்களும் இந்த யுத்தத்தை எவ்வாறாயினும் தடுத்து நிறுத்தவேண்டும் என்பதில் மிகவும் அக்கறையாக உள்ளன. கத்தோலிக்க திருச்சபை நடைபெறுகின்ற இந்த யுத்தத்தினை தடுத்து நிறுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கான சமாதானப் பேச்சுவார்த்தையை இரு தரப்புகளுக்குமிடையில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ளும்.

மதகுருமார் அடங்கிய குழு வன்னி சென்று விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை தொடர்வதற்கான வாய்ப்பான நிலைமைகள் பற்றி ஆராயும். யுத்த முன்னெடுப்புக்களை தடுப்பதற்கான அனைத்து சமாதான வழிகளையும் முன்னெடுப்பது நாட்டின் ஒவ்வொரு குடிமகனதும் கடமையாகும். நடைபெறும் யுத்தத்தினால் நாட்டு மக்கள் அச்சத்தில் முடங்கிப்போயுள்ளனர். சமாதானத்துக்கான பேச்சுவார்த்தை முயற்சிகளை அவசியம் முன்னெடுக்க வேண்டியுள்ளதாகவும் மன்னார் ஆயர் தெரிவித்தார்

# மன்னா

## அமைதி நிலவ அர்ப்பணத்தோடு செபிப்போம்

### மக்களின் மௌனக் குரல்கள்

*எமது மண்ணில் வன்முறைக் கலாச்சாரம் வளர்ந்து கொண்டே செல்கின்றது. அநியாயப் படுகொலைகளும், ஆட்கடத்தல்களும் அதிகரித்த வண்ணமே செல்கின்றன. 'எல்லாளன் நடவடிக்கை' என்ற அனுராதபுரத் தாக்குதலும், புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச் செல்வன் மீதான விமானத் தாக்குதலும் சமாதான முயற்சிகளைப் பல மைல் தூரம் பின்நோக்கித் தள்ளியுள்ளன.*

*இன்று எமது தாயக மண் யுத்த மேகங்களால் சூழப்பட்டுள்ளது. பயமும், பதட்டமும் நிறைந்த யுத்த கால சூழ்நிலையில் நாம் வாழ்கின்றோம். அனைவரது உள்ளங்களும் அமைதி இழந்த நிலையில் அங்கலாய்க்கின்றன. அகதிகளாக அலையும் மக்களின் அழுகைக் குரல்கள் மற்றவர்களுக்கு கேட்க நியாயம் இல்லைதான்.*

*முடிவில்லையா ... தேவா விடிவில்லையா .....?*
*விடிவில்லையா ....கண்ணீரின் முடிவில்லையா ....?*
*மூண்டுவிட்ட போராலே மூட்டை முடிச்சோடு*
*வீட்டைவிட்டே ஓடுகின்றோம்.*
*தலைகளில் பாரம்! விழிகளில் ஈரம்!*
*நடந்ததோ ஒரு வாரம்! போவதோ வெகு தூரம்!*
*அஞ்சிப் பயந்தழுது அலைவதுதான் வாழ்க்கையாச்சு!*
*தஞ்சம் புகுவதற்கோ தக்கதோர் இடமில்லை.*
*எங்கு செல்கின்றோம் எங்களுக்கே புரியவில்லை!*

*இதுவே இன்றைய எம் மக்களின் மௌனக் குரலாக இந்த மண்ணிலே ஓங்கி ஒலிக்கின்றது.*

*"அமைதியே இல்லாதபொழுது, 'அமைதி, அமைதி' என்று கூறி என் மக்களுக்கு ஏற்பட்ட காயத்தை மேலோட்டமாகவே குணப்படுத்தினர் (எரே.6:14) என ஆண்டவர் அங்கலாய்க்கின்றார்.*
*"நாங்கள் அமைதிக்காகக் காத்திருந்தோம் ஆனால் பயனேதும் இல்லை. நலம் பெறும் காலத்தை எதிர்பார்த்திருந்தோம். பேரச்சமே மிஞ்சியது." (எரே 8:15). என இறைவனின் மக்கள் புலம்புகின்றனர்.*

### அமைதி அருள்பவர் ஆண்டவரே

*அமெரிக்க நாட்டின் காலம் சென்ற ஆயர் புல்ட்டன் சீன் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்.*
*"அமைதி (சமாதானம்) மனிதனால் ஆக்கப்பட்ட நிகழ்வோ அல்லது திட்டமோ அல்ல. இராஜதந்திர நடவடிக்கையால் அதை முன்வைக்க முடியாது. சர்வதேச அமைப்போ, எந்த உலக அமைப்புக்களோ அதற்கு உத்தரவிட முடியாது. கடவுளுடன் ஒரு பக்கமும் நம்முடன் இன்னுமொரு பக்கமும் அயலவருடன் மறுபக்கமுமாக உருவாக்கப்பட்ட முக்கோண அடித்தளத்தைத் தவிர இராணுவம் அல்லது அரசாங்கம் இவை எதுவும் சமாதானத்தைத் திணிக்க முடியாது."*
*என்று அவர் கூறும் வார்த்தைகள் இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் நமது ஆழமான கவனத்திற்குரிய வார்த்தைகளாக உள்ளன.*

*திருவிவிலியம் அமைதியின் செய்தியை ஆணித்தரமாக எமக்கு எடுத்துரைக்கின்றது. இயேசு பிறந்தபொழுது இந்தப் பூமியில் எதிரொலித்த முதல் செய்தி, "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக, உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" (லூக்.2: 13-14) என்பதாகும். இயேசு உயிர்த்துக் காட்சி கொடுத்தபொழுது தம் சீடருக்குக் கூறிய முதல் வாழ்த்து, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" (லூக் 24 -36) என்பதாகும். ஆம், அமைதி இழந்த இந்த மண்ணில் வாழும் நமக்கு அமைதியின் செய்தியையே ஆண்டவர் அருள்கின்றார்.*

*ஆண்டவரிடமிருந்தே அமைதி வரமுடியுமென்றால் அமைதியின் அரசனாகிய அந்த ஆண்டவரையே நாம் பற்றிக்கொள்ளவேண்டும். நாம் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத காரியங்கள் செபத்தினால் நிறைவேறுகின்றன என்பதை மனதில்கொள்வோம். ஆகவே அமைதிக்கான நமது இறுதி ஆயுதமாகிய செபத்திற்கு நம்மை அர்ப்பணிப்போமா?*

***மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,***
***அன்புடன் - அருட்பணியாளர் நேசன்,***
***மன்னா பதிப்பாசிரியர்.***



# வாசகர் எண்ணங்கள்

## மன்னா என்னும் அருமருந்து

படிக்கப் பல புத்தகங்கள், பார்க்கப் பல சஞ்சிகைகள்
எழுந்த வேகத்தில் விழுந்தன பல! எழுந்து நடந்தன சில!
வயிற்றுப் பசிக்கு உணவு, அறிவுப் பசிக்கு படிப்பு
ஆன்மீகப் பசிக்கு மன்னா!
இறை வார்த்தையை பகிர்வதில்
இன்றைய கத்தோலிக்க விளை நிலம் மன்னா!
படித்தவர்க்கு பலன்கள் பல, அறியாதோர்க்கு பிணிகள் பல
பலரின் மனதைக் கவர்ந்து பாரில் உலாவி வந்து
மும்மாரி பொழிந்து பயிர் வளர்ந்ததுபோல்
உன் முகம் காண ஏங்க வைத்து
கண்டவுடன் புதுப் பொலிவு ஈவாய்.
மன்னா நீ வாழ்க, மங்காப் புகளோடு வாழ்க!
உன்னை வாழ்த்துகின்றேன் தமிழ் மகனாக!
உன்னை ருசிக்கின்றேன் கத்தோலிக்கனாக!

*ஏ. றி. இம்மானுவேல், ஜேர்மனி*

## சுவை தொடரும்



என் இனிய மன்னாவே, நீ உலகெங்கும் நீண்ட காலம் ஆழ வேண்டும். கொட்டும் உன் அம்சங்களோ ஒலித்திடும் ஓசை. சிறிது தூரமாய் இருக்கலாம். ஆனால் நீயோ உலகெங்கும் மாதந்தோறும் ஓங்கி ஒலித்து உயரப் பறக்கின்றாய். யாசிக்கின்றேன் நான்! நீ மாதந்தோறும் எப்போ வருவாய் என உன்னை எண்ணி உன்னை யாசிக்கின்றேன்! என்னை மட்டுமா நீ ஏங்க வைக்கின்றாய்? உன்னை நான் விரும்பிப் படிக்கின்றேன். உனது ஒவ்வொரு ஆக்கமும் எனக்குப் பல வகையில் பயனளிக்கின்றது. பல சந்தர்ப்பங்களில் உன்னில் வரும் சம்பவங்கள் மன ஆறுதலைக்கூடத் தருகின்றன. தொடர்ந்தும் உன் வீர சேவை தொடர, உனது சுவையை எல்லோரும் சுவைக்க, எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். உனக்கும் உன்னை உருவாக்கும் அருட்பணியாளர் மதிப்பிற்குரிய நேசன் அடிகளாருக்கும் பாராட்டுக்கள்.

*திருமதி. சுகந்தி மனோகரன்*
*ஒல்லிமோட்டை, சாவற்கட்டு, மன்னார்.*

# தாவீது அடிகள் 32 மொழிகளில் புலமை பெற்று மொழியியல் ஆய்வுகளை மேற்கொண்டவர்

### - நூற்றாண்டு விழாவில் அருட்திரு யேசுநேசன் அடிகளார்

"இன்று மொழியியலில் ஆய்வுகள் பன்மடங்கு வளர்ச்சியடைந்துள்ள போதும் வண. தாவீது அடிகளார் ஆற்றிய பணியின் சிறப்பும் மேன்மையும் அவர் வாழ்ந்த காலத்து சமூக வரலாற்றுப் பின்னணியில் நோக்கும்போது பன்மடங்கு சிறப்பைப் பெற்றுள்ளது."

மேற்கண்டவாறு தாவீது அடிகளாரின் நூற்றாண்டு விழாவிலும் மலர் வெளியீட்டிலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அமல மரித்தியாகிகள் சபை மேலாளர் அருட்திரு பி. யேசுநேசன் அடிகளார் குறிப்பிட்டார்.

யாழ். பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு பி. இருதயதாஸ் அடிகளார் தலைமையில் தும்பளையிலுள்ள அருட்தந்தை தாவீது அடிகளாரின் இல்லத்தில் நடைபெற்ற இவ்விழாவிலே பிரதம விருந்தினர் மேலும் கூறியதாவது.

வண. தாவீது அடிகளார் தலைசிறந்த மறைப்பணியாளன். வியத்தகு மறைப்பணிகளை மேற்கொண்டவர். மொழியியல் ஆய்வாளரான இவர் வியத்தகு கல்விமானாவார். இவர் மொழியியலில் மேற்கொண்ட ஆய்வுகள் ஆய்வாளர் மத்தியில் இவருக்கு பெரும் மதிப்பையும் மங்காப் புகழையும் பெற்றுக் கொடுத்தது.

இவர் தமிழ் மொழியின் சிறப்பினையும் மகிமையினையும் மற்றைய மொழிகளுடன் ஒப்புநோக்கி ஆய்வுபூர்வமாக தம் முடிவுகளை முன்வைத்து சமுதாயத்திற்குத் தந்தவர். இவரது தமிழ்ப் பணி பாராட்டிற்குரியதாகும். இந்து ஐரோப்பிய அல்லது. இந்து ஆரிய மொழிகளில் முதுகலைமாணிப் பட்டமும் தொல்காப்பிய ஆய்வில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர். அண்ணாமலை, மைசூர், இலண்டன், முன்ஸ்ஸர் பல்கலைக்கழகங்களில் மொழியியல் நெறியை மேற்கொண்டவர்.

தமிழில் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியை ஆக்கும் பணியில் இருந்த நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகள் அதனைப் பூர்த்தி செய்யாது அமரத்துவம் அடைந்துவிட்டார். தாவீது அடிகளார் அதனைப் பூர்த்திசெய்யும் பொறுப்பை எடுத்துக்கொண்டார்.

சொற்பிறப்பொப்பியல் அகராதி ஆய்வுப் பணி பன்மொழிப் பாண்டித்தியத்தையும் அறிவாற்றல் கூர்மையையும் ஆய்வுப்பின்புலத்தையும் மொழியியல் துறை ஈடுபாட்டையும் எதிர்பார்த்திருந்தது. கடின உழைப்பு வேண்டியிருந்தது. இதற்கான பல்வேறு தனித்துவம் வாய்ந்த திறமைகளையும் தாவீது அடிகளார் கொண்டிருந்தார்.

உலகத்தின் 32 மொழிகளில் புலமை பெற்றுள்ள இவர் மூலச் சொற்களைத் துருவித்துருவி ஆராய்ந்து சொற்களை ஒப்புநோக்கி நடுநிலை வாய்ந்த முடிவுகளை முன்வைத்தார்.

சொற்பிறப்பொப்பியல் தமிழகராதியின் மூன்று பாகங்களையும் நல்லூர் ஞானப்பிரகாசர் அடிகளே வெளியிட்டிருந்தார். மீதிப்பாகங்களில் தமிழிலும் ஆங்கிலத்திலும் எட்டுப்பாகங்களை தாவீது அடிகளாரே வெளியிட்டார்.

இன்று மொழியியல் ஆய்வுகள் பன்மடங்கு வளர்ச்சியடைந்திருக்கின்றன. ஆனாலும் தாவீது அடிகளார் ஆற்றிய பணி மேன்மையும் சிறப்பும் அவர் வாழ்ந்த காலத்து சமூகவரலாற்றுப் பின்னணியுடன் நோக்கும்போது அவர் பணி பன்மடங்கு உயர்வு பெறுகின்றது என்றார்.

நினைவு மலரை அருட்திரு எஸ். விமலராஜ் (அமதி) அடிகளார் வெளியிட்டுவைத்து உரையாற்றினார்.

யாழ். பல்கலைக்கழக ஆங்கில மொழியியல் துறை விரிவுரையாளர் கலாநிதி அமிர்தாஞ்சலி சிவபாலன், தாவீது அடிகளார் நினைவுக்குழு இணைப்பாளர் சீ. அந்தோனிமுத்து உட்பட இன்னும் பலர் உரையாற்றினர். அருட்திரு. ஜே.கிருபாகரன் அடிகளார் மரம் நாட்டும் வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

காலை தாவீது அடிகளாரின் தும்பளை வீட்டிற்கு அருகாமையில் உள்ள புனித லூர்து அன்னை தேவாலயத்தில் விசேட வழிபாடும் திருப்பலியும் நடைபெற்றன.

# அமதிகளின் யாழ் மாகாணத்திற்கு இரண்டு புதிய குருக்கள்

### அருட்சகோதரர் எட்வின் (அமதி)

அருட்சகோதரர் தேவதாசன் எட்வின் அவர்கள் அமலமரித் தியாகிகள் சபையின் யாழ். மாகாணத்தைச் சேர்ந்தவர். மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த விடத்தல்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் திரு. திருமதி. வ. தேவதாசன், தவமணி தம்பதிகளின் புதல்வனாக, 17.08.1974இல் பிறந்தார். தமது ஆரம்பக் கல்வியையும், உயர்தரக் கல்வியையும் விடத்தல்தீவு தூய யோசவ்வாஸ் மகா வித்தியாலயத்தில் நிறைவுசெய்தார்.

அருட்பணியாளர் வின்சன் பற்றிக் (அ.ம.தி) அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்று யாழ். கொழும்புத்துறை புனித சூசையப்பர் சிறிய குருமடத்தில் பாதம் பதித்த இவர், பின்னர் மக்கோனா புனித யூஜின் டி மசனட் குருமடத்தில் ஆரம்ப நவசந்நியாச பயிற்சியையும், தொடர்ந்து பண்டாரவளை திருஇருதய நவசந்நியாச இல்லத்தில் நவசந்நியாசப் பயிற்சியையும் நிறைவு செய்தார். அதன் பின்னர் கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தில் மெய்யியல் கல்வியையும், யாழ் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியையும் நிறைவு செய்தார்.

கடந்த 07.05.2007 அன்று மன்னார் கீரி ஞானோதய இல்லத்தில் நிரத்தர துறவற அர்ப்பணத்தைச் செய்த இவர் 08.05.2007 அன்று மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப்பட்டார். பின்னர் முழங்காவில் அன்பக அமல அன்னை சிறுவர் இல்லத்தில் திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார்.

### அருட்சகோதரர் கொன்பியூசியஸ் (அமதி)

அருட்சகோதரர் அகஸ்ரீன் கொன்பியூசியஸ் அவர்கள் அமலமரித் தியாகிகள் சபையின் யாழ் மாகாணத்தைச் சேர்ந்தவர். யாழ். மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் திரு. திருமதி. ஞானபிரகாசம் அகஸ்ரீன், மரிய கொறற்றி தம்பதிகளின் புதல்வனாக 11.11.1978இல் பிறந்தார். தமது ஆரம்பக் கல்வியை மண்டைதீவு றோ.க.த.க. பாடசாலையிலும், உயர்தரக் கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் நிறைவுசெய்தார்.

அருட்பணியாளர் சந்திரபோஸ் (அ.ம.தி) அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்று யாழ் கொழும்புத்துறை புனித சூசையப்பர் சிறிய குருமடத்தில் பாதம் பதித்த இவர், பின்னர் மக்கோனா புனித யூஜின் டி மசனட் குருமடத்தில் ஆரம்ப நவசந்நியாச பயிற்சியையும், தொடர்ந்து பண்டாரவளை திரு இருதய நவசந்நியாச இல்லத்தில் நவசந்நியாசப் பயிற்சியையும் நிறைவுசெய்தார். அதன் பின்னர் கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தில் மெய்யியல் கல்வியையும், யாழ் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியையும் நிறைவு செய்தார்.

கடந்த 07.05.2007 அன்று மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நிரத்தர துறவற அர்ப்பணத்தை செய்த இவர் 08.05.2007 அன்று மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப்பட்டார். பின்னர் திருமலை நிலாவெளி சூசையப்பர் பங்கில் திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார்.

### எமது குடும்பங்களிலும், எமது நாடுகளிலும், முழு உலகிலும் சமாதானம் நிலவ வேண்டி

# திருச்செபமாலையை செபிப்போம்

## – திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் –

2007ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 7ம் நாள் நண்பகல் மூவேளைச் செபத்தின்போது புனித பேதுரு சதுக்கத்தில் குழுமியிருந்த மக்கள் மத்தியில் உரையாற்றிய திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் குடும்பங்களிலும், உலகிலும் சமாதானம் நிலவவேண்டிச் செபிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

அன்பான சகோதர, சகோதரிகளே, ஐப்பசி மாதத்தின் முதல் ஞாயிறாகிய இன்றைய தினமானது எமது செபத்திற்கும், தியானத்திற்கும் என இரண்டு காரணங்களை முன்வைக்கின்றது. திருச்செபமாலை அன்னையின் நினைவுதினம் இன்று. மற்றையது இந்த மாதமானது விசேடவிதத்தில் மறைப்பரப்புப் பணிக்கு அர்ப்பணிக்கப்பட்டதாயுள்ளது.

செபமாலை அன்னையின் பாரம்பரிய திருச்சொரூபமானது குழந்தை இயேசுவை மரியன்னை கையில் ஏந்திக்கொண்டு, புனித சாமிநாதருக்குச் செபமாலையை அளிப்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. திருச்செபமாலை இயேசுவையும் அவரது வாழ்வையும் தியானிப்பதற்கும் அவரை அன்பு செய்து எப்பொழுதும் பிரமாணிக்கத்துடன் பின்செல்வதற்கும் மரியன்னையால் அளிக்கப்பட்ட ஒரு வழியாயிருக்கிறது என்பதை இந்த அர்த்தம் பொருந்திய பிரதிமைப்படம் எமக்குக் காட்டுகிறது.

இதனையே மரியன்னை தான் காட்சியருளிய பல்வேறுபட்ட இடங்களில் வெளிப்படுத்தியிருக்கின்றார். 90 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் பற்றிமாபதியில் காட்சியளித்ததை நான் விசேட விதத்தில் எனது நினைவுக்குக் கொண்டு வருகிறேன். மூன்று இடைச்சிறுவர்களுக்கு லூசியா, யசிந்தா, பிரான்சிஸ் ஆகியோருக்குக் காட்சியளித்தபோது தன்னைச் "செபமாலை அன்னை" என வெளிப்படுத்தினார். யுத்தம் முடிவுக்கு வரவேண்டுமென்பதற்காக நாளாந்தம் செபமாலை செபிக்கும்படி அவர்களிடம் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்.



எமது குடும்பங்களிலும் எமது நாடுகளிலும், முழு உலகிலும் சமாதானம் நிலவ வேண்டி திருச்செபமாலை செபிப்பதற்கு எம்மை அர்ப்பணிப்பதன் மூலம் மரியாளின் அன்னைக்குரிய வேண்டுதலை வரவேற்போம்.

## தலவில குடும்ப திருயாத்திரை

கொழும்பு யோசவ்வாஸ் மன்றம் தங்கள் ஆண்டு நிகழ்ச்சிகளில் இன்னும் ஒரு நிகழ்வை இவ்வருடம் சேர்த்துக்கொண்டுள்ளனர்.

தமிழ் கத்தோலிக்க குடும்பங்களை ஒன்று சேர்க்கும் விதத்தில், அவர்கள் மத்தியில் ஒற்றுமையையும், சகோதரத்துவத்தையும் வளர்க்கவும் நல்ல வழிபாடுகளை வழங்கவும் எடுக்கப்பட்ட புதிய தீர்மானமே தலவில யாத்திரைத் தலத்திற்கான குடும்ப யாத்திரையாகும்.

செப்டெம்பர் மாதம் முதலாம் இரண்டாம் திகதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட தலவில குடும்பத் திருயாத்திரையில் ஏராளமான மக்கள் கலந்து பயன்பெற்றனர். இந்தியாவிலிருந்து வருகை தந்த அருட்பணி. டொமினிக் சேவியர், அருட்பணி. சூசைராஜ் அதேபோல் அருட்பணி. ஆனந்தன் பெர்னாண்டோ புள்ளே என்போர் வழிபாடுகளையும் நிகழ்ச்சிகளையும் வழிநடத்தினர்.

கொழும்பு யோசவ்வாஸ் மன்றத்தின் செபக்குழு இம்முயற்சியை பொறுப்பேற்று ஒழுங்குகள் யாவற்றையும் வெகு சிறப்பாகச் செய்திருந்தது.

## பரிசுத்த அன்னையின் மூலமாக சமாதானத்திற்காக வேண்டுவோம்

எமது மண்ணில் சமாதானம் நிலவ வேண்டும் என்பதற்காக வாரத்தில் ஒரு தடவை குறிக்கப்பட்ட ஒரு நேரத்தில் மக்களை ஒன்றுகூட்டித் திருச்செபமாலையைச் செபிக்க வேண்டுமென்னும் கோரிக்கையை 2007ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 15ம் நாள் இடம்பெற்ற மன்னார் மறை மாவட்டக் குருக்களுக்கான ஒன்று கூடலின்போது மேதகு மன்னார் ஆயர் முன்வைத்தார். இதை வலியுறுத்தி குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார் மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;



அருட்பணி. விக்ரர் சோசை
குருமுதல்வர், மன்னார்.

அ). 2007 ஐப்பசி 27ம் நாள் தொடங்கி ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 7.00 மணிக்குத் தமது இல்லதில் ஒன்றுகூடுதல்.

ஆ). ஒவ்வொரு குடும்பமும் செபமாலை செபிக்கத் தூண்டும் வகையில் சரியாக மாலை 6.55ற்கு ஒவ்வொரு ஆலயத்திலும் ஆடம்பர மணி ஒலி எழுப்புதல்.

இ). பின்வரும் வார்த்தைகள் மூலமாக இறைவனின் வாக்குறுதியைக் கவனத்திற் கொண்டு கார்த்திகை மாதத்தில் சிறந்ததொரு ஒப்புரவு அருட்சாதனத்தை மேற்கொள்ள மக்களுக்கு அழைப்பு விடுத்தல், "எனது பெயரைப் போற்றிடும் என் மக்கள் சிறுமையுற்று, தங்கள் பாவங்களிலிருந்து மனம் வருந்தி, இரந்து மன்றாடி, என் திருமுகத்தை நாடினால், வானகத்திலிருந்து அவர்களது மன்றாட்டுக்களைக் கேட்டு அவர்கள் பாவங்களை மன்னிப்பேன். அவர்களது நாட்டுக்கு நலன் அளிப்பேன்" (2 குறிப்பேடு 7:14)

ஈ). எமது மண்ணிற்குச் சமாதானம் கிடைக்கும் வரை சமாதானத்திற்கான இந்த வேண்டுதல் தொடரும். இந்த வகையில் மறைமாவட்டமாகச் செபிப்பதற்கு மக்களைத் தூண்டுவோம். உங்களுடைய சொந்த இடங்களிலும் தயவு செய்து இதனை நடைமுறைப்படுத்துங்கள்.

## கேவாலாரில் தமிழ் மக்களின் 20ஆம் ஆண்டு விழா சீமான் மரியதாசன் அடிகளார் தலைமையில் திருவிழாத் திருப்பலி





கடந்த ஓகஸ்ட் மாதம் 10ம் 11ம் திகதிகளில் ஜேர்மனி கேவாலார் திருத்தலத்தில் தமிழ் மக்களின் திருவிழா இடம்பெற்றது. வருடாந்தம் எல்லா இடங்களிலும் இருந்து இந்தத் திருத்தலத்தில் தமிழ் மக்கள் ஒன்றுகூடி சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்வர். இந்த ஆண்டு 20வது ஆண்டாக இத்திருவிழா நடைபெற்றது. இவ்விழாவில் கலந்துகொண்ட மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த ஆக்காட்டிவெளிப் பங்குத்தந்தை எஸ். சீமான் மரியதாசன் அடிகளார் திருவிழாத் திருப்பலியைத் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார்.

### வட மாகாணத் தமிழ் இலக்கிய விழாவில் கௌரவிக்கப்பட்ட

## கத்தோலிக்க கலை இலக்கியவாதிகள்



அருட்திரு
நீ மரியசேவியர் அடிகள்



திருவாளர்
பறுனாந்து பீரிஸ் அவர்கள்



திரு.ஜோண்சன்
ராஜ்குமார் அவர்கள்

கடந்த ஒக்ரோபர் மாதம் 27ம், 28ம் திகதிகளில் வடக்கு மாகாண கல்வி மற்றும் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் முதலாவது மாகாணத் தமிழ் இலக்கிய விழா வவுனியாவில் நடைபெற்றது. காலை நிகழ்வுகள் வவுனியா நகர சபை மண்டபத்திலும் மாலை நிகழ்வுகள் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியிலும் நடைபெற்றது.

***அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகள்*** என்ற பொருள் பற்றிய ஆய்வரங்காக காலை நிகழ்வுகள் அமைந்தன. முதல் நாள் ஆய்வு அமர்வு கவிஞர் சு. வில்வரத்தினம் அரங்கிலும் இரண்டாம் நாள் அமர்வு செம்பியன் செல்வன் அரங்கிலும் இடம்பெற்றன.

முதல் நாள் மாலை நிகழ்வுகள் வ. சு. ராஜஐயனார் அரங்கிலும் இரண்டாம் நாள் மாலை நிகழ்வு மர்ஹூம் சுபைர் - இளங்கீரன் அரங்கிலும் நடைபெற்றன. இரண்டாம் நாள் மாலை நிகழ்வின்போது கலை இலக்கிய சேவையைப் பாராட்டுமுகமாக ஆறு தமிழ் அறிஞர்கள் ***ஆளுனர் விருது*** வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதில் திருமறைக்கலாமன்ற இயக்குனர் நீ. மரிய சேவியர் அடிகளாரும், மன்னார் தாழ்வுபாட்டைச் சேர்ந்த திரு. பறுனாந்து பீரிஸ் அவர்களும் அடங்குவர்.

மரியசேவியர் அடிகளாரின் நாற்பது ஆண்டுகால கலைச்சேவையை அனைவரும் நன்கறிவர். திரு. பறுனாந்து பீரிஸ் அவர்கள் தாழ்வுபாட்டில் சிறந்த நாடகக் கலைஞராக இருந்து சிறப்பான கலைச் சேவை ஆற்றி வருகின்றார். இந்நிகழ்வின்போது 2006ஆம் ஆண்டிற்கான தெரிவுசெய்யப்பட்ட சிறந்த நூல்களுக்கான விருதுகளும் வழங்கப்பட்டன. இதில் திருமறைக் கலாமன்றத்தின் பிரதிப் பணிப்பாளராக பணியாற்றும் திரு. ஜோ. ஜோண்சன் ராஜ்குமார் அவர்களுக்கு '***கொல் ஈனுங் கொற்றம்***' என்ற நாடக நூலுக்கு விருது கிடைத்தது. ஜோண்சன் அவர்கள் திருமறைக்கலா மன்றத்தின் ஊடாக பல நாடக ஆக்கங்களைப் படைத்தும் நெறியாள்கை செய்தும் பலரது பாராட்டைப் பெற்றவர். இவர்கள் அனைவரையும் மன்னா வாழ்த்திப் பாராட்டுகின்றது.

## இலங்கைக்கான திருத்தந்தையின் முன்னாள் பிரதிநிதி மேதகு அம்புறோஸ் டி பவுலி ஆண்டகை காலமானார்



இலங்கைக்கான திருத்தந்தையின் முன்னாள் வத்திக்கான் பிரதிநிதியும் இறக்கும்வரை அவுஸ்ரேலியாவுக்கான திருத்தந்தையின் பிரதிநிதியுமாகப் பணியாற்றி வந்த பேராயர் அதிமேதகு அம்புறோஸ் டி பவுலி ஆண்டகை காலமானார். இவர் 1986–1988 வரை இலங்கைக்கான திருத்தந்தையின் வத்திக்கான் தூதுவராகக் கடமையாற்றினார்.

பேராயர் அம்புறோஸ் டி பவுலி ஆண்டகை அவர்கள் ஐப்பசித் திங்கள் 10ம் நாள் மியாமி (USA) யிலுள்ள "மவுண்ட் சீனாய்" வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு அங்கு உயிர் துறந்தார்.

பேராயர் பவுலி ஆண்டகை அவர்கள் 19ம் திகதி ஆவணி 1934ம் ஆண்டு ஐக்கிய அமெரிக்கா நாட்டில் பிறந்தார். 18ம் திகதி மார்கழி 1960ல் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 23ம் திகதி புரட்டாதி 1983ல் (வயது 49) லாறஸ் என்ற இடத்தின் பெயரளவிலான பேராயராக நியமனம் பெற்றார். 1983ல் இலங்கைக்கான திருத்தந்தையின் வத்திக்கான் தூதுவராக நியமனம் செய்யப்பட்டார். தென்னமெரிக்கா, சுவிஸ்லாந்து, நம்பியா, பொட்ஸ்வான், யப்பான், அவுஸ்திரேலியா ஆகிய இடங்களில் திருத்தந்தையின் பிரதிநிதியாகப் பணியாற்றினார். அன்னாரின் ஆன்மா அமைதியில் இளைப்பாறுவதாக.

# மன்னார் மறைமாவட்ட செய்திகள்

## முருங்கன் மறைக்கோட்டத்தில் கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான செபவாழ்வுக் கருத்தமர்வு








முருங்கன் மறைக்கோட்ட கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான செபவாழ்வு பற்றிய கருத்தமர்வு கடந்த 25.10.2007 அன்று முருங்கன் டொன் பொஸ்கோ இல்லத்தில் நடைபெற்றது.

காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகிய இந்நிகழ்வில் முருங்கன் மறைக்கோட்ட முதல்வர் அருட்பணியாளர் டெஸ்மன் குலாஸ் அவர்கள் தலைமையுரையும், வரவேற்புரையும் நிகழ்த்தினார். மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. எம். ஏ. றெவல் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணியாளர் விக்ரர் சோசை அவர்கள் ஆசியுரை கூறினார்.

மூன்று அமர்வுகளாக இடம்பெற்ற இக்கருத்தமர்வில் முதலாவது அமர்வுக்கு அளவக்கைப் பங்குத்தந்தை அருட்பணியாளர் டக்ளஸ் லோகு அவர்கள் தலைமை தாங்கினார். இந்த அமர்வில் மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனரும், மன்னா பத்திரிகையின் பதிப்பாசிரியருமான அருட்பணியாளர் தமிழ் நேசன் அடிகளார் சிறப்புரையாற்றினார். *'விவிலிய மற்றும் இறையியல் கண்ணோட்டத்தில் செபம் பற்றிய சில புரிதல்கள்'* என்ற தலைப்பில் இவருடைய உரை அமைந்திருந்தது.

இரண்டாவது அமர்விற்கு உயிலங்குளம் பங்குத்தந்தை அருட்பணியாளர் எஸ். வசந்தகுமார் அவர்கள் தலைமை தாங்கினார். இந்த அமர்வில் இலுப்பைக்குளம் பங்குத்தந்தை அருட்பணியாளர் ஜெயபாலன் குரூஸ் அவர்கள் *'திருவிவிலியத்தில் செப அனுபவம்'* என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து மதிய உணவின் பின்னர் இடம்பெற்ற மூன்றாவது அமர்விற்கு மன்னார் மறைக்கல்வி நிலையத்தைச் சேர்ந்த திருவாளர் சவிரி தலைமை தாங்கினார். இந்த அமர்வில் மன்னார் ஞானோதயம் அமதிகள் இல்லத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் ஸ்ரனி அன்ரனி அவர்கள் *'திருச்சபை வாழ்வில் செப அனுபவம்'* என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

ஒவ்வொரு சிறப்புரையின் பின்னரும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. முருங்கன் பங்கு மாணவிகளின் நடன நிகழ்வும், பாடல்களும் இடம்பெற்றன.

பங்கேற்றவர்கள் சார்பாக இரண்டு ஆசிரியர்கள் கருத்தமர்வு பற்றிய தமது மதிப்பீடுகளை கருத்துரைகளாக வழங்கினர். இந்நிகழ்வை முன்னின்று ஒழுங்குசெய்த முருங்கன் பங்குத்தந்தை அருட்பணியாளர் ஸ்ரீபன் ராஜா அவர்களும் அவருக்கு உதவியாக இருந்து செயலாற்றிய முருங்கன் பங்கு கத்தோலிக்க ஆசிரியர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

## வவுனியாவில் நற்கருணைப் பெருவிழா

வவுனியா பூவரசன்குளம் புனித அன்னம்மாள் ஆலய நற்கருணைப் பெருவிழாவின்போது வவுனியா மறைக்கோட்ட முதல்வரும் வவுனியா பங்குத் தந்தையுமான அருட்பணி. செபமாலை தலைமையில் திருப்பலி இடம்பெறுவதையும், முதன்நன்மை பெற்ற சிறார்கள் அருட்தந்தையர், அருட்சகோதரிகளுடன் காணப்படுவதையும் படத்தில் காணலாம்.





## மன்னார் மறைமாவட்ட வழிபாட்டு ஆணைக்குழுக் கருத்தமர்வு

மன்னார் மறைமாவட்ட வழிபாட்டு ஆணைக்குழுவால் ஒழுங்குசெய்யப்பட்ட கருத்தமர்வு கடந்த ஒக்ரோபர் மாதம் 26ம், 27ம் திகதிகளில் மன்னார் குடும்பப் பணி நிலையத்தில் நடைபெற்றது. மடு தவிர்ந்த ஏனைய மூன்று மறைக்கோட்டங்களிலிருந்தும் ஒவ்வொரு பங்கு வழிபாட்டுக் குழுவினதும் பிரதிநிதிகளாக மூன்றுபேர் அழைக்கப்பட்டிருந்தார்கள். இதில் ஐந்து பங்குகள் தவிர்ந்த ஏனைய பங்குளிலிருந்து நாற்பது அங்கத்தினர் பங்குபற்றினர்.

ஆரம்ப நிகழ்வில் குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை, வழிபாட்டு ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. கிறிஸ்துநாயகம், அருட்பணி. ஏ. இராயப்பு, அருட்பணி. ஏ. டலிமா ஆகியோர் கலந்துகொண்டனர். அருட்பணி. கிறிஸ்துநாயகம் அடிகள் அனைவரையும் வரவேற்று கருத்தமர்வின் நோக்கம் பற்றி உரையாற்றினார். பின்பு குருமுதல்வரினால் சிறப்புரை [illegible]ற்றப்பட்டது.

அதைத் [illegible]டர்ந்து அருட்பணி. இராயப்பு அவர்களினால் [illegible]வது அமர்வு நெறிப்படுத்தப்பட்டது. இதில் வாசகநூல், வாசகத்தெரிவு, திருப்பலியில் வார்த்தை வழிபாட்டின் முக்கியத்துவம் என்பன பற்றி விரிவான விளக்கம் கொடுக்கப்பட்டது.

இரண்டாம் நாள் 27.10.2007 அன்று காலை அருட்பணி. ஏ. டலிமா அவர்களால் தியானமும், அதனைத் தொடர்ந்து அருட்பணி. அருள்ராஜ் அவர்களால் திருவழிபாட்டு ஆண்டில் நோக்கம் என்ன? என்பது பற்றிய விரிவான விளக்கங்களோடு உரையும் கொடுக்கப்பட்டது.

பின்பு, அருட்பணி. கிறிஸ்துநாயகம் அவர்கள் தமது உரையில் வழிபாட்டுக் குழுவின் பணிகள் பற்றியும், வழிபாட்டுக் குழுவின் தேவை பற்றியும் எடுத்துரைத்து, "இறைவனின் கொடையாக இறை அழைப்பிற்கு பதில் தரும் குழுவாக வழிபாட்டுக்குழு இருக்கின்றது" என்று வழிபாட்டுக் குழுவின் சிறப்பைப்பற்றிக் கூறினார்.

தொடர்ந்து ஒவ்வொரு பங்கிலிருந்தும் கடந்த காலச் செயற்பாடுகள் பற்றிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. இறுதியில் மறைமாவட்ட ஆணைக்குழுவிற்கான நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டு தொடர்ந்து புதிய வருட செயற்பாடுகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. அத்தோடு ஒவ்வொரு பங்கின் தொடர்பாளர்-[illegible] தெரிவுசெய்யப்பட்டனர்.

[illegible] வழிபாட்டுக் குழு [illegible] திருநாள் கொண்டாடுவது பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இறுதியில் பல சிரமங்கள் மத்தியில் கருத்தமர்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து இயக்குனரின் இறுதி ஆசீரோடு நிகழ்வு நிறைவுபெற்றது.

*திருமதி. ஜே. அஞ்சலா குரூஸ்*
*8ம் வட்டாரம், பேசாலை.*

## ஜே.ஆர்.எஸ். செய்திகள்

### வின்னி அடிகளாருக்கு சேவை நலன் பாராட்டு

இயேசு சபைக் குருவான அருட்தந்தை டன்ஸ்டன் வின்னி ஜோசப் அடிகளார் இந்திய மண்ணைப் பிறப்பிடமாகக்கொண்டு இலட்சியப் பிறப்பிடமாக இலங்கை மண்ணிலே பணிசெய்ய 01.04.2002 இல் இலங்கை மண்ணில் காலடி பதித்தார். இலங்கை இயேசு சபை அகதிப்பணிக்கு தேசிய இயக்குனராக பொறுப்பேற்ற இவர் ஆளுமையிலும், வழிநடத்தலிலும் சிறப்பான மனிதர்.

மட்டக்களப்பு, திருமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் தனது பணிகளை முன்னெடுத்த இவர், 2003ம் ஆண்டு தை மாதம் மன்னாரில் இயேசு சபை அகதிப்பணித் திட்டப்பணிகளை ஆரம்பித்தார். மேதகு ஆயர், அருட்தந்தையர்கள், அரச, அரசசார்பற்ற ஊழியர்கள் போன்ற அனைவருடனும் நல்லுறவை ஏற்படுத்தினார்.




அன்று முதல் இன்று வரை ஜே.ஆர்.எஸ்.இன் சிறப்புப் பணிகளுக்கு வழிகாட்டியான இவர் அன்பினாலும் பண்பினாலும் திறமையான பேச்சினாலும் மக்கள் மனதிலும், பணியாளர்கள் மனதிலும் அன்பின் இருப்பிடமாக உள்ளார். தனது 5 வருட கால இயக்குனர் பணியினை நிறைவாகச் செய்து காலத்தின் மாறுதலை ஏற்றுக்கொண்டு 10.10.2007 அன்று நிர்வாக ரீதியாக தனது இயக்குனர் பணியிலிருந்து விலகி புதிய இயக்குனரிடம் நிர்வாகத்தை ஒப்படைத்தார்.

## இலங்கை ஜே. ஆர். எஸ். நிறுவனத்திற்கு புதிய இயக்குனராக கமல் அன்றாடி அடிகளார்

இலங்கை இயேசு சபைக் குருவான அருட்தந்தை கமல் அன்றாடி அவர்கள் இலங்கை இயேசு சபை அகதிப்பணி (JRS) அமைப்பிற்கு புதிய தேசிய இயக்குனராக கடந்த 10.10.2007 அன்று பொறுப்பேற்றார். களுத்துறையைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் தமிழ் மக்கள்மீது மிகுந்த கரிசனையுடையவர். பணியினை திறம்படச் செய்யும் உத்வேகமுடையவர். இந்த இயக்குனர் தந்தையை மன்னார் ஜே. ஆர். எஸ். குடும்பம் சார்பாக வருக வருக என வரவேற்கின்றோம்.

முன்னாள் இயக்குனர் அருட்தந்தை வின்னி ஜோசப் அவர்கள் நிர்வாகத்தை ஒப்படைக்க புதிய இயக்குனர் அருட்தந்தை கமல் அன்றாடி அவர்கள் பொறுப்பேற்கும் வைபவ ரீதியான நிகழ்வானது கடந்த 10.10.2007 அன்று வவுனியா இறம்பைக்குளத்தில் ஜே.ஆர்.எஸ் தெற்காசிய இயக்குனர் அருட்தந்தை பி. எஸ். அமல்ராஜ் அவர்கள் முன்னிலையில் இடம்பெற்றது.

*சகோதரி றெஜினா, ஜே.ஆர்.எஸ். மன்னார்.*



## யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த ஜெயசீலன் அடிகளாரின் நூல் வெளியீடு

*"இலத்தீன் அமெரிக்கப் புனிதர்களும் புரட்சிகளும்"* என்னும் தலைப்பிலான கலாநிதி சுவாமி. ஜெ. இ. ஜெயசீலன் அடிகளாரின் நூல் வெளியீடு யாழ் பல்கலைக்கழக இளம் பொருளியலாளர் சங்க ஒழுங்கமைப்பில் பொருளியல் மண்டபத்தில் கடந்த 17.10.2007 அன்று இடம்பெற்றது.


எஸ். உமேஸ்குமாரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் ஆசியுரையை பேராசிரியர் எஸ். கிருஸ்ணராஜா அவர்களும் வெளியீட்டுரையை பேராசிரியர் வி.பி. சிவநாதனும், மதிப்பீட்டுரையை பேராசிரியர் வி. மணிவாசகர் அவர்களும் வழங்கினர்.

கலாநிதி சுவாமி ஜெ. இ. ஜெயசீலன் அடிகளாரின் பதிலுரையுடன் ***இலத்தீன் அமெரிக்க புனிதர்களும் புரட்சிகளும்*** என்ற இந்நூல் வெளியீடு நிறைவுபெற்றது.

ஜெயசீலன் அடிகளார் இதற்கு முன்னரும் பல நூல்களை எழுதி ஈழத்துக் கத்தோலிக்க சமூகத்திற்கு சிறப்பான பணியை ஆற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 3ம் ஆண்டு நினைவு

மலர்வு 06 - 07 - 1937



உதிர்வு 07 - 12 - 2004

### திரு. மரியராஜ் (சந்திரன்)

"நானே வானிநின்று இறங்கிவந்த உயிருள்ள உணவு. என்னை உண்பவன் இறப்பினும் வாழ்வான்"

அன்பின் அருட்கடலே, அருட்பெரும் மாணிக்கமே, ஆண்டுகள் மூன்று கடந்தாலும் நாம் உம்மை மறக்கவில்லை. இரக்கமில்லாக் காலனவன் இருளாக்கி சென்றனன் எம் வாழ்வை. ஈகையுள்ளம் கொண்ட உம்மை ஈரமின்றிக் கொண்டுசெல்ல கலங்கி நின்றோம் எந்தையே! ஒளி இழந்து நிற்கின்றோம்!

*இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மரியன்னை ஆலயத்தில் 07.12.2007 வெள்ளிக்கிழமை காலை 5.45க்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.*

*இவரின் பிரிவால் துயருறும்:*
*குடும்பத்தினர்.*

# இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

## துறவற வாழ்வில் வெள்ளி விழாக் காணும் அருட்சகோதரர் ஞா. மரியநாதன்



புனித பிரான்சிஸ்குவின் மறைபரப்புச் சகோதரர்களின் துறவற சபையைச் சேர்ந்த அருட்சகோதரர் ஞா. மரியநாதன் தமது துறவற வாழ்வின் வெள்ளி விழாவை அண்மையில் கொண்டாடினார்.

யாழ்ப்பாணம் பாஷையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தமது ஆரம்பக்கல்வியை கொழும்புத்துறை புனித வளனார் பாடசாலையிலும், உயர்கல்வியை அநுராதபுரம் புனித வளனார் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார்.

பிரான்சிஸ்கன் சபையில் சேருமுன்பு இந்தியாவில் ஐந்து வருடங்கள் இறைபணி ஆற்றியுள்ளார். 1979ம் ஆண்டில் பிரான்சிஸ்கன் துறவறசபையில் சேர்ந்து பயிற்சியை முடித்துக்கொண்டு, 1982ல் தமது முதல் அர்ப்பணத்தையும், 1988ல் நித்திய அர்ப்பணத்தையும், இந்தியாவில் உள்ள பிரான்சிஸ்கன் தலைமை அகத்தில் செய்துள்ளார். இறையியல் கல்வியிலும், திருவிவிலியக் கல்வியிலும் இரண்டிரண்டு (Double) டிப்ளோமாக்களையும் (Diplomas), உளவியல், முகாமைத்துவம், மறைக்கல்வி, ஆங்கிலம் ஆகியவற்றில் டிப்ளோமாக்களையும் பெற்றுள்ளார். இலங்கையில் உள்ள நான்கு மறைமாவட்டங்களில் ஆண்டவரின் திராட்சைத் தோட்டத்திலே ஆசிரியராக, மறைப்பணியாளராக, பத்திரிகை ஆசிரியராக பல துறைகளில் இயக்குனராக பணியாற்றி உள்ளார். மேலும் இவரது வாழ்வும் பணியும் ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்படும்படி வாழ்த்துகின்றோம்

*- பிரான்சிஸ்கன் அருட்சகோதரர்கள்.*

## அருட்பணியாளர் ஏ. பிலிப் அடிகளாரின் ‘இசையாலே திருச்செபமாலை’ – இறுவட்டு

அருட்தந்தை. ஏ. பிலிப் (I.V.D) அடிகளின் ‘இசையாலே திருச்செபமாலை’ இறுவட்டு வெளியீட்டு விழா அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

முதல் இறுவட்டை கொழும்பு மறைமாவட்டத்தின் தமிழ் அப்போஸ்தலிக்க குருமுதல்வர் ஒகஸ்டின் பெர்னாண்டோ அடிகளிடமிருந்து H.S.B.C. வங்கி தலைமை முகாமையாளர் திரு. இரட்ணராஜா பெற்றுக்கொண்டார்.

இவ்விழாவிற்கு வருகை தந்த கொழும்பு மறைமாவட்ட முன்னாள் பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை, மற்றும் அருட்தந்தையர், அருட்சகோதரர், பொதுமக்களையும் படத்தில் காணலாம்.



‘இசையாலே திருச்செபமாலை’ என்ற இறுவட்டை வெளியிட்டு செபமாலைப் பக்திக்கு வலுவூட்டியுள்ள பிலிப் அடிகளாரை மன்னா வாழ்த்தி மகிழ்கின்றது.

## மூவருக்கு முத்திப்பேறு பட்டம்!



திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பர் சமீபத்தில் மூன்று பேருக்கு முத்திப்பேறு பட்டம் வழங்கியுள்ளார். போலந்து நாட்டைச் சேர்ந்த அருட்தந்தை ஸ்தனிஸ்லாஸ் பாப்சிங்ஸ்கி, பிரான்சு நாட்டைச் சேர்ந்த அருட்சகோதரி மேரி செலீன், அருட்தந்தை பாசில் அன்டனி மரிய மௌரே ஆகிய மூவருமே முத்திப்பேறு பட்டம் பெற்றவர்களாவர்.

## மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் யூபிலி நாயகர்கள் கௌரவிப்பு

துறவற அர்ப்பணத்தில் பொன்விழாக்காணும் அன்புச் சகோதரர் சபையை சார்ந்த அருட்சகோதரர் அலோசியஸ், வைரவிழாக்காணும் கார்மேல் கன்னியர் சபையைச் சார்ந்த அருட்சகோதரி மேபிள், குருத்துவப் பணி வாழ்வில் வெள்ளி விழாக்காணும் அருட்தந்தை அம்புறோஸ் அடிகள் ஆகியோரை மட்டக்களப்பு புனித மரியாள் இணைப்பேராலய பங்குச் சமூகம் கௌரவித்து மகிழ்ந்தது.

நன்றித் திருப்பலியின்போது மறையுரையிலும், பாராட்டு உரைகளிலும் கிழக்கு மாகாணம் தந்த மூன்று துறவிகளினதும் வாழ்க்கைப் பயணத்தில் அவர்கள் சந்தித்த சுவையான, சவாலான, துன்பமான, வெற்றியான நிகழ்வுகள் உரையாளர்களால் மீட்டிப் பார்க்கப்பட்டது.

# அகதி வாழ்வுக்கூடாக ஒரு குருத்துவமலர்

## பேசாலை மண்ணின் மகன் பிரான்ஸ் நாட்டில் குருவானார்!

தகவல் : திரு. எம். அன்ரன் குலாஸ்
எழுத்துரு : திரு. ச. மாட்டீன் டயஸ்
பேசாலை

*“நான் ஏழு கடல்களுக்கு அப்பால் சென்று ஒளிந்திருந்தாலும் அங்கேயும் உமது வலுவான கரம் என்னை வழி - நடத்துகின்றது”*

இது இறைபராமரிப்பைப் பற்றிச் சொல்லப்பட்ட வார்த்தைகள். இறைபராமரிப்பைப் பற்றிச் சொல்லப்பட்ட எத்தனையோ எண்ணங்கள் விவிலியம் முழுவதும் விரவிக் கிடக்கின்றன.

பிரான்ஸ் நாட்டில் எமது மண்ணின் மைந்தனுக்கு அரங்கேறிய குருத்துவத் திருநிலைப்படுத்தல் இதற்குச் சான்றாக அமைகின்றது.

அகதி வாழ்வு அவலங்கள் நிறைந்து வழியும் கிண்ணங்கள் போன்றது. மாளிகைகளில் செல்வச் செழிப்போடு வாழ்ந்தவர்களை தகரத்தினாலும் தார்சீற்றினாலும் ஆன தற்காலிக கொட்டகைகளின் தஞ்சம் அடையச் செய்திருக்கின்றது. செல்வச் செழிப்போடும் பெருமைகளோடும் வாழ்ந்தவர்களை கியூ வரிசைகளில் நின்று கொடுப்பனவுகளுக்கும், நிவாரணங்களுக்கும் உணவுப் பொதிகளுக்கும், கையேந்த வைத்திருக்கின்றது.

இந்த வாழ்வுக்கூடாகவும் ஒரு குருத்துவ மலர் மலர்ந்து தெய்வ மணம் கமழ்கின்றது. அதுவும் பிரான்ஸ் நாட்டில்.

புகழ்பூத்த பிரான்ஸ் நாட்டில் - ஸ்ராஸ்பேர்க் (Stassabousg) நகரின் அன்னை மரியாள் பேராலயத்தில் (Church of Our Lady of Stsassboussg) கடந்த 10.06.2007ல் அந்நகர ஆயர் மொன்சிஞ்ஞோர் ஜீன் பைரே கிறாலெட் (MGR . Jean Pirre Grallet) அவர்கள் ஏழு பேரைக் குருக்களாகத் திருநிலைப்படுத்தி அருட்பொழிவு செய்துள்ளார். அவர்களில் ஒருவர் நமது மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த பேசாலையின் மகன் பீற்றர் யூட் குலாஸ் என்பவராவார்.

இரட்சகரின் சபைக்குருவாக (Redemterist Priest - C.S.S.R) திருநிலைப்படுத்தப்பட்ட இவரோடு போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த ஒருவரும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள் ஐவருமாக மொத்தம் ஏழு பேரைத் திருநிலைப்படுத்தி மகிழ்ந்து அப்பேராலயம் பெருமைகொண்டது.

இவர்களைத் திருநிலைப்படுத்திய பேராயர் நமது அருட்திரு. யூட் குலாசைப் பற்றி இவ்வாறு கூறினார்:

“36 அகவையை அடைந்த யூட் குலாஸ் 1991ம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டில் அகதியாக அடைக்கலம் புகுந்து 16 வருட வாழ்வில் பேர்ஜோ கார் கொம்பனியிலும் (Peugeot Company) முல்லுஸ் (Mulhouse) நகரின் வாசிகசாலையில் பதிவாளராகவும் பணியாற்றி உள்ளார். பிறப்பின்போது இறந்துவிட்டார் என ஒதுக்கப்பட்ட இவர், அன்னை வேளாங்கன்னி ஆரோக்கிய மாதா அருளால் அற்புதமாக உயிர்பெற்றார். இது அவரது சுயவிபரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்போது இவர் ற்றோயிஸ் எப்பிக்ஸ் என்னும் (Trois Epics) குருமடத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்”.

இவ்வித புனித நிலைக்கு இவர் தாண்டி வந்த பயணம் பல சவால்கள் நிறைந்தது. 1971ம் ஆண்டு மார்ச் திங்கள் 09ம் நாள் திரு. அந்தோனி பீற்றர் குலாஸ் அவர்களுக்கும் அலோசியஸ் ஜேவதி பல்டானோ அவர்களுக்கும் ஐந்தாவது குழந்தையாகப் பிறந்து - இறந்து பிழைத்த இவர், தனது ஆரம்பக் கல்வியை மன்/ பத்திமா மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்தார். 1985ம் ஆண்டில் இடம்பெற்ற இடம்பெயர்வின்போது இந்தியாவுக்குப் படகு மூலம் அகதியாகத் தனது குடும்பத்தோடு இடம்பெயர்ந்த இவர், 1987ல் இலங்கைக்கு மீண்டு, தனது இடைநிலைக் கல்வியைப் பூர்த்திசெய்து, 1986ல் (அதே பாடசாலையில்) க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் (G.C.E. O/L) சித்தியடைந்தார்.

மீண்டும் ஒரு இடப்பெயர்வு 1990ல் இடம் பெற்றபோது மீண்டும் அகதிகளாக இவர் குடும்பம் தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்தது. 1991ல் அரசியல் அடைக்கலம் தேடி பிரான்ஸ் நாட்டிற்கு சென்ற போது இறைத்துணை அவரோடிருந்து வழிநடத்தியதால் அதிக சிரமங்களை இவர் எதிர்கொள்ளவில்லை.

பிரான்ஸ் நாட்டில் அவரது கன்னி முயற்சியாக இருந்தவை பிரஞ்சு மொழியைக் கற்பதும் லிகிதர் பணிக்கான கல்வியில் தேர்ச்சி பெறுவதுமே ஆகும். இந்நாட்களில் சமாந்திரமாக மக்டொனால்ஸ் விரைவுணவுச் சாலையிலும் பேர்ஜோ கார் கொம்பனியிலும் பணியாற்றி - யுள்ளார்.

இவர் ஆரம்பக்கல்வியை மன்/பத்திமா மத்திய மகா வித்தியாலயத்தில் கற்ற காலங்களில் பேசாலையில் பங்குத் தந்தையர்களாக இருந்த அருட்தந்தை பி. பி. பிலிப் அடிகளார், அருட்தந்தை ஜே.பி. தேவராஜா அடிகளார் ஆகியோரால் விதையிடப்பட்டு நீரூட்டப்பட்ட குருத்துவ வித்து முளையரும்பத் தொடங்கியது. இதுவும் இறையருளே.

குருத்துவத்துக்கான ஆரம்பக்கல்வியை ஆரம்பிக்க விரும்பிய இவருக்குப் பெரு ஏமாற்றமே காத்திருந்தது. இவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. பிரஞ்சு மொழியிலும் ஆங்கில மொழியிலும் தகைமைக் குறைவு இருந்தது அதற்குக் காரணமாகும்.

இதை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்ட யூட் குலாஸ் பிரஞ்சு மொழியில் தேர்ச்சிபெற 1992ல் ஏப்பிரல் மாதத்தில் முல்லுஸ் நகரத்துப் பல்கலைக் கழகத்தில் இணைந்து பகுதிநேரக் கற்கைநெறியை மேற்கொண்ட அதேவேளை அப்பல்கலைக்கழக வாசிகசாலையில் பதிவாளராகவும் பணியேற்றார்.

ஆங்கிலத்திலும் பிரஞ்சு மொழியிலும் தனது ஆற்றலை நிரூபிப்பதன் மூலம்தான் இறைவன் தருகின்ற அழைப்பையேற்று இலக்கை அடைய முடியும் எனத் துணிந்த இவர் அடுத்த மாதமே (May –1992) ரஸ்பேர்க் நகரப் பல்கலைக்கழகத்தில் முழுநேரக் கல்வியாக பிரஞ்சு மொழியையும் ஆங்கிலத்தையும் கற்கத் தொடங்கினார்.

1999ம் ஆண்டு செப்ரெம்பரில் தனது குருத்துவத்துக்கான முதுநிலைக் கல்வியைப் பெற பிரான்ஸ் நாட்டின் ரொயிஸ் எப்பிஸ் குருமடத்தில் இணைந்தார். 2000ம் ஆண்டு யூலைத் திங்களில் மீண்டும் ஸ்ரஸ்பேர்க் பல்கலைக் கழகத்திலிணைந்து குருத்துவத்தின் ஏனைய கற்கை நெறிகளை பிரஞ்சு மொழியில் மேற்கொண்டார்.

இங்கு கல்வி நிறைவு பெற்றதும் ஐக்கிய அமெரிக்க இராச்சியம் (USA) செல்ல வாய்ப்புக் கிடைத்தது. உல்லாச வாழ்விற்காக அல்ல உபவாச வாழ்விற்காக. 2000ம் ஆண்டு ஜுலை முதல் 2001ம் ஆண்டு ஜுலை வரை தபசு வாழ்வு. சிக்காக்கோ நகரம் அமெரிக்காவின் வர்த்தக நிலையமும் சனச்செறிவும் உல்லாச வாழ்வும் நிறைந்த நகரம். இங்குள்ள கிளன்வியூ நிலையத்தில் ஆன்மீகத்தில் உறுதியும் பயிற்சியும் பெற்றார். பின்னர் மீண்டும் பிரான்சுக்கு சென்று மீண்டும் பராடோ குருமடத்தில் இருந்து லியோன் பல்கலைக்கழகத்தில் தனது ஆன்மீகக் கல்வியை 2005 வரை 4 வருடங்கள் கற்று குருத்துவக் கல்வியை நிறைவுசெய்தார்.

2005 செப்டெம்பர் முதல் 2006 செப்டெம்பர் வரை ஒரு வருட பங்குப்பணிவாழ்வு அனுபவத்தைப் பெற்றார். அந்நாட்களில் ரோய்ஸ் எப்பிஸ் குருமடத்தில் வாழ்ந்தார்.

2006ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26இல் இவர் வாழ்வின் கனவுகள் கனியாவதற்கு அனுமதி கிடைத்த நாள். தேவபராமரிப்பையும் அருளையும் வழிநடத்தலையும் நுனிநாவாற் சுவைத்துப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்த நாள்.

புனித மரியாள் சிற்றாலயத்தில் இவர் இரட்சகரின் சபைக்கு குரு முதனிலைப் பணியாளனாக தென் அமெரிக்க கண்டத்தின் பொலிவியா தேசத்தின் சாந்தா குரூஸ் நகரின் பேராயர் மேன்மைமிகு கர்தினால் யூலியோ ரெறாசஸ் அவர்களினால் அருட்பொழிவு செய்துவைக்கப்பட்டார்.

2007ம் ஆண்டு யூன் திங்கள் 10ம் நாள் தனது வாழ்வின் இலட்சியத்தை - இலக்கை அடைந்து பூரித்த நாள். கிறிஸ்துவின் பணி வாழ்வைத் தொடர அவரின் கரங்களை இறுக்கமாகப் பற்றிக்



கொண்ட நாள். அகதி வாழ்வுச் சூறாவளியில் சிக்குண்டு அலைக்கழிக்கப்பட்டவர். மேலைத் தேசம் உல்லாச வாழ்வுக்குப் பேர் போனது. இவற்றை எல்லாம் தாண்டி குருத்துவ அருட்பொழிவைப் பெற்றுக்கொண்டார். இறை மகனின் திராட்சைத் தோட்டப் பணியாளனாக திருப்பணியாளர் திருக்கூட்டத்தோடு கரம் கோர்த்துக்கொண்டார்.

தனது முதலாவது திருப்பலியை இவர் முல்லூஸ் நகரில் உள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தில் 24.06.2007ல் ஆடம்பரம் அதிகமில்லாது தனது உறவினர்கள் சிலர் நண்பர்கள் சிலருடன் 200 பேருக்கு அதிகமில்லாதவர்கள் கூடியிருக்க நிறைவேற்றினார்.

திருநிலைப்படுத்தல் நிறைவுபெற்று முதலாவது திருப்பலியையும் நிறைவேற்றி மகிழ்ந்த இவருக்கு முதலில் கிடைத்த பணியும் சந்தர்ப்பமும் ஐரோப்பாக் கண்டத்தின் வட கடலில் அமைந்துள்ள அயர்லாந்து நாட்டில் மூன்று வாரங்களுக்கு நடைபெறும் இளைஞர் விழாவில் (Youth Festival) யூலை மாதத்தில் பங்குகொள்வதாகும்.

இவர் பிரான்ஸ் நாட்டின் கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள செயுகாமினே (Swugermeine) நகரத்தில் பங்குத்தந்தையாகப் பணி அமர்ந்துள்ளார்.

இவரின் பணிவாழ்வு சிறக்க – ஆன்ம – சரீர நலன் பெருக இவரை மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்தி மகிழ்கின்றது. கடல் கடந்த நாடுகளிலும் இவரைப்போன்ற நம் பணியாளர்கள் சேவை தொடர இறைவனை வேண்டி துயரங்கள் ஊடாகவும் துலங்கும் இறை பராமரிப்புக்கு நன்றி மலர்களைத் தூவுவோம்●

# சிறுவர் பொழில்





## கடவுள் எங்கும் இருக்கிறார்

**அ. டிலைக்ஷன்**
**பிச்சகுளம், முருங்கன்.**

சுந்தரம் என்று ஓர் ஏழை விவசாயி இருந்தார். அவருக்கு ஒரே மகன் சுரேன். சுரேனுக்குத் தினமும் இரவில் கதை கூறி தூங்கவைப்பது சுந்தரத்தின் வழக்கம். சுந்தரம் மகனுக்கு புராணக்கதைகள், மந்திரக் கதைகள் என ஏதாவது கூறுவார். சுரேனோ கதைகளை மிக ஆர்வத்துடன் கேட்பான். நாட்கள் நகர்ந்தன. பருவமழை சரியாகப் பெய்யாததால் அந்தக் கிராமத்தில் வரட்சி நிலவியது. தண்ணீர் இல்லாமல் சிலரது வயல்கள் வாடின. ஆனால் ஒரு சிலரது வயல்களில் மட்டும் நல்ல விளைச்சல் காணப்பட்டது.

சுந்தரத்தின் வயலோ வரண்டு கிடந்தது. இதனால் சுந்தரத்துக்கு பணத்தட்டுப்பாடு. அவரது வீட்டுக்குப் பக்கத்து வயலில் நெல் நன்கு விளைந்திருந்தது. அவ்வயலை காவல் காப்பதற்கென்று எவரும் இருக்கவில்லை. "அங்கு சென்று கொஞ்சம் நெல்லை அறுத்து வந்தால் யாருக்குத் தெரியப்போகிறது?" என நினைத்து அன்றிரவு சுந்தரம் தன் மகன் சுரேனை அழைத்தார். "சுரேன் நான் வயலில் இறங்கி கதிரை அறுக்கிறேன். நீ வரம்பில் நின்று யாராவது வருகிறார்களா? என்று பார்த்துச் சொல்" என்று கூறி சுந்தரம் கதிர்களை அறுக்க ஆரம்பித்தார். திடீரென சுரேன் "அப்பா... அப்பா..." என்று கத்தினான். நிமிர்ந்து பார்த்த சுந்தரம் "ஏன் யாராவது பார்த்துக்கொண்டிருக்கிறார்களா?" என்று கேட்டார். "ஓமப்பா" என்றான் சுரேன். உடனே அறுப்பதை அப்படியே விட்டு விட்டு மேலே ஓடிவந்து பார்த்தார். அங்கு யாரையும் காணவில்லை. "எங்கேடா யாரையும் காணவில்லையே" என்றார் அவர். "அப்பா நீங்கள்தானே எனக்குக் கதைகள் சொல்லும் போது, "கடவுள் எல்லா இடத்திலையும் இருக்கிறார் என்று சொன்னீங்க. அப்போ இங்கும் கடவுள் இருக்கிறார் என்றுதானே அர்த்தம். அப்படி என்றால் நீங்கள் செய்வதை அவர் பார்த்துக் கொண்டிருக்கிறார்தானே" என்றான் சுரேன். மகனின் பேச்சைக் கேட்டு தலைகுனிந்தார் தந்தை. மாபெரும் தவறு செய்ய இருந்தோமே என்று எண்ணி திருடும் எண்ணத்தை விட்டு விட்டு மகன் சுரேனுடன் வீட்டுக்குத் திரும்பினார் தந்தை சுந்தரம்.



*எனவே இறைவனின் பிள்ளைகளாக வாழ அழைக்கப்பட்ட நாமும் நாம் செய்யும் ஒவ்வொரு செயலின்போதும் இறைவனின் பிரசன்னத்தை உணர்ந்தவர்களாக வாழ முயற்சிப்போம்.* ●

## சிந்தித்து செயற்படுவோம்...!



1) புன்னகை கடுமையான செயல்களைக்கூட மென்மையாக்கும்.
2) அன்பு தானாக வருவது. அதை யாரும் விலைக்கு வாங்க முடியாது.
3) அதிகம் சினம் கொள்ளாதே. அது உன் வாழ்க்கைப் பயணத்தை மாற்றிவிடும்.
4) எப்போதும் புன்னகை செய். அதுவே உன் முதல் வெற்றிப்படி.
5) உன்னிடம் கேட்டு வருபவர்களிடம் இல்லை என்று சொல்லாதே. ஒரு நாள் நீயும் கேட்டு செல்லவேண்டி ஏற்படும்.
6) எவர் வீடாயினும் அடிக்கடி செல்லாதே. அது உன் கௌரவத்தை குறைத்துவிடும்.

*தர்சினி தற்குரூஸ்*
*தரவன்கோட்டை, மன்னார்.*

## சிலநொடி சிந்தித்துப்பார்!

1) ஒருவர் பேசியது நம்மைப் புண்படுத்துவதில்லை. நாம் எடுத்துக் கொள்ளும் விதம்தான் புண்படுத்துகின்றது.
2) எல்லோரும் சொர்க்கத்துக்குப்போக விரும்புகின்றார்கள். ஆனால் யாரும் இறப்பதற்கு விரும்புவதில்லை.
3) நீங்கள் எதிரிக்காக நெருப்பை எரித்தால் அது உங்களையே எரிக்கும்.
4) நல்ல சங்கீதத்தை இரசியுங்கள். வாழ்க்கையின் சந்தோஷமான பக்கத்தைப் பாருங்கள்.

*ஞா. கிறிஷாந்த குயின்சி*
*சாளம்பன், ஆட்காட்டிவெளி.*

## வாசித்து, யோசித்து, செயற்படுத்துவோம்



1. இறைவன் தந்த உலகைப் பாதுகாப்பது மனிதர் ஒவ்வொருவரின் கடமையாகும்.
2. துடிதுடிக்கும் நேரத்திலும் திடுக்கென எழுபவள் நம் தாய்.
3. எதை இழந்தாலும் நம்பிக்கையை இழந்துவிடக்கூடாது.
4. தூய ஆவியின் அருளை என்றென்றும் நம்பிடு.
5. உயிர்ப்பும் உயிரும் நம் கடவுளிடமிருந்து வருகிறது.
6. நீ நம்பிக்கையில் நிலைத்திருக்கின்றாயா? என்று உன்னையே நீ சோதித்துப் பார்.
7. யேசுவின் உயிர்ப்பில்தான் கிறிஸ்தவம் பிறக்கிறது.
8. சாதி, மத பேதம் என்பவற்றைக் கடந்து வருவதுதான் நட்பு.
9. அன்பென்னும் கோவிலில் நட்பென்னும் சிறகை விரி.
10. இயேசு ஆரம்பித்த புதிய வாழ்வில் நாம் எப்போதும் நடந்திடுவோம்.

*செ. பெனனி, தரம் : 09*
*வேதசாட்சிகள் கோவிலடி, தோட்டவெளி, மன்னார்.*

# கவிதைப் பூக்கள்

## தாய்



ஈரைந்து மாதங்களாய் உன் வயிற்றினில் சுமந்தாய்
இற்றைவரைக்கும் உன் உள்ளத்தில் சுமக்கின்றாய்.
என்னைத் துன்பம் சூழ்கையில்
உன் தூக்கத்தைத் தொலைத்தாய்
ஏன் உண்ணும் உணவைக்கூட துறந்தாய்.

நான் சிரிக்கும்போது சேர்ந்து சிரித்தாய்.
அழும்போது உடன் அழுதாய்.
நீ செய்யும் இம்மகத்தான பணிக்கு
என்ன செய்தாலும்
என் கடன் தீராது தாயே.

*அ. ருஷாந்தினி, பொன்தீவுகண்டல்*
*அளவக்கை.*

## சமாதானமே எப்போ நீ வருவாய்?

சமாதான உலகினையே சமைக்க விழையும் கரங்கள்
அமைதி ஒன்றினையே அவசரமாய் நாடும் மனங்கள்

எத்தனை ஆண்டுகளாய் நாம் எம் மண்ணில்
அடிமைகளாய் வாழ்கின்றோம் - இம்மண்ணில்
எத்தனை உயிர்களைப் பலிகொடுத்துள்ளோம்.
எங்கே ஓடி மறைந்தது இந்தச் சமாதானம்?

மனிதம் மரிக்காத மானிடராய் வாழ்ந்திட
மங்காத புகழ்தரும் வாழ்வினை அமைத்திட
எம் உறவுகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்திட
எம் தாயகத்திற்கு எப்போது கிடைத்திடும் சமாதானம்?

*அ. சிமில்டா (றோகினி)*
*பொன்தீவுகண்டல், அளவக்கை, முருங்கன்.*

## நட்பு



தாய்க்கு சேயில் அன்பு
பெண்ணுக்கு கற்பில் அன்பு
நண்பர்களுக்கு நட்பில் அன்பு

தாயின் அன்பு பாசத்தில் தெரியும்
தந்தையின் அன்பு வளர்ப்பினில் தெரியும்
தாரத்தின் அன்பு துன்பத்தில் தெரியும்
நல்ல நண்பனின் அன்பு உன் போன்ற
சில நடிப்பற்ற உள்ளங்களில் மட்டுமே தெரியும்...


*எஸ். ஆன் மிதுஷா*
*சின்னக்கடை, மன்னார்*

## ஒற்றுமையே பலம்

உலகில் வாழும் மனிதர் நாம்
ஒற்றுமையாக இருந்திடுவோம்.
கலகம் எமக்குள் தோன்றாமல்
கனிவாய் நாமும் வாழ்ந்திடுவோம்.
நாடும் வீடும் சீரளியாமல்
தலைக்கனம் இன்றி வாழ்ந்திடுவோம்
தாழ்ச்சியோடு பணி செய்வோம்.
தகமையோடு சிறந்திடுவோம்.

*ச. கிஷாலினி, தரம் 8,*
*வவுனியா/ இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம்.*

## மெல்லச் சிரிங்க... மெல்லச் சிரிங்க..



ஆசிரியர் :- 'தயாபரன் மரத்தில் இருந்து விழுந்தான்' இது என்ன காலம்?
மாணவன் :- அவன் கஸ்ரகாலம்

*கீத்தா, 151 முதலியார்குளம், செட்டிகுளம்.*

* * * * *

சிறுவன் :- நற்காரியங்களில் ஏன் வாசலுக்கு முன் வாழை மரம் கட்டுகிறார்கள்?
அறிவாளி :- கீழே விழாமல் இருப்பதற்கு.

*செ. அலைக்சாண்டர் 68, முதலியார்குளம், செட்டிகுளம்.*

* * * * *



முட்டைக் கபீர் என்ற ஒருவரும் குப்புசாமி என்ற ஒருவரும் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது குப்புசாமி, "நான் எனது மனைவிக்கு தையல் மெசின் வாங்கிக் கொடுத்தது நல்லதாகி விட்டது" என்றார். அதைக்கேட்ட முட்டைக் கபீர், "ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?" என்றார். "கிழிந்த தோசையையும் அவள் தைத்து விடுகிறாள்" என்றார் குப்புசாமி!

செ. யூட் கொஸ்ரன் (றெனி), மடுக்கோவில், மடு

* * * * *

ஒருவர் :- என்னைய்யா இது? ஸ்பெஷல் சாப்பாடு என்று சொன்னாய். அதிலேயும் இந்தக் கல்தான் கிடக்குது?
மற்றவர் :- அதுக்காக வைரக்கல்லா போடமுடியும்...?

*அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்*

அப்பா :- மகன், கோபுரத்து உச்சியில என்னடா செய்யிறாய்?
மகன் :- நீங்கதானே அப்பா சொன்னிங்க நம்மட பெயர் உயரத்தில இருக்கணுமென்று. அதுதான் எழுதுறன்.

*வி. டனிஸ்டன், இலுப்பைக்குளம், நேரியகுளம்.*

* * * * *



நண்பன் 1 :- தரகர்கிட்ட குடும்பப் பெண்ணைப் பாருங்க என்று சொன்னது தப்பாப்-போச்சு.
நண்பன் 2 :- ஏன் என்னாச்சு?
நண்பன் 1:- குடும்பம் நடத்திக்கொண்டு இருந்த ஒரு பெண்ணைக் கூட்டிக்கொண்டு வந்திட்டார்.


*ம.தர்மிகா,*
*பெரிய பண்டிவிரிச்சான், மடுக்கோவில்.*

* * * * *

டாக்டர் :- உங்க மனைவிக்கு இரும்புச் சத்து டொனிக் கொடுத்தேன். இப்போ எப்படி?
ஒருவர் :- துருப்பிடித்துப் போய்விட்டது டாக்டர்.

*அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்*

## துளிப்பா



**கல்வி**
தொடரும் பாதையில்
விளையும் பயன்கள்.

**திருவிவிலியம்**
கிறிஸ்தவர்களின் பசி தீர்க்கும்
ஆன்மீக உணவு.

**பேனா**
உள்ளத்தில் எழும் உணர்வுகளை
உதிரத்தால் உறைய விடுவது.

**திருமுழுக்கு**
கிறிஸ்தவர்களைப் புனிதப்படுத்தும்
புனித நீர்.

**மெழுகுதிரி**
தன்னைத்தானே உருக்கி
பிறருக்கு ஒளியைக் கொடுப்பது.

**இல்லம்**
அனைவருக்கும் தேவையான
ஓர் சரணாலயம்.

*ஏ. பத்திநாதன் வதனா.*
*நீக்கிலார் ஆலயம்*
*வாழ்க்கைப்பெற்றான் கண்டல்,*
*முருங்கன்.*

# உலகத் திருச்சபை செய்திகள்

## புனித பவுலுக்காக விசேட ஆண்டு ஒன்றினை திருத்தந்தை அறிவித்தார்

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் புனித பவுலுக்காக ஒரு யூபிலி ஆண்டினை அறிவிக்க முடிவுசெய்துள்ளார். இன்று திருஅவைக்கு அப்புனிதரின் வழிமுறையில் செல்ல வலுவும், நற்செய்தி அறிவிக்கும் ஆற்றலும், தியாக உணர்வும் தேவைப்படுகின்றது என்று அவர் குறிப்பிட்டார்.

திருத்தந்தையின் எண்ணப்படி அந்த யூபிலியாண்டு 2008 யூன் தொடக்கம் 2009 யூன் வரை விரிந்து அப்புனிதரின் 2000ஆம் பிறப்பு விழாவினை உள்ளடக்கி இருக்கும். உரோமன் மதில்களுக்கு வெளியேயுள்ள புனித பவுல் பேராலயத்தில், மாலை வழிபாட்டினை முடித்துக்கொண்டு, யூன் 28,2007இல் திருத்தந்தை இத்தகவலை வெளியிட்டார். யூன் 28 புனித பேதுரு பாவிலுவின் திருநாள் முன் மாலை வேளையில் அவர் இதனை அறிவித்தார். புனித பேதுருவும் புனித பவுலும் உரோமின் பாதுகாவலர்கள் ஆவர். திருத்தந்தையின் அறிவித்தலின்படி விழா ஆண்டு பல சிறப்பு வழிபாடுகளைக் கொண்டிருக்கும். பல நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கும். ஆயினும் அவைகள் உள்ளூர் வழிபாட்டு நிலையங்களிலும், ஆலயங்களிலும் கொண்டாடப்பட வேண்டும். பவுலோடு தொடர்புடைய ஆலயங்களும் வழிபாட்டு நிலையங்களும் சிறப்பு நிகழ்ச்சிகளைக் கொண்டு அமைய வேண்டும்.

சிறப்பான முறையில் பவுல் ஆண்டு, கிறிஸ்தவ சபைகளுக்கிடையேயான ஒன்றிப்பு ஆண்டாக அமைய வேண்டும். எல்லாக் கிறிஸ்தவர்கள் மத்தியிலும் ஒற்றுமையும், ஈடுபாடும் ஏற்படப் பவுல் உழைத்தமையை திருத்தந்தை நினைவூட்டினார்.

அவ்விழா ஆண்டு பவுலின் எழுத்துக்களை ஒருங்கிணைக்கும் வெளியீடுகளும், அவரது எழுத்துக்களின் பிரசுரங்களும் சேர்ந்து அமைய வேண்டும். அவரது திருமுகங்கள் ஆரம்பகாலத் திருஅவை வரலாற்றை விளக்கும் சான்றுகளாக அமைந்து, இத்தனை நூற்றாண்டுகளும் திருஅவைப் போக்கினை வளப்படுத்தியுள்ளன.



## திருத்தந்தை வெண்கலத் தூணை அன்பளிப்பு செய்தார்

திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்களின் 80வது பிறந்த நாளை முன்னிட்டு நான்கு மீற்றர்கள் நீளமுள்ள ஒரு வெண்கலத் தூண் பவாரியன் நகரங்களின் மக்கள் அடங்கிய குழுவால் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது.

இந்த வெண்கலத் தூணை தான் பணியாற்றிய துணை நகர மறைமாவட்டமான வெளிட்டரி மறைமாவட்டத்திற்கு அளித்துள்ளார். உரோமையின் தென்கிழக்கு பகுதியில் அமைந்துள்ள வெளிட்ரிக்கு பயணம் மேற்கொண்டார் திருத்தந்தை. உரோமையின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்த ஏழு மறைமாவட்டங்களில் இதுவும் ஒன்று. அங்கு சென்று வெண்கலத் தூணைப் பரிசாக அளித்தார். இந்த வெண்கலத் தூணில் திருத்தந்தையின் வாழ்க்கை நிகழ்வுகள் படமாக வரையப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்தத் தூண் புனித கிளமெண்ட் பேராலயத்தில் வைக்கப்படும். திருத்தந்தையின் வருகை நாங்கள் ஆயனின் மந்தைகள் என்பதை மீண்டும் நினைவுபடுத்துவதாக அமைந்துள்ளது என்று வெளிட்டரி துணை நகர ஆயர் வின்சென்சோ அப்பிசெலா தெரிவித்துள்ளார்.

## சீன ஆயர்களுக்கு வத்திக்கான் அனுமதி வழங்கியுள்ளது!

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் பீஜிங், கியூயாங் என்ற இரண்டு மறை மாநிலங்களுக்கு இரண்டு பேராயர்களுக்கு ஆயர் பட்டம் பெற அனுமதி அளித்துள்ளார்.

சீனா நாட்டில் ஒருசில ஆயர்கள் திருத்தந்தையின் ஆளுகையை, திருத்தந்தையோடு உள்ள ஐக்கிய நிலையை ஏற்றுக்கொள்ள மறுக்கும் நிலை இருக்கிறது. இந்நிலையில் அருட்தந்தை கியூசேப்பே ஷான் பீஜிங் மறைமாநிலப் பேராயராகவும், அருட்தந்தை பாலோ சியாவோ் கியூயாங் மறைமாவட்ட வாரிசு ஆயராகவும் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. *லொசர் வார்த்தோ ரொமானோ* என்ற வத்திக்கானின் ஆங்கிலப் பத்திரிகையும் சீனா நாட்டின் தினசரி பத்திரிகையும் இந்த இரண்டு ஆயர்களும் திருத்தந்தையோடு ஐக்கியமான உறவுநிலையில் உள்ளார்கள் என்பதை உறுதிசெய்துள்ளன. திருத்தந்தை தூய பேதுருவின் வாரிசு என்பதையும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளன. சீனா நாட்டு கத்தோலிக்க மக்களும், அதிகாரிகளும் கஷ்டங்களை வென்று தெளிவான, பயனுள்ள புரிதலை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற திருத்தந்தையின் வேண்டுகோள் நிறைவேற அகில உலகமெங்கும் செபிக்குமாறு சீனா நாளேடு தெரிவித்துள்ளது.

## திருத்தந்தையின் லூர்து பயணம் உறுதியாகியது



2008ஆம் ஆண்டு திருத்தந்தை லூர்துபதிக்குச் செல்ல இருக்கின்றார். அவர் லூர்து என்னும் அக்கிராமத்துக்கு மரியாள் 1858இல் காட்சி கொடுத்த 150அம் ஆண்டு நிறைவு விழாவுக்கு செல்ல இருக்கிறார். இயேசு சபைப் பணியாளர் வெடெறிகோ லெம்பார்டி, வத்திக்கானின் தலைமை இயக்குநர், யூலை 15இல் அவரது வருகை நடைபெறும் எனத் தெரிவித்தார். வத்திக்கான் பேச்சாளர் திருத்தந்தை எப்போது லூர்துபதி வருவார் என்பதனை முன்பு தெளிவாக அறிந்திருக்கவில்லை. ஏனெனில் லூர்துபதி அமைந்துள்ள மறைமாவட்ட ஆயர் ஜாக்ஸ் பெறியர் உரோமை வந்து திரும்பியதன் பின்பு இப்பயணம் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. 150 ஆம் ஆண்டு நிறைவு விழா இவ்வருடம் டிசம்பர் 8 தொடக்கம் 2008 டிசம்பர் வரை நடைபெறும்.

## ஆபிரிக்க ஆயர்கள் 2009இல் ஒன்றுகூடுகின்றனர்

ஆபிரிக்க ஆயர்களின் ஒன்றுகூடல் வத்திக்கானில் ஒக்டோபர் 2009ல் நடைபெறும் என திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அறிவித்துள்ளார். வத்திக்கான் ஊடகவியல் ஒன்றியம் விடுத்த செய்தியின்படி இவ்வொன்றுகூடலின் கருப்பொருளாக *பரிகார முயற்சிச் சேவையில் ஆபிரிக்க திருஅவை, நீதியும் அமைதியும், நீங்களே உலகின் உப்பாக உள்ளீர்கள்... நீங்களே உலகின் ஒளி* என்பவை அமையவுள்ளன. 1994ல் முதலாம் ஆபிரிக்க ஆயர்கள் ஒன்றுகூடல் உரோமில் நடந்தது. அதற்கான அடிப்படை 2ஆம் யோவான் பவுல் திருத்தந்தையின் "ஆபிரிக்காவின் மறைநிலை" தொடர்பான அறிவிப்பாக அமைந்தது. 2004இல் யோவான் பவுல் திருத்தந்தை இரண்டாம் ஆபிரிக்க ஆயர்கள் ஒன்றுகூடலுக்கான முடிவினை அறிவித்திருந்தார். அதனைப் புதிய சவால்கள், ஒப்பிடமுடியாத அளவில் வளர்ந்துள்ள ஆபிரிக்க திருஅவை என்பவை தூண்டின. 16ஆம் பெனடிக்ற் தமது தேர்வுக்குப்பின் அம்முடிவினைப் பலப்படுத்தினார். ஜேர்மன் ஆயர் ஒன்றியத்தின் கணிப்பின்படி ஆபிரிக்க கத்தோலிக்கர் தொகை 1900இல் 1.9 மில்லியனாக இருந்து 2000இல் பல மில்லியனாக உயர்ந்துள்ளது.

## மியான்மரில் அமைதி நிலவ செபிப்போம்

### – அமெரிக்க ஆயர்கள் –



அமெரிக்க ஆயர்கள் அனைவரும் இணைந்து மியான்மாரில் நடைபெறும் ஜனநாயகப் படுகொலைகளுக்கு எதிராகக் குரல் எழுப்பியுள்ளனர். அமெரிக்க ஆயர் பேரவை சார்பாக ஆசிய ஆயர் பேரவைக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ப்ளோரிடா மாகாண ஆயர் தாமஸ் வென்சிங்கி கையெழுத்திட்டு இதை அனுப்பியுள்ளார். மியான்மரில் உள்ள அமெரிக்க தூதரகத்திற்கும் அமைதி நிலவ நடவடிக்கை எடுக்குமாறு அமெரிக்க ஆயர் பேரவை சார்பாகக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. வன்முறையற்ற, நிலையான அமைதி தரக்கூடிய அரசு அமைய வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். மியான்மர் நாட்டில் மீண்டும் அமைதி நிலவ திருத்தந்தையோடு இணைந்து செபிப்பதாக வாக்குறுதி அளித்துள்ளனர்.

## மனிலா பேராயர் வட்டம் ஆடைகள் தொடர்பாக விளக்கமளித்தது

பிலிப்பைன்ஸ் நாட்டில் ஆலயத்தில் அரைகுறை ஆடைகளோடு வருபவர்களால் மற்றவர்கள் குழப்பப்படுகின்றார்கள் என்ற முறைப்பாடுகளைத் தொடர்ந்து மனிலாவின் பேராயர் வட்டம் திருப்பலி மற்றும் வேறு வழிபாடுகளில் பங்குகொள்ளும்வேளை பக்தர்கள் எத்தகைய ஆடைகள் அணியலாம் என வழிகாட்டி ஒன்றினை வெளியிட்டுள்ளது.

பேராயர் வட்டம் ஆடைகள் தொடர்பான துண்டுப் பிரசுரங்களையும் அட்டைகளையும் தன் பங்குகளிலும், வழிபாட்டு நிலையங்களிலும் விநியோகித்ததுடன் மக்களைக் கவரக்கூடிய இடங்களில் அட்டைகள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

ஆலயத்திற்கு வரும் ஒருவர் என்ன உடைகளை அணிய வேண்டும் என இந்த அட்டைகள் தெளிவாக விளக்குகின்றன என்றார் பணியாளர் கொட்வின் ரற்லொங்காரி. பெண்கள் குள்ளமான ஆடைகள், கையில்லாத சட்டைகள் போன்ற மனங்களைக் குழப்பக்கூடிய ஆடைகளைத் தவிர்க்குமாறு வேண்டப்பட்டுள்ளதுடன் ஆண்கள் தொப்பிகளையோ, தேகப்பியாச உடைகளையோ, குள்ளமான காற்சட்டைகளையோ தவிர்க்குமாறு கேட்கப்படுள்ளனர். பெண்கள் அடக்கமான நீண்ட பாடசாலை அணிகள், மரியாதையான உடுப்புக்களை அணியும்படியும் ஆண்கள் மேலணிகள் நீண்ட காற்சட்டைகள் போன்றவற்றை அணியும்படியும் கேட்கப்பட்டுள்ளனர்.

## அசிசி நகர் தூய பிரான்சிஸ் இளையோருக்கு முன்மாதிரி!

தூய பிரான்சிஸ் அசிசியார் இளைஞர்களின் முன்மாதிரி என்று திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் தெரிவித்துள்ளார். தூய பிரான்சிஸ் அசிசியார் இறைவார்த்தையில் ஆழமான நம்பிக்கை கொண்டவர். கடந்த வாரம் இத்தாலி நாட்டுப் பாதுகாவலர் தூய பிரான்சிஸ் அசிசியார் திருவிழாவை முன்னிட்டு இளைஞர்களுக்கும் நோயாளர்களுக்கும் புதிய தம்பதியர்களுக்கும் உரையாற்றும்போது அசிசியாரைப் போன்று இளைஞர்கள் இறைவார்த்தையின்மீது முழுமையான விசுவாசத்தோடு வாழவேண்டும் என்றும் துன்பங்களைச் சந்திக்கத் துணிச்சலான மனநிலையை வளர்க்க அசிசியாரின் வாழ்க்கை நமக்கு மிகப்பெரிய சான்று என்றும் திருத்தந்தை தெரிவித்தார்.

## வரிகளை ஏற்க மக்கள் மறுப்பு

### – திருத்தந்தை –

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் பொன்வாய் அருளப்பரின் திருநாளை முன்னிட்டு மக்களுக்கு தன்னுடைய சிந்தனையை வழங்கினார். அப்போது திருத்தந்தை நகைச்சுவையாக புனிதரின் மறையுரையிலிருந்து மேற்கோள் காட்டி மூன்றாம் நூற்றாண்டுகளில் அரசரின் வரி விதிப்பிற்கு எதிர்ப்புகள் இருந்ததைச் சுட்டிக்காட்டி வரலாற்றில் இப்படிப்பட்ட செயல்பாடுகள் என்றுமே மாறாது என்று நகைச்சுவையாகக் கூறினார். வரிவிதிப்பதற்கு எதிர்ப்பு இருப்பது புதிதல்ல என்பதை விளக்கினார்.

இத்தாலிய நாட்டின் பட்ஜெட்டை சரிப்படுத்த சென்ற ஆண்டு அவர்களுக்கு வரி உயர்வு நடைபெற்றது. எனவே தனிப்பட்ட வருமான வரியை ரத்து செய்ய இயலாது என்று இத்தாலிய நாட்டு பிரதம அமைச்சர் ரொமானோ ப்ரோடி அறிவித்துள்ளார்.

## பல்சமய மாநாட்டை திருத்தந்தை ஆரம்பித்து வைக்கிறார்!

அக்டோபர் மாதம் 21ஆம் திகதி கத்தோலிக்க பொதுநிலையினர் 'புனித எக்டியே' சமூகமும், நேப்பிள்ஸ் உயர் மறைமாவட்டமும் இணைந்து அகில உலக பல்சமய மாநாட்டை நடாத்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது. திருத்தந்தை திருப்பலி நிறைவேற்றி இந்த மாநாட்டை தொடங்கி வைக்கிறார். இந்த ஆண்டு நடைபெறும் பல்சமய கருத்தமர்விற்கான தலைப்பு '*சமயப் பண்பாடு உரையாடல் அடிப்படையில் வன்முறையற்ற உலகம் படைக்க*' என்பதாகும். 1986 ஆம் ஆண்டு அக்டோபர் அசிசி நகரில் முன்னாள் திருத்தந்தை ஆரம்பித்த சமாதானத்திற்கான உலக செபநாள் என்ற தலைப்பில் நடைபெற்ற அகில உலக கருத்தமர்வுதான் இப்பொழுது நடைபெறும் பல்சமய மாநாட்டிற்கு அடிப்படை என்று வத்திக்கான் செய்திக்குறிப்பு தெரிவிக்கின்றது.

## கடவுளின் பெயரால் வன்முறை பயன்படுத்துகிறது

### திருத்தந்தை 16ம் பெனடிக்ற்

இன்றைய உல்கில் மிக்பெரிய் பிரச்சினை பயங்கரவாதமாகும். இதனால் மனித உயிர்களின் மாண்பு சொற்பமானதாகக் கருதப்படுகிறது என்று திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் தெரிவித்துள்ளார். கடவுளின் பெயரால் வன்முறையைப் பயன்படுத்தும் பயங்கரவாதம் முற்றிலுமாக தவிர்க்கப்பட வேண்டும். பயங்கரவாதத்தால் மட்டுமே உலகின் நீதியைப் பாதுகாக்க முடியும், அநியாயங்களுக்கு தீர்வு கிடைக்கும் என்று சொல்லி பயங்கரவாதத்தை நியாயப்படுத்துவது தவறு. முழு முயற்சியோடும், ஒரே குறிக்கோளோடும் அனைவரும் இணைந்து பயங்கரவாதத்தை அடியோடு ஒழிக்க வேண்டும் என்று திருத்தந்தை அறிவித்துள்ளார்.

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## சுதந்திர ஏக்கம்

சந்திரனும் நட்சத்திரங்களும் பிரகாசித்தாலும்
விடியும்வரை இருளின் ஆதிக்கம் இருக்கும்.
இரவைக் கவ்வியபடிதான் அமைதிக் காற்றை
சுவாசிக்க வேண்டும்.

அநியாயமாய் அழிந்துபோன உயிர்கள்
பல்லாயிரம் - எமது சந்ததியாவது
சலனமற்ற சுதந்திரக்காற்றை காணுமா?
தேசத்தில் சமாதானத்தை நேசிக்கும்
களங்கமற்ற உள்ளங்கள் ஏக்கப் பெருமூச்சுடன்.

சமாதானத்துக்கெதிரான
இனவாதிகளின் ஈனக்குரல்
தடைகளின்றி ஓங்கி ஒலிக்கிறது.

யுத்தக் கருத்தரிப்பில் கர்ப்பம் தரித்த விதவைகள்
உறவுகளை உடைமைகளை இழந்தவர்கள்.
இன்னும் இருள் சூழ்ந்த நிலையில் இயற்கையும்
அந்நிய நாடும்கூட தடையாகவே.

பௌர்ணமி நிலவையாவது நாண விடுங்கள்
இன்று இருந்து நாளை அழிந்துபோகும்
நிலையற்ற வாழ்வையுடைய மனிதன்
இன்னும் எத்தனை காலம்
தன்னை நேசிப்பதுபோல்
பிறரையும் நேசியாமல் வாழப்போகிறான்?

*தே. ஜெபமலர் (ஜெர்மா)*
*சாளம்பன், ஆட்காட்டிவெளி.*

## ஏன் என்னை மறந்தாய்?

உன் பார்வையில் கவலையை மறந்தேன்
உன் பேச்சில் இசை இனிமையை உணர்ந்தேன்
உன் நடையில் நாட்டியத்தை ரசித்தேன்
உன் முகத்தில் வெண்ணிலவைக் கண்டேன்
உன் சிரிப்பில் உலகையே மறந்தேன்
உன் நல்ல செயல்களால் சிறகடிக்கச் செய்தாய்
மழலை மொழி கூறி வாழ்க்கையைத் தந்தாய்
உன் கரங்களைத் தழுவி - மனதினை
சொர்ப்பணம் காண வைத்தாய்
இருந்தும் நீ ஏன் என்னை மறந்தாய்...?


*வி. எசேக்கியல், பேசாலை - 08*

## செலவு



ஐ லவ் யூ என்றேன்
பாவம் அவளுக்கு
நூறு ரூபாய் செலவாகிவிட்டது.
அவளுடைய புதுச்
செருப்பு பிய்ந்துவிட்டது.

*ஏ. பத்திநாதன் வதனா*
*வாழ்க்கைப்பெற்றான் கண்டல், முருங்கன்.*



## சிறுகதை

# வேண்டுதல்

சி. அனற் கீர்த்தனா
ஆலங்குளம், வட்டக்கண்டல்


ஏழை அந்தோனிக்கு இரண்டு மகள்மார். அவர்கள் இளவயதாக இருக்கும்போது அந்தோனியின் மனைவி மரணமானார். வசதி வாய்ப்புக்கள் அதிகம் இல்லாத நிலையிலும் ஒருவாறு கஸ்ரப்பட்டுத் தனது மகள்மாரை வளர்த்து வந்தார் அந்தோனி. இப்படியே வருடங்கள் பல கடந்தன. அந்தோனியின் மகள்மார் இரண்டுபேரும் வளர்ந்து ஆளாகினர்.

இப்போது அந்தோனிக்கு பொறுப்புக்கள் இன்னும் அதிகமாயின. மகள்மாரைப் பொருத்தமான யாருக்கேனும் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. எதிர்பார்த்தது போலவே மகள்மாருக்கு பொருத்தமான கணவன்மார் இருவரைத் தேடிப் பிடித்தார். ஒருவர் விவசாயம் செய்பவர், மற்றவர் சட்டி பானைகள் செய்பவர். முதலாவது மகளுக்கு விவசாயியையும், இரண்டாவது மகளுக்கு சட்டிபானை செய்பவரையும் திருமணம் செய்து வைத்தார் அந்தோனி.

திருமணம் முடித்த கையோடு இரண்டு மகள்மாரும் தமது கணவனது ஊருக்குச் சென்று விட்டனர். சில வருடங்கள் கழிந்துவிட்டன. மகள்மாரைப் பிரிந்த துயரம் அந்தோனியைப் பெரிதும் வாட்டியது. அவருக்கு ஆறுதல் கூற எவரும் இருக்கவில்லை. எப்படியேனும் மகள்மாரைப் பாரக்க வேண்டும் என்ற ஏக்கம் அவருள் உண்டானது. மகள்மாராவது தன்னை வந்து பார்த்திருக்கலாம்தானே என்று அவரது மனம் அவருள்ளேயே கேட்டுக்கொண்டது. "அவர்களுக்கு ஏதும் பிரச்சினையாய் இருக்கும் போலும். அதனால்தான் வரவில்லைபோலும்" என தனக்குத்தானே ஆறுதல் கூறிக்கொண்டார். என்றாலும் இதற்குமேல் பொறுத்திருக்க முடியாது என முடிவெடுத்தார். அதன்படியே மகள்மாரைச் சந்திக்கப் புறப்பட்டார். முதலாவதாக மூத்த மகளைச் சந்திக்கச் சென்றார். பல மைல் தூரம் சென்று மூத்த மகளின் வீட்டை அடைந்தார். தந்தையைக் கண்ட மகள் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றாள்.

"மகளே நீ சந்தோசமாக இருக்கின்றாயா?" எனக் கேட்டார் தகப்பன். "முன்னரெல்லாம் நான் சந்தோசமாகத்தான் இருந்தேன். ஆனால் அந்தச் சந்தோசமெல்லாம் இப்போது இல்லாமல் போய்விட்டது" என்றாள் அவள். "ஏன் என்ன நடந்தது?" என அதிர்ச்சியுடன் கேட்டார் அந்தோனி. "ஆம் அப்பா! முன்னரெல்லாம் விளைச்சல் நன்றாக இருந்தது. ஆனால், இப்போதெல்லாம் போதிய மழை இல்லாததன் காரணமாக விளைச்சலை அது பாதித்துள்ளது. ஆகையால் மழைபொழிய வேண்டும் என இறைவனை வேண்டுங்கள்" என்றாள் அவள். "சரி அப்படியே ஆகட்டும்" எனக் கூறிய அவர் அடுத்ததாக தனது இளைய மகளைப் பார்ப்பதற்காக அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

இளைய மகளின் ஊரைச் சென்றடைய ஒரு நாளாகியது. அவ்வளவு தொலைவிலுள்ளது. தந்தையைக் கண்ட மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனாள் இளைய மகள். "மகளே! நீ எப்படி இருக்கிறாய்? சந்தோசமாக இருக்கிறாயா?" எனக் கேட்டபோது "தந்தையே கடந்த சில நாளில்தான் சந்தோசமாக இருந்தேன். ஆனால் இப்போது சந்தோசம் இல்லையே" எனக் கவலைப்பட்டாள். "மகளே உனக்கு என்ன நடந்தது?" எனக் கேட்டார். "கடந்த சில நாட்களாக இங்கு ஒரே மழையாக உள்ளது. இதனால் சட்டிபானைகள் செய்து உலர்த்துவதற்கு மழை தடையாக உள்ளது. இப்படியே மழை பெய்துகொண்டே இருப்பதால் எங்களது தொழிலைப் பாதித்துள்ளது.



ஆகையால் மழையை நிறுத்துமாறு கடவுளிடம் வேண்டுகிறேன். நீங்களும் எனக்காக வேண்டுங்கள்" எனக் கூறினாள்.

மகள் கூறுவதைக் கேட்டு அந்தத் தந்தை அதிர்ச்சியில் உறைந்து போனார். மூத்த மகள் மழை வேண்டும் எனக் கடவுளிடம் வேண்டச் சொன்னாள். இளைய மகளோ மழை வேண்டாம் எனக் கடவுளிடம் வேண்டச் சொல்கிறாள். இருவரும் ஒரே விடயத்தை நேர்எதிரே வேண்டச் சொல்கின்றனரே. யாருக்காக கடவுளை வேண்டுவது? என அவர் குழம்பித்தான் போனார்.

சிறிது நேரத்தில் அவருக்குத் தெளிவு பிறந்தது. உடனே கடவுளை வேண்டத் தொடங்கினார். மகள்மார் இருவரதும் வேண்டுதல்களை கடவுளிடம் கூறினார். "கடவுளே இதில் யாருடைய ஆசை நிறைவேற வேண்டும் என்பது எனக்குத் தெரியாது. என்றாலும் இந்த விடயத்தை உம்மிடமே விட்டுவிடுக்கிறேன். சரியான தீர்ப்பை வழங்கக் கூடியவர் நீர் ஒருவரே" என வேண்டிக் கொண்டார்.

*எந்தவொரு விடயமானாலும் அதிலுள்ள நியாயத்தின் அடிப்படையில் தீர்ப்பளிப்பவர் இறைவன் ஒருவரே என உணர வேண்டும்.*

## தொடர் கட்டுரை – அங்கம் 54

# கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

### - அருடபணியாளர் விக்ரர் பிலேந்திரன் -

### வட இலங்கையில் பாடுகளின் காட்சிகள்



## 19. பேசாலைப் பாரம்பரிய உடக்காலான திருப்பாடுகளின் காட்சி

ச. அந்தோனி மிராண்டா,
பேசாலை

### பாஸ் மண்டப அமைப்பு

1905ஆம் ஆண்டு வண. இ. டெஸ்லோஜஸ் அ.ம.தி. (Desloges) அடிகளார் பங்குதந்தையாகப் பணியாற்றியபோது (1903-1912) ஆரம்பிக்கப்பட்டு 1907ம் ஆண்டு அருட்திரு. ஜே. லெப்பிலே அ.ம.தி. (Leblay) அடிகளாரின் சேவைக்காலத்தில் (1907-1912) பிரமாண்டமான இப்பாஸ் மண்டபம் கட்டி முடிக்கப்பட்டது. இக்கட்டடம் எங்கள் வெற்றி நாயகி ஆலயத்தோடு போட்டி போட்டு உயர்ந்து நிற்கின்றது. முருகைக்கற்களால் கட்டப்பட்ட இம்மண்டபம் அகன்ற சுவர்களையும், பல நூற்றுக்கணக்கான படிக்கட்டுக்களையும், திருப்பங்களையும், சுரங்கம் போன்ற அறைகளையும், வில் வடிவிலான உயர்ந்த சுவர்களையும் கொண்டுள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டுப் பொறியியலாளர்களையும் இம்மண்டபம் கவர்ந்துள்ளது.

இப்பாஸ் மண்டபம் ஏன் இவ்வளவு உயரமாக-வும் பல திருப்பங்களைக் கொண்டதாகவும் கட்டப்பட்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்ள, அருட்திரு யாக்கோமே கொன்சால்வேஸ் எழுதிய 9 வியாகுல பிரசங்கங்களை நன்றாக அறிந்துகொள்வது நலமாகும். அப்பிரசங்கங்-களின்படி நிகழ்ச்சி வரிசை ஒழுங்காக, காலதாமதமின்றி நடைபெற வேண்டுமாயின் இப்படியான கட்டிட அமைப்பு அவசியமாகின்றது. பாஸ்கு மண்டபம் கட்டப்படுவதற்கு முன்பு பல வருடங்களாக எமது முன்னோர்கள் ஓலைக் கொட்டகை அமைத்து திருப்பாடுகளின் காட்சியை வியாகுல பிரசங்கத்திற்கேற்ப காண்பித்து வந்தார்கள். அப்போது ஏற்பட்ட குறைபாடுகளையும், இடர்பாடுகளையும் நிவர்த்திசெய்து, நிகழ்ச்சிகளை சிறப்பான முறையில் காண்பிப்பதற்காகவே இம்மண்டபத்தை மிக நுட்பமாகத் திட்டமிட்டுக் கட்டியுள்ளனர்.

1907ஆம் ஆண்டு பங்குத்தந்தையாக இருந்த வண ஜே. லெப்பிலே அடிகளாரின் தலைமைத்-துவத்தில் மூப்பர் மரியானு மீயேல் அவர்களின் நெறிப்படுத்தலில் முதன் முறையாக திருப்பாடுகளின் காட்சி இப்பாஸ் மண்டபத்தில் காட்டப்பட்டது. இக்காட்சியைப் பார்ப்பதற்கு அயலூர்களிலும் தூர இடங்களிலுமிருந்து பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் வந்தனர்.

முன்னைய காலத்தில் பரிசுத்த வாரம் முழுதும், திங்கள், செவ்வாய், புதன், பெரிய வியாழன், பெரிய வெள்ளி, உயிர்த்த ஞாயிறு ஆகிய ஆறு நாட்களிலும் பகலிலும், இரவிலும் காட்சிகள் காண்பிக்கப்பட்டன. பெரிய திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில், இயேசு செய்த அருங்குறிகள் பலவும் இயேசுவின் வாழ்க்கை-யோடு தொடர்புடைய பல சம்பவங்களும் காட்டப்பட்டன. உதாரணாக, கானாவூர் கலியாணத்தில் தண்ணீரை இரசமாக்குதல், திமிர்வாதக்காரனைக் குணமாக்குதல், 5 அப்பங்களை ஐயாயிரம் பேருக்கு பகிர்ந்தளித்தல், கடலில் புயலை அடக்குதல், 38 வருடங்களாக நோயாய் இருந்தவனை ஓய்வுநாளில் குணமாக்குதல், பேய் பிடித்தவனை குணமாக்கல் போன்ற புதுமைகளையும், இயேசு திருமுழுக்குப் பெறுதல், பசாசினால் சோதிக்கப்படல், 12 அப்போஸ்தலரைத் தெரிதல், தேவாலயத்தில் வியாபாரிகளை கசையால் அடித்துத் துரத்துதல், சமாரியப் பெண்ணோடு உரையாடி சமாரியர்-களுக்கு தான் மெசியா எனத் தெரியப்படுத்துதல், இயேசு மறுரூபமாகுதல், யோவான் சிரச்சேதம் செய்யப்படுதல், இயேசு மாதாவிடம் விடை கேட்டல், கழுதையில் வாகனப் பவனிவருதல் போன்ற நிகழ்வுகளும் காட்டப்பட்டன. பெரிய வியாழன், பெரிய வெள்ளி, உயிர்த்த ஞாயிறு நாட்களில், இயேசுவின் பூங்காவனப் பீடை, இயேசு யூதர்களால் கைது செய்யப்படுதல், கற்றூணில் கட்டி கசைகளால் அடிக்கப்படுதல், 'இதோ மனிதன்' என பிலாத்துவினால் யூதர்களுக்குக் காட்டப்படுதல், இயேசு சிலுவை சுமத்தல், அறையப்படுதல், சிலுவையில் மரித்தல், சிலுவையினின்று இறக்கி அடக்கம் செய்யப்படுதல் ஆகியனவும் இயேசு உயிர்த்தல், மரிய மதலேனாவுக்குக் காட்சி கொடுத்தல், எம்மாவுசுக்குச் செல்லும் சீடர்களோடு வழிப்போக்கன்போலச் சென்று இடையில் மறைதல், பன்னிரு அப்போஸ்தலர்களுக்குத் தோன்றுதல் போன்ற காட்சிகளும் இடம்பெறும்.

இக்காட்சிகளைப் பகல்வேளையிலும் சௌகரிய-மாக அமர்ந்திருந்து பார்ப்பதற்கு வசதியாக பாஸ் மண்டப முன்றலில் பிரமாண்டமான பந்தல், மரம், சிலாகை, கிடுகு முதலியவற்றால் அமைக்கப்படும். பந்தல் அமைப்பது மிகச்சிரமமான வேலை ஆதலால் 'கந்தாயம்' என்னும் முறை பின்பற்றப்-பட்டு வந்தது. இதன்படி ஊர்ப் பெரியார்கள் என மதிக்கப்படுபவர்கள் கூடி நன்றாக வேலை செய்யக்கூடிய பலசாலிகளான நடுத்தர வயதுடையோரின் பெயர்ப்பட்டியல் ஒன்று தயாரிப்பர். அவர்களைக் குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் குறிப்பிட்ட வேலையைக் குறிப்பிட்ட நாளில் செய்து முடிக்கவேண்டும் என அறிவுறுத்தப்படுவர். வேலைக்கு சமூகம் கொடுக்காதவர்ளுக்கு சிறு தண்டமும் விதிக்கப்-பட்டது. ஆனால் வேலைக்கு அழைக்கப்பட்ட-வர்கள் மாத்திரம் அல்ல, ஏனையோரும், பாஸ் மண்டபம் சம்மந்தமான வேலைகளை, தம் சொந்த வேலை எனக்கருதி விருப்பத்துடன் சுறுசுறுப்பாகச் செய்து முடிப்பார்கள். விபூதிப் புதனை அடுத்துவரும் ஞாயிறு வாரம் பொதுக் கூட்டம் கூடி, பாஸ் காட்டும் விடயம் ஆராயப்படும். 'உடக்குப் பாஸ்' எம் ஊரவரின் சொந்த விடயமாகக் கணிக்கப்படுவதால், ஏராளமான மக்கள் இக்கூட்டத்துக்குச் சமூகமளித்து தம் பூரண ஆதரவைத் தெரிவித்துக் கொள்ளுவார்கள். *(தொடரும்...)*

# துளிப்பா

### காதல்

காதல் கடலைவிட ஆழமானது
புரிந்துகொண்டவர்களுக்கு.
காதல் ஒரு மரணப் படுகுழி
புரியாதவர்களுக்கு!

அ.கிறேஸ் குயின்ரா, சாளம்பன்



### தீ

தலைகீழாய் பிடித்தாலும்
நிமிர்ந்துதான் எரியும்.

### தீக்குச்சி

தலையின் கனம்கூடி
தன்னையே எரிக்கும்.

### ரோஜா

அழகு நிறைந்ததுதான்
ரோஜா மலர் - ஆனால்
அதில் முள் உண்டு.

*செ. றொக்சி பவித்திரா,*
*ஆட்காட்டிவெளி*

### மழை

சுற்றும் புவியின் பொறுமைகண்டு
பெருமை கண்டு
வான் தெளிக்கும் பன்னீர்த் துளிகள்.

### செருப்பு

தோலால் உருவாகி
தோலுக்குப் பாதுகாப்புத் தரும்
பொதுநலவாதி.

### நுளம்பு

பசியில் வாடிச் சிறுத்த என்னில்
தன் பசி போக்கிப் பறந்தது நுளம்பு



### சூரியன்

விடுப்பு எடுக்காத தொழிலாளி
வெளிச்சத்தின் மூல பிதா!

*எஸ். மொணிற்றா*
*அடம்பன்தாழ்வு, வட்டக்கண்டல்*

## அரிப்பு, சிலாவத்துறை, மருதமடு, கொக்குப்படையான், பொற்கேணி மற்றும் முள்ளிக்குளம் ஆகிய இடங்களில்

# விடுவிக்கப்பட்ட மக்களுடனான ஒரு சிங்கள அருட்தந்தையின் சந்திப்பு!

*"அரிப்புப் பங்குக்கு உட்பட்ட மேற்படி கிராமங்களின் மேல் சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப் பட்ட இரண்டு வார "மனிதாபிமான நடவடிக்கையின்" பின்னர் அப்பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நான் புரட்டாதி மாதம் 14ந் திகதி மேற்கூறப்பட்ட விடுவிக்கப்பட்ட மக்களைச் சந்தித்துவிட்டு 16ந் திகதி நீர்கொழும்புக்குத் திரும்பினேன். துன்புறும் மக்களுடன் ஒன்றிணைந்து மேற்கூறப்பட்ட "விடுவிக்கப்பட்ட பிரதேசங்களைச்" சேர்ந்த மக்களின் பரிதாபகரமான நிலையைத் தங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்."*

*- அருட்தந்தை ரெறென்ஸ் பெனாண்டோ*

*'த மெசஞ்சர்'* (The Messenger) என்ற இலங்கையின் கத்தோலிக்க ஆங்கில வாரப் பத்திரிகையில் ஒக்டோபர் 14ம் திகதி அன்று மனித உரிமைகள் செயற்பாட்டு ஆணையத்தின் ஒருங்கிணைப்பாளர் அருட்பணியாளர் றெறன்ஸ் பெனாண்டோ அவர்கள் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்.

*தமிழ் வடிவம் - அருட்சகோதரி கனிசியஸ் (தி.கு)*

நான் முருங்கன் ஆலய வளாகத்தினுள் பிரவேசித்தவுடன் ஐ.நா. அகதிகள் பணியகத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட இரண்டு நீண்ட வரிசையில் அமைந்த கூடாரங்களைக் கண்ணுற்றேன். ஆனால் அந்தக்கூடாரங்களில் எந்த ஒரு நபரையும் காணாமையால் நான் ஆச்சரியத்தில் மூழ்கினேன். விடுவிக்கப்பட்ட மக்கள் இந்தத் தற்காலிக அகதிக் கொட்டகைகளில் வசிக்க முடியாமையால் அவர்கள் அங்கு இல்லைப்போலும் என்று நான் எனக்குள் எண்ணிக்கொண்டேன்.

இந்தக் கூடாரங்களைக் கடந்து டொன் பொஸ்கோ தொழில்நுட்பக் கல்லூரியை நோக்கி நான் சென்றபோது அங்கு நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண்களும், இளைஞர்களும், முதியோரும், குழந்தைகளும் கவலை தோய்ந்த முகங்களுடன் டொன் பொஸ்கோ தொழில் நுட்பக்கல்லூரிக் கட்டடத்தில் வெறும் தரையில் அமர்ந்திருப்பதைக் கண்டேன். அக்கட்டடத்தின் கூரை எறிக்கும் வெய்யிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தது.

சிறுவர்கள் வழமைபோல எதுவும் நடைபெறாதது போன்று அங்கும், இங்கும் ஓடித்திரிந்தனர். டொன்பொஸ்கோ நிறுவன அருட்தந்தை சேவியர் அந்த மக்களைச் சுட்டிக்காட்டி சிறிலங்கா இராணுவத்தினரின் மனிதாபிமான நடவடிக்கையின் மூலம் தமது வீடுகளிலிருந்தும், தமது நிலங்களிலிருந்தும் "விடுவிக்கப்பட்ட" மக்கள் இவர்களே என்று கூறினார்.

மன்னார்/ அரிப்புப் பங்கிலிருந்து துரத்தியடிக்கப்பட்ட சகோதர, சகோதரிகளின் உண்மையான கதை இதோ. இராணுவத்தினர் முருங்கனிலிருந்து, சிலாவத்துறை நோக்கி முன்னேறவுள்ளனர் என்பதை இவ்விடத்திலிருந்த போராளிகள் முன்கூட்டியே அறிந்து கொண்டமையால் அவர்கள் அவ்விடத்தைவிட்டு வேறோர் இடத்திற்குச் சென்றுவிட்டனர்.

ஏறக்குறைய இரண்டு வாரங்களின் பின்னர் இராணுவத்தினர் அந்தப்பிரதேசத்தை நோக்கி எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். அவை முதலில் கடலுக்குள் வீழ்ந்தன. பின்னர் படிப்படியாக நிலப்பகுதிக்குள் விழத் தொடங்கின. அடுத்தபடியாக கிபீர் குண்டுவீச்சு விமானம் தனது பணியைத் தொடங்கக்கூடும் என உணர்ந்துகொண்ட மக்கள் தமது உடைமைகள் அனைத்தையும் கைவிட்ட நிலையில் தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் முகமாகப் பாதுகாப்பிடம் தேடி ஓடினர். அடுத்த நிகழ்வாக இப்பிரதேசத்தை நோக்கி முன்னேறிய இராணுவத்தினர் பத்து நிமிடத்திற்குள் மக்கள் அனைவரும் தமது இடங்களை விட்டு வெளியேற வேண்டுமென்று கட்டளையிட்டனர்.

என்ன நடைபெறப் போகின்றது என்பதை அறிந்திராத மக்கள் அடைக்கலம் தேடி ஓடினர். தமது சோகக்கதையைக் கூறிய மக்கள், இரண்டு படகுகளின் உதவியுடன் அருவி ஆற்றைக் கடந்து நானாட்டான், முருங்கன் பிரதேசங்களைச் சென்றடையப் பல மணித்தியாலங்கள் சென்றன என்று கூறினர். அந்நாட்தொட்டு அவர்களது கிராமங்கள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் தகவலின்படி பலத்த நடவடிக்கையின் பின்னரும், கடுமையான போராட்டத்தின் பின்னரும் தாம் சிலாவத்துறையைப் போராளிகளிடமிருந்து மீட்டதாகக் கூறப்பட்டது. இதற்கு மாறுபாடான விதத்தில் போராளிகள் ஒரு துப்பாக்கி வேட்டுக்கூடத் தீர்க்கவில்லை என்றும், இராணுவத்தினரின் வருகைக்கு முன்னரே போராளிகள் அவ்விடத்தைவிட்டு வெளியேறியமையினால் அவர்களுக்கெதிராக எவ்வித போராட்டமும் நடைபெறவில்லையென்றும் பங்குத்தந்தையும், மக்களும் கூறினர்.

துரதிஷ்டவசமாக குருக்கள் எவரும் அங்கு இருக்கவில்லை. காரணம் அவர்கள் குருக்களுக்கான தியானத்திற்காகக் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரிக்குச் சென்றிருந்தனர். அவர்கள் அங்கிருந்து திரும்பி வந்த மறுதினம் முருங்கன் பங்குத்தந்தை அருட்பணி. ஸ்ரீபனும் ஒருசில திருக்குடும்ப சகோதரிகளும் இராணுவ அதிகாரிகளின் அனுமதியுடன் அரிப்புக்குச் சென்றனர். அவர்கள் அங்கு சென்றபோது பங்குமனை பலவந்தமாகத் திறக்கப்பட்டிருந்ததோடு அங்கிருந்த 50 லீற்றர் பெற்றோலும் காணாமல்ப்போயிருந்தது. இரண்டு நாட்களின் பின்னர் அருட்தந்தை, அருட்சகோதரிகள் மற்றும் மூன்று முதியவர்கள் ஆகியோரை அவ்விடத்தைவிட்டு வெளியேறும்படியும், எந்தநேரத்திலும் போராளிகளுடனான மோதல் வெடிக்கக்கூடும் என்றும் பொறுப்பான இராணுவ அதிகாரி அவர்களிடம் கூறினார்.

ஆனால் தான் அவ்விடத்தைவிட்டு விலகப்போவதில்லை என்றும் தனது மக்களுடன் தங்கியிருந்து மரணிக்கப் போவதாகவும் அருட்தந்தை கூறியுள்ளார் எனினும் இராணுவத்தினர் பலவந்தமாக அவர்களை ஒரு வாகனத்தில் ஏற்றி முருங்கனுக்குக் கொண்டு சென்றனர். எந்த ஒரு போராளியும் அங்கு இல்லாத வேளையில் எவ்வித போராட்டமும் நடைபெறாத வேளையில் சிறுவர்கள் உட்பட அப்பாவிப் பொது மக்கள் பதினாறு பேருக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் மற்றும் சிலர் காணாமற் போயுள்ளனர்.

72 மணித்தியாலத்திற்குள் மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்போவதாக இராணுவ அதிகாரிகள் அறிவித்ததாகக் குருக்கள் கூறினர். அவர்கள் இவ்வாறு கூறிப் பத்து நாட்கள் கடந்த நிலையில் நான் அங்கு சென்றபோதும் அவர்களுடைய 72 மணித்தியால கால அளவு கடக்கவில்லை.

அன்றைய தினம் இரு சிறுவர்கள் உட்பட இரண்டு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஒரு வாகனத்தில் பயணம் செய்தபோது கிளைமோர் வெடியில் சிக்கி உயிரிழந்தனர். இதன் பரிதாபநிலை யாதெனில் எந்த ஒரு நபரும் அந்த இடத்திற்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. மூன்று நாட்களின் பின்னர் அவ்விடத்திற்குச் செல்வதற்கு குருக்களுக்கு அனுமதி கிடைத்தது. அவர்கள் மற்றும் சிலருடன் அங்கு சென்று சிதைவடைந்த நிலையிலிருந்த சடலங்களை மன்னார் வைத்தியசாலைக்குக் கொண்டுவந்து சேர்த்தனர். பின்னர் இரவு 11.50 மணியளவில் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை முன்னிலையில் சடலங்களை அடக்கம் செய்தனர்.

முள்ளிக்குளத்தைச் சேர்ந்த மக்கள் தங்களது கிராமத்தை விட்டு வெளியேற அனுமதி மறுக்கப்பட்டதோடு அவர்களுடனான தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டன. குருக்களோ, அரச சார்பற்ற நிறுவனங்களோ, வேறு எவருமோ அங்கு செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. ஒரு வாரத்தின் பின்னர் பட்டினியால் உருக்குலைந்த நிலையிலிருந்த இந்த மக்கள் 20 கிலோ மீற்றர் தூரம் நடந்து சிலாவத்துறையை அடைந்தனர். அதன் பின்னர் தான் அங்கிருந்து முருங்கன் வரை செல்வதற்கு இராணுவத்தினரால் வாகன வசதி செய்துகொடுக்கப்பட்டது.

கூட்டுறவுச் சங்கக்கடை முதலாளி ஒருவர் தனது மனைவியை-யும், பிள்ளைகளையும் ஏனையவர்களுடன் ஒரு வாகனத்தில் அனுப்பிவிட்டு தான் ஒரு கைப்பையில் பணம், நகை போன்ற-வற்றை எடுத்துக்கொண்டு தனது மோட்டார் சைக்கிளில் வந்துள்ளார். ஆனால் இற்றைவரை அவர் முருங்கனை வந்தடையவில்லை. அவரைத் தாம் காணப்போவதில்லை என்பதில் மக்கள் நிச்சயமாய் இருக்கிறார்கள். ஏனென்றால் இராணுவத்தினரின் வாகனத்தில் சிலர் அவரைக் கண்டுள்ளனர். கொல்லப்பட்ட பலரில் அரிப்புப் பங்குத்தந்தை அருட்பணியாளர் ஜெயபாலனுடைய மருமகளின் கணவரும் ஒருவர்.

பாக்கிஸ்தானில் மறைபரப்பாளராக பணியாற்றும் அருட்சகோதரி ஒருவர் விடுமுறைக்காக வந்திருந்தார். அவரும் தனது உறவினர்களுடன் சேர்ந்து இடம்பெயர்ந்துள்ளார். இரண்டு நாட்களின் பின்னர் அவர் தனது ஆவணங்களை எடுப்பதற்காக அனுமதிபெற்று அங்கு சென்றபோது அனைத்துப் பொருட்களும் சிதறடிக்கப்பட்டுக் கிடந்ததாகவும் தூக்கிச் செல்லக்கூடிய அவரது கணனி (Laptap) காணாமல் போய்விட்டதாகவும் கூறினார்.

சனிக்கிழமை மாலை நான் பார்த்தபொழுது டொன்பொஸ்கோ தொழிற்பயிற்சி நிலையத்தில் தங்கியிருந்த மக்களைக் காணவில்லை. அவர்களை வேறிடங்களுக்கு அனுப்புவதற்கு இராணுவத்தினர் தீர்மானம் எடுத்திருந்தனர். குழந்தைகள், சிறுவர்கள், முதியோர், நோயாளர் அடங்கிய இருபத்தாறு குடும்பங்கள் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்ட கூடாரங்களில் சூரிய வெப்பத்தின் கொடூரத்தின் மத்தியில் தங்கவைக்கப்பட்டனர்.

சிலர் தமது உறவினர்களின் இல்லங்களில் அடைக்கலம் தேடும்படி கேட்கப்பட்டதோடு ஏனையோர் சூழவர அமைந்திருந்த ஏனைய முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். சிலர் உழவு இயந்திரங்களில் ஏற்றிச்செல்லப்பட்டதை நான் கண்டேன்.

அருட்தந்தையர்களான ஜெயபாலனும், பெனோவும் நானாட்டான் பங்கில் அமைந்திருந்த ஏனைய முகாம்களுக்கு என்னுடன் இணைந்து வருகை தந்தனர். நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு ஆலய வளாகம், பாடசாலைக் கட்டடங்கள், நெல் சேமித்து வைக்கும் பண்டகசாலை போன்றவை மீண்டும் அபயமளித்தன. அதிகாரத் தரப்பாரிடம் கேட்கும்படி அனைத்து மக்களும் விடுத்த ஒரே கோரிக்கை "எமது இல்லங்களுக்குத் திரும்பிச் செல்ல எங்களுக்கு அனுமதியளியுங்கள்"

அங்கும் நான் ஒரு இளம் அன்னையின் அழுகைக் குரலுக்குச் செவிமடுத்தேன். "நான் சிறுமியாயிருந்தபோது இடம் பெயர்ந்தேன். எமது வீட்டிலிருந்து துரத்தியடிக்கப்பட்டோம். இந்தியாவுக்குச் சென்றோம், அகதி முகாம்களில் வாழ்ந்தோம், வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிப்பதற்காகத் திரும்பி வந்தோம். ஆனால் என்ன பரிதாபம்! நாம் இப்பொழுதும் மீண்டும் அதே நிலையில்தான் உள்ளோம். எத்தனை காலத்திற்குத்தான் நாம் இந்தத் துன்பங்களைத் தாங்குவது? இவ்வாறு வாழ்வதைவிடச் சாவது மேல்" இந்த அழுகைக்குரலைத் தென்பகுதியில் உள்ள நாம் கேட்கின்றோமா? என்பது முக்கியம்.

ஆட்காட்டிவெளி, அடம்பன், கன்னாட்டி, சாளம்பன், விடத்தல்தீவு, பள்ளமடு, கோயிற்குளம், கறுக்காக்குளம் ஆகிய பிரதேசங்களுக்குச் சென்று திரும்பிய சில குருக்களைச் சந்தித்து, அவர்கள் கூறியவற்றிற்குச் செவிமடுத்ததோடு அவர்களால் தயாரிக்கப்பட்ட அறிக்கையையும் வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. நாளாந்தம் இராணுவத்தினால் ஏவப்படும் எறிகணைகள், மக்கள் இந்த இடங்களைக் கைவிட்டு பாம்புகள் நிறைந்ததும் தண்ணீர் வசதிகூட இல்லாததுமான அடர்ந்த காடுகளை நோக்கி அவர்களை ஓட வைத்தது.

நானாட்டான் பங்குத்தந்தையான அருட்தந்தை ஜெயசீலனால் கூறப்பட்ட மற்றுமொரு கதை, "அண்மையில் ஆலய வளாகத்தில் ஒரு திருச்சொரூபத்தை நிர்மாணிப்பதற்காக நாம் நிலத்தை அகழ்ந்தோம். மூன்றடிக்கு மேல் எம்மால் அகழ முடியவில்லை. அப்பொழுது அங்கு மூன்று மனித எலும்புக்கூடுகள் காணப்பட்டன.







மேலும் அதிக எலும்புக்கூடுகள் காணப்படக்கூடும் என்ற எண்ணத்தில் நாம் வெட்டிய குழியை மூடிவிட்டோம். இவருக்கு முன்னர் இருந்த பங்குத்தந்தையும் பங்குமனை கட்டவந்து அடித்தளமிட்டபோது தானும் எலும்புக்கூடுகளைக் கண்டதாகக் கூறினார். இது எவ்வாறு நிகழ்ந்தது, இந்த ஆலயம் முன்னர் இராணுவத்தளமாக இருந்தது...!

சிலாவத்துறைப் பிரதேசத்திலிருந்து விடுவிக்கப்பட்ட மக்களின் ஒரு சிறிதளவான செய்திகள் இவை. நான் அங்கு தங்கியிருந்த இரண்டு நாட்களில் நான் பெற்ற அனுபவத்தையே இங்கு கூறுகின்றேன்.

இந்த நாட்டின் தமிழ் மக்களுக்குத் தென் பகுதித் தலைவர்கள் கொடுக்கப்போகும் விடுதலை இதுவே.

அங்கு நடந்த அனைத்தையும் கவனித்த பின்னர் சில வினாக்கள் எனது மனதை உறுத்திக்கொண்டிருக்கின்றன. அதனை உங்கள் முன் வைக்கவிரும்புகிறேன். இந்த மக்கள்மேல் யாருக்கு அதிகாரம் உண்டு? இவர்கள் சார்பாக உண்மையில் தீர்மானம் எடுப்பவர்கள் யார்? அவ்வாறு செய்வதற்கு அவர்களுக்கு என்ன உரிமை இருக்கின்றது? இந்த அப்பாவி மக்களை அவர்களது வீடுகளைவிட்டு வெளியேற்றும்படி கட்டளையிட்டவர்கள் யார்?

இந்த நாட்டில் மனித மாண்புடன் வாழும் உரிமை இந்த மக்களுக்கு இல்லையா? வன்செயலுக்குப் பலியானவர்களின் அழுகைக்குரல் எமது செவிகளில் விழவில்லையா? இவர்கள் மனிதர் என்ற மட்டில் துன்பங்களையும், வேதனைக்ளையும் இனிமேலும் தாங்கிக்கொள்ள முடியுமா?

இந்த வினாக்களால் நீங்கள் குழப்பமடையவில்லையா? தென்பகுதித் தலைவர்கள் உண்மை என்று கூறி எமக்குமுன் வைப்பவற்றை நாம் நம்பிக்கொண்டு வெறுமனே அமைதி காக்கலாமா! "நாம் போரில் வெற்றியடைகின்றோம், யுத்தம் முடிவுக்கு வருகின்றது. வெகுவிரைவில் நாட்டில் முழுமையான அமைதி நிலவும்" போன்ற சுலோகங்களை அள்ளிவீசும் யுத்த விஷமிகளின் வார்த்தைகளை நம்பி நாம் தொடர்ந்து மௌனம் காக்கப் போகின்றோமா?

உண்மையாகவே நாம் எமது நாட்டின் வரலாற்றில் இறுதிக் கட்டத்தை அண்மித்துவிட்டோம். "உனது சகோதரன் எங்கே" என்று இறைவன் இடைவிடாது எம் ஒவ்வொருவரையும் பார்த்துக் கேட்டுக்கொண்டிருக்கிறார். "எனது சகோதரனுக்கு நான் காவலாளியா?" என்று நாம் திருப்பிக்கேட்கப் போகிறோமா? வரலாற்றில் இறைவனது அழைப்புக்குப் பதிலிறுப்பாகத் துன்புறும் எமது சகோதரர்களுடன் கைகோர்த்துச் செல்வோம். ●

# துறவற வாழ்வில் வெண், பொன் விழாக்களைக் கண்டுகளிக்கும் திருக்குடும்ப அருட்சகோதரிகள்

அருட்சகோதரி
**கனிஷியஸ்** (தி.கு.)

"தாயின் கருவிலேயே நான் உன்னைத் தெரிந்தெடுத்தேன்" என்று கூறி இற்றைக்கு 25, 50 ஆண்டுகளுக்கு முன்னர் எம் சகோதரிகள் மரிய கிளாரா, இயூஜின், அலிஸ், யுடொக்சி, மரியம், லோறா, இதயமலர், மரியகொறற்றி, லூர்துமேரி, மரியறாணி, அனஸ்ரேஷியா ஆகியோரை இறைவன் தன் பணிக்கென அழைத்தார். அழைத்தவரின் குரலை இனங்கண்டு "இதோ வருகிறேன்" எனப் பதிலுரைத்து அவரது பணியைத் தொடர்ந்து ஆற்றுவதற்காக இவர்கள் திருக்குடும்ப சபையில் தம்மை அர்ப்பணித்தனர்.

இறைவனால் அழைக்கப்பட்டு, தேர்ந்துகொள்ளப்பட்ட இவர்கள், தமது துறவற அர்ப்பணத்தின் மூலம் இறைவனுக்கு முற்றிலும் சொந்தமாகி, அவரது பணியை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஆற்றிடத் தம்மை மனமுவந்து அர்ப்பணித்தனர். "இறைவனுக்கு மாத்திரமே மகிமை" என்னும் தமது சபையின் விருதுவாக்கை சிரம்மேற்கொண்டவர்களாய் இயேசு, மரியாள், யோசேப்பின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, தாம் செய்யும் அனைத்திலும் "இறை மகிமை" ஒன்றையே தமது மேலான குறிக்கோளாகக் கொண்டு தமது வாழ்வை அமைத்துள்ளனர்.

## பொன்விழா நாயகிகள்

இந்த வகையில் தமது துறவற வாழ்வின் பொன்விழாவைக் கொண்டாடும் அருட்சகோதரிகளான மரியகிளாரா, இயூஜின், அலிஸ், யுடொக்சி, மரியம், லோறா ஆகியோர் களம்பல கண்டு, ஞானத்திலும், அறிவிலும், இறையுறவிலும் முற்றிப்பழுத்த ஞானிகளாவர். தாம் பணிசெய்த இடங்களிலெல்லாம் மக்களின் உயர்ச்சியையும், அவர்களின் வளர்ச்சியையுமே தமது பணியின் அடிநாதமாகக் கொண்டிருந்தனர். இவர்களது கல்விப்பணி, சமூகப்பணி, ஆன்மீகப்பணி போன்றவற்றால் ஊட்டம் பெற்ற உள்ளங்கள் ஆயிரமாயிரம். இவர்களால் வாழ்வு பெற்றவர்கள் இன்று அகில உலகிலும் சிறந்த மனிதர்களாக, சிறந்த கிறிஸ்தவர்களாக, சிறந்த குடும்பத் தலைவர்களாக, குடும்பத் தலைவிகளாக வாழ்வதைக் கண்டும், கேட்டும், மனநிறைவு கொள்கின்றனர். இவர்களது இறையுறவு, இறைத்திட்டத்திற்கு பணிந்த மனது, சபைப்பற்று, எவ்வித இடர்வரினும் இறைவனில் கொண்ட அசையாத விசுவாசம், நேரிய சிந்தனை, துணிவுடன் சவால்களுக்கு முகங்கொடுத்தல், பணிந்தமனம், பாகுபாடு காட்டாது அனைவரையும் சமமாக மதித்தல், தலத்திருச்சபையுடன் ஒன்றிணைந்த வாழ்வு, பணியாற்றும் இடங்களிலுள்ள மக்களை அவரவர் நிலையில் ஏற்று மதிப்பளிக்கும் திறன் போன்ற சிறந்த விழுமியங்கள் இவர்களை மக்கள்பால் ஈர்த்ததில் வியப்பில்லை.

இன்னும் அருட்சகோதரி லோறா தனது கல்விப்பணியைத் திறம்பட ஆற்றிக்கொண்டிருந்தவேளை "அழைப்புக்குள் அழைப்பாக" திருக்குடும்ப தியானயோகக் கிளையில் தன்னை அர்ப்பணித்து செபத்தினதும், தபத்தினதும் பெண்ணாகத் திகழ்கின்றார்.

## வெள்ளிவிழா நாயகிகள்

கடந்த கால் நூற்றாண்டுகளாக இறை, மனித சேவையில் தம்மை அர்ப்பணித்து, தாம் அளித்த "ஆம்" என்ற வார்த்தைக்குப் பிரமாணிக்கத்துடன் செயல்வடிவம் கொடுத்து, இன்று 25 இனிய கனிகளை உதிர்த்து வெள்ளிவிழா நிகழ்வில் தடம் பதித்து நிற்கும் அருட்சகோதரி இதயமலர், மரியகொறற்றி, லூர்துமேரி, மரியறாணி, அனஸ்ரேஷியா ஆகியோர் பொறுப்புணர்வுடனும், பற்றுடனும், இறைத்திட்டத்திற்குப் பணிந்த மனதுடனும், ஆர்வத்துடனும், துடிப்புடனும், தம்மிடம் வேண்டப்படும் அனைத்துப் பணிகளிலும் தம்மைக் கையளித்து நிற்கின்றனர்.

இன்னும், "உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள்" என்னும் இறை இயேசுவின் பொன்மொழிகளை இதயத்தில் ஏற்று, அருட்சகோதரி அனஸ்ரேஷியா தனது துறவு வாழ்வின் ஆரம்பகாலந்தொட்டு இற்றைவரை மறைப்பரப்பாளராகப் பாக்கிஸ்தானில் பணியாற்றி வருகின்றார். அவ்வாறே அருட்சகோதரி மரியறாணி அண்மைக்காலம்வரை பாக்கிஸ்தானில் பணியாற்றிய பின்னர் தற்பொழுது தென் ஆபிரிக்காவில் மறைப்பரப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றார். அகச்சூழல், புறச்சூழல் எவையும் இவர்களது பணியார்வத்திற்குத் தடைபோடவில்லை. இறையாட்சியை மனித மனங்களில் விதைத்து, சிறந்த அறுவடையைப் பெறுவதும், மனித மாண்பைப் பேணி வளர்ப்பதையும் மட்டுமே இவர்கள் தமது குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றுகின்றனர்.

"முன்னேறிச் செல்லுங்கள் உங்கள் ஓட்டத்தைத் தடை செய்யக்கூடியது ஒன்றுமில்லை" என்ற எமது நிறுவுனரின் அருள் மொழிக்கேற்ப இவர்கள் தமது ஆன்மீகத்திலும், பணியிலும், இறை – மனித உறவிலும் என்றும் முன்னேறிச் செல்லவும், தமது அனைத்துச் செயற்பாடுகளிலும், "இறைவனது மகிமை" ஒன்றையே தேடவும், தமது அருங்கொடையாகிய "ஐக்கியத்தை" எந்தச் சூழ்நிலையிலும் கட்டியெழுப்பவும் ஆசிகூறி மன்னா வாசகர்கள் சார்பாக வெண், பொன் யூபிலி வாழ்த்துக்களைக் கூறி நிற்கின்றோம்.

**"AD MULTUS ANNOS"**

## வெள்ளிவிழா நாயகிகள்


அருட்சகோதரி லூர்துமேரி


அருட்சகோதரி அனஸ்ரேஷியா


அருட்சகோதரி இதயம்

## பொன்விழா நாயகிகள்


அருட்சகோதரி இயூஜின் சோசை


அருட்சகோதரி அலிஸ் சோசை


அருட்சகோதரி மரிய கிளாரா


அருட்சகோதரி லோறா


அருட்சகோதரி யுடொக்சி


அருட்சகோதரி மிரியம்

# மியான்மாரில் மக்கள் எழுச்சி

கடந்த சில நாட்களாக, 'பர்மா' என்று முன்னர் அழைக்கப்பட்ட மியான்மாரில் நிகழும் புத்த பிக்குகளின் அமைதிப் புரட்சி அந்நாட்டு இராணுவ ஆட்சியை அதிர வைத்திருக்கிறது. 18 ஆண்டுகளுக்குமேல் அங்கே நடைபெறுகிற இராணுவத் தளபதிகளின் ஆட்சிக்கு எதிர்ப்புகள் அவ்வப்போது எழுந்தாலும், இப்போது புத்த துறவிகளின் அமைதி ஊர்வலங்கள் மக்களிடம் ஓர் எதிர்பாராத எழுச்சியைத் தோற்றுவித்திருக்கின்றன. உலக நாடுகளின் கவனத்தையும் ஈர்த்திருக்கின்றன.

பர்மாவில் 1988ஆம் ஆண்டு அன்றைய அரசினை எதிர்த்துக் கலவரங்கள் வெடித்தன. ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். அடுத்த ஆண்டே இராணுவத் தளபதிகள் சேர்ந்து இராணுவ ஆட்சியைக் கொண்டுவந்தனர். இராணுவத் தலைமையினால் பர்மாவிற்கு 'மியான்மர்' என்று பெயரிடப்பட்டது. 1990 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் சூகேயின் தலைமையிலான மக்களாட்சிக்கான தேசிய லீக் கட்சி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியது. ஆனால் இராணுவத் தலைமை தேர்தல் முடிவுகளைத் தள்ளிவிட்டு கேயை வீட்டுச் சிறையில் வைத்தது. மக்களின் எதிர்ப்பாலும், உலக நாடுகளின் கண்டனத்தாலும் கேயி விடுதலை செய்யப்பட்டார். மீண்டும் 2003ஆம் ஆண்டு வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். இராணுவத்தின் அச்சுறுத்தலுக்கு அஞ்சாமல் மக்களாட்சி மீண்டும் மியான்மாரில் மலர அமைதி வழியில் உழைத்த கேயிக்கு உலகின் பாராட்டுக்குரிய நோபல் பரிசும் வழங்கப்பட்டது.

இதற்கிடையில் சென்ற ஓகஸ்ட் மாதத்தில் எரிபொருட்களின் விலையை இருமடங்காக உயர்த்தியது அரசு. அதற்கு மக்கள் எதிர்ப்புக் குரல் கொடுத்தார்கள். புத்த துறவிகள் இராணுவ ஆட்சியை எதிர்த்து அமைதிப் புரட்சியில் இறங்கினார்கள். முதலில் ஆட்சி அதனைக் கண்டுகொள்ளவில்லை. ஆனால் தொடர்ந்து எட்டு நாட்களுக்குமேல் புத்த துறவிகள் அமைதியான ஊர்வலத்தை நடத்தி வந்தார்கள்.

ஒருமுறை கேயின் வீட்டின் வழியாகச் சென்று அவரையும் வாழ்த்தி நடந்தார்கள். புத்த துறவிகளின் எண்ணிக்கையும், மக்களின் ஆதரவும் நாளுக்கு நாள் பெருகின. இராணுவம் கடுமையான எச்சரிக்கை விடுத்தது. புத்த சமயத் தலைவர்களையும் அச்சுறுத்தியது. செப்ரெம்பர் 24ஆம் நாள் ஒரு இலட்சம் பேர் இரங்கூன் வீதிகளில் எதிர்ப்பு ஊர்வலம் நடத்தினர். 50,000க்கும் மேற்பட்ட துறவிகள் அமைதியாக செபித்துக்கொண்டே சென்றனர். பொதுமக்கள் அவர்களுக்குப் பாதுகாப்பாக மனிதச் சங்கிலி அமைத்தனர். இதுவரையில் எந்த வன்முறையையும் காட்டாத இராணுவ அரசு சென்ற 24ம் திகதி



புதன்கிழமை வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டது. மக்கள் வெகுவாக மதிக்கும் புத்த துறவிகளைக் கண் மூடித்தனமாகத் தாக்கினர் இராணுவத்தினர். பலர் காயமுற்றனர். மூன்று பேர் உயிரிழந்ததாக தாய்லாந்தில் தங்கியிருக்கும் பர்மா தலைவர் தெரிவித்தார். புத்த குருமடங்களும் தாக்கப்பட்டன.

அமைதியான போராளிகள்மேல் வன்முறை ஏவப்பட்டதை உலக நாடுகள் அனைத்தும் கண்டித்தன. ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்காவும் இணைந்து கண்டன அறிக்கை வெளியிட்டிருக்கின்றன. அமைதியான போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள்மேல் துப்பாக்கிச் சூடு நடத்தித் தாக்கிய இராணுவத்தின் தலைமையைக் கண்டித்த அவர்கள், பல புத்த மதகுருமார்களைச் சிறை வைத்திருப்பது குறித்துக் கவலை தெரிவித்திருந்தார்கள். சூ. கேயி மற்றும் பிற கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று பிற உலக நாடுகளும் வற்புறுத்துகின்றன. ஐ.நா.வின் பாதுகாப்புச் சபையும் ஓர் அவரசக் கூட்டம் நடத்தியிருக்கிறது. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பிற்கு ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் சிக்கலைத் தீர்க்கத் தனது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கின்றன. குறிப்பாக, சீனாவிற்கும், இந்தியாவிற்கும் சிறப்பான பொறுப்பு இருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றன.

உலக நாடுகள் அனைத்தும் மியான்மாரின் இராணுவத் தலைமையக் கண்டித்திருக்கும் வேளையில் சீனாவும், இந்தியாவும் மட்டும் இது மியான்மாரின் உள்நாட்டுப் பிரச்சினை என்று தட்டிக் கழிக்கின்றன. ஏற்கனவே இவ்வாண்டு ஜனவரியில் ஐ.நாவில் எழுப்பப்பட்ட கண்டனத் தீர்மானத்தைச் சீனாவும், ரஷ்யாவும் தங்கள் சிறப்பு வாக்குகளைப் பயன்படுத்தி தள்ளுபடி செய்யச் செய்தன. எனவே, இப்போதும் சீனா மியான்மாரின் இராணுவத் தலைமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்காததில் வியப்பில்லை. ஆனால், மக்களாட்சியின் சிறப்பு அடிப்படையாக விளங்கும் இந்திய நாடு ஏன் மியான்மரின் இராணுவ ஆட்சியைக் கடுமையாக எதிர்க்கவில்லை? உலகின் பெரும்பாலான நாடுகள் மியான்மாரின் மேல் செய்திருக்கும் பொருளாதாரத் தடையை மேலும் அதிகப்படுத்தப் போவதாக அறிவித்திருக்கும்போது இந்தியா மட்டும் வாழாவிருப்பது ஏன்? பட்டும் படாமல் தன்னுடைய கவலையைத் தெரிவிப்பதாக இந்திய வெளியுறவுத் துறை கூறுகிறது.

நமது நாட்டிற்கும், மியான்மாருக்கும் இடையில் ஒத்துழைப்பிற்கான காரணங்கள் பல உள்ளன. வடகிழக்கு மாநிலங்களின் பாதுகாப்பு, அங்கு மியான்மர் வழியாக அமையவிருக்கும் சாலை, இருநாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம் ஆகியவற்றைக் குறிப்பாகச் சொல்லலாம். மியான்மரின் கடற் பகுதியில் எண்ணெய் வள ஆய்விற்கு இந்தியா உதவுகிறது. மியான்மரின் இராணுவத்திற்கும் படைக்கலன்களை விற்கிறது. அதேபோல அங்கே இந்தியாவிற்கு எதிரான தீவிரவாதக் குழுக்கள் செயற்பட முடியாமல் அந்நாட்டு அரசு தடுக்கிறது. எனவே, மியான்மரில் நிகழும் அரசியல் நிகழ்வுகள் இந்தியாவைப் பலவழிகளில் பாதிக்கும் என்பதால், நாமும் நமது நிலைப்பாட்டினைத் தெளிவுபடுத்த வேண்டும். நமது செல்வாக்கைப் பயன்படுத்தி இராணுவத்தின் வன்முறைப் போக்கைக் கைவிடச் செய்யவேண்டும்.

மக்களாட்சிக் கொள்ளையைப் பின்பற்றும் இந்தியா மக்களாட்சி மீண்டும் மலர எழுச்சி கொண்டிருக்கும் பர்மா நாட்டு மக்களுக்கும் சிறையில் அடைப்பட்டுக் கிடக்கும் கேயிக்கும் தனது ஆதரவை வெளிப்படுத்த வேண்டும்.●

# கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்: அதிவந்தனைக்குரிய ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

தேசிய சமாதானப் பிரிவு, வாழ்வுதயம், மன்னார்.

இயக்குனர்: அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார்

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2222140, Fax : 023-2222893, E-mail : valvum@sltnet.lk


## "இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்"



மாதோட்ட மண்ணின் முக்கிய கிராமங்களில் ஒன்றாகத் திகழ்வது நானாட்டான் பிரதேசத்தில் உள்ள சூரியகட்டைக்காடு கிராமமாகும். இக்கிராமத்தைச் சேர்ந்த ஆசிரியர் அம்றோஸ் ஜோன் பொஸ்கோ அவர்கள் மன்/ இலகடிப்பிட்டி றோ.க.த.க. பாடசாலையின் கல்வி வளர்ச்சியில் ஆர்வமுடன் பணியாற்றி வருகின்றார்.

இவர் கல்விப் பணியில் மாத்திரமல்ல, பேச்சுப் போட்டி, பாடல் போட்டி, வில்லுப்பாட்டுப் போட்டி மற்றும் மன்னார் மாவட்டத்தின் பாரம்பரியக் கலையான நாட்டுக்கூத்துப் போட்டிகளிலும் மாவட்ட பரிசில்களைப் பெற்றுக்கொண்டவர். இவை மாத்திரமல்ல வாழ்வுதயத்தின் வளர்ச்சிப் பாதையில், சமூக முன்னேற்றப் பணிகளில் மக்களைக் கவர்ந்த ஒரு சிறந்த வளவாளராகவும் பணியாற்றுகின்றார்.

இவர் இவ்வருடம் அகில இலங்கை ரீதியாக இடம்பெற்ற அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியில் "உழவர் பாடல்" போட்டியில் அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவருக்கு சான்றிதழும் பரிசிலும் வழங்கும் வைபவம் கொழும்பு கொறண சிறிபாலிக் கல்லூரியில் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் கௌரவ மகிந்த யாப்பா அபேவர்த்தன அவர்களின் தலைமையில் இடம்பெற்றதோடு அமைச்சர் அவர்களினால் கௌரவிக்கப்பட்டார். இவரின் திறமை சார்ந்த பணிகள் மென்மேலும் வளர வாழ்வுதயக் குடும்பம் வாழ்த்துகின்றது.

## உலக சமாதன நிகழ்வு





உலக சமாதான நாளான 21.09.2007 அன்று மன்னாரில் கறிற்றாஸ் வாழ்வுதயம் உட்பட மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களால் கூட்டாக இணைந்து ஒழுங்குபடுத்தப்பட்ட சமாதான நிகழ்வானது மன்னார் சிறுவர் பூங்கா வளாகத்தில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமானது.

இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் வெள்ளை உடை அணிந்தவண்ணம், சமாதான துவிச்சக்கர வண்டி ஓட்டப் பவனியில் பங்குபற்றினர். பின்பு சர்வமத பிராத்தனைகளும், சர்வமதத் தலைவர்களது கருத்துரைகளும், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வண பிதா விக்ரர் சோசை அவர்களால் உலக சமாதான நாள் தொடர்பான சிறப்புரையும் வழங்கப்பட்டது.

பின்பு சமாதானத்தின் தேவையை வெளிக்காட்டும் நிகழ்வாக வெண் புறாக்கள் சர்வமதத் தலைவர்களினால் வானவெளியில் பறக்க விடப்பட்டன.

உலக சமாதான தினமாகிய இந்நாளிலே சமாதானத்தின் தேவையை வெளிப்படுத்தும் வகையில் அரச சார்பற்ற நிறுவன பணியாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## பம்மைமடுப் பிரதேசத்தில் சிரமதானப்பணி



வவுனியா மாவட்டத்தின் பம்மைமடு பிரதேசத்திற்குட்பட்ட தவசிகுளம் கிராமத்தில் நீண்ட நாட்களாக பாவிக்க முடியாத நிலையில் பாதை ஒன்று காணப்பட்டது.

இதன் தேவையை உணர்ந்த மக்கள் சிரமதானப் பணியின் மூலம் அப்பாதையைத் துப்பரவு செய்து மக்களின் பாவனைக்காக திறந்துவிட்டுள்ளனர். இச்சிரமதானப் பணி பம்பைமடுப் பங்குத்தந்தை தலைமையில் முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் ஊக்குவிப்புக் குழுக்களின் உதவியுடன் இடம்பெற்றது. இச்சிரமதானப் பணியை வாழ்வுதயத்தின் சமாதானப் பிரிவின் கள ஊக்குவிப்பாளர் திரு. பிரதீபன் ஏற்பாடு செய்திருந்தார்.

## சிரமதானப் பணியின் மூலம் தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு



மனிதனின் அடிப்படைத் தேவைகளில் நீரும் பிரதானமானதொன்றாகும். இதன்படி வவுனியா சிதம்பரபுரம் நலன்புரி நிலைய மக்கள் கடும் வரட்சி காரணமாக கிணறுகளில் தண்ணீர் இன்றி சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்து வந்தனர்.

இம்மக்களின் துன்ப நிலையை அறிந்த வாழ்வுதய சமாதானப்பிரிவு பிரதான கிணறு ஒன்றைச் சிரமதானப் பணியின் மூலம் ஆழத்தோண்டும் நடவடிக்கையை மேற்கொண்டது. இதன் பயனாக நீண்ட நாட்கள் குடிநீர் இன்றி அல்லற்பட்ட மக்கள் த்ண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டனர். இதில் நலன்புரி நிலைய வாழ் மக்களில் 50க்கு மேற்பட்ட மக்கள் கலந்து இச்சிரமதானப் பணியை திறம்பட செய்து முடிப்பதற்கு வாழ்வுதயத்தின் கிராமிய விழிப்பூட்டல் பிரிவின் கள ஊக்குவிப்பாளர் திரு. ஏ. விமலநாதனும், அந்நலன்புரி நிலையத்தின் விழிப்பூட்டல் குழு உறுப்பினர்களும் பூரண ஒத்துழைப்பினை வழங்கியிருந்தனர்.

## வவுனியாக் கோட்டத்தில் முரண்பாடுகளைத் தீர்த்தல் தொடர்பான கருத்தமர்வு



கடந்த 24.09.2007ல் கோமரசங்குளம் பங்கிற்குட்பட்டதும் ஆசிகுளம் கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்டதுமான சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் வசித்து வரும் மக்கள் மத்தியில் பணிசெய்யும் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் நிலையத்தில் அமைக்கப்பட்ட குழுக்களின் பிரதிகளுக்கும் வாழ்வுதய சமாதான பிரிவால் ஒரு நாள் கருத்தமர்வு சிதம்பரம் இருதய ஆண்டவர் ஆலயப் பயிற்சி நிலையத்தால் நடைபெற்றது. இதில் 51 பயனாளிகள் கலந்து பயன்பெற்றனர்.

நிகழ்வின் வளவாளர்களாக ஒபர் வவுனியா நிறுவனத்தின் வளவாளர்களான செல்வின், பிரதீபன், சுரேஸ் ஆகியோர் வருகை தந்திருந்தனர். நிகழ்வை ஏற்பாடு செய்த வவுனியா N.A.P. களப்பணிப்பாளர் ஏ. விமலநாதனும் மன்னாரில் இருந்து வருகை தந்த சமாதான பிரிவு இணைப்பாளர் திரு. ஜெயதாஸ் அவர்களும் இதில் கலந்து சிறப்பித்தனர்.

## பள்ளிமுனையில் சமூக விழிப்பூட்டல் சமாதானச் செயலமர்வு



மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயம் நிறுவனத்தின் தேசிய சமாதானப் பிரிவினால் மன்னார் பள்ளிமுனைக் கிராமத்து மக்களுக்கான சமூக விழிப்பூட்டல் நிகழ்வானது கடந்த 09.09.2007 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெற்றது.

போதைவஸ்த்து ஒழிப்புத் தொடர்பான தலைப்பில் அருட்தந்தை வின்சன் பற்றிக் மற்றும் அவரது குழுவினர்கள், ஆசிரிய ஆலோசகர் திருமதி தனேஸ்வரன் ஆகியோர் உரைகளை வழங்கினர். எவ்வாறு இந்தக் கிராமத்தில் போதைவஸ்திற்கு அடிமையானோரைக் காப்பாற்றுவது? எவ்வாறு விற்பனையில் ஈடுபடுவோரைத் தடுப்பது? மற்றும் அவர்களுக்கான மாற்றுத் தொழிலை அமைப்பது தொடர்பாகவும், மற்றும் போதைப்பொருள் ஏற்படுத்துகின்ற பாரிய நோய்கள் தொடர்பாகவும் கருத்துக்கள் வழங்கப்பட்டன.

மிகவும் பயன்மிக்க இந்நிகழ்விற்கு பள்ளிமுனை பங்குத்தந்தை அருட்தந்தை கிறிஸ்ரியன் வாஸ் அடிகளார் கலந்து சிறப்பித்ததுடன் கிராமத்தில் உள்ள இளைஞர்கள், பெண்கள், ஆண்கள் உள்ளடங்கலாக 80 பேர் கலந்துகொண்டு பயன் பெற்றனர். நிகழ்ச்சி பற்றிய தங்களது திருப்தியான கருத்துக்களைக் கூறியதுடன், எதிர்வரும் காலங்களிலும் இவ்வாறான நிகழ்வுகளை வழங்குமாறும் வேண்டுகோள் விடுத்தனர். மாலை 5.30 மணியளவில் நிகழ்வுகள் நிறைவடைந்தன.

## மனித உரிமைகளைப் பாதுகாப்போம்



பிறரன்புச் சேவையினை நோக்காகக் கொண்டு தேசிய சமாதான செயற்றிட்டத்தின்கீழ் தனது செயற்பாட்டினை முன்னெடுத்துச் செல்லும் வாழ்வுதயத்தின் சமாதானப் பிரிவானது அண்மையில் மன்னார் பிரதேசத்திற்கு உட்பட்ட கிராம சேவகர்களை ஒன்றுசேர்த்து, "மனித உரிமைகளைப் பாதுகாப்போம்" எனும் எண்ணக்கருவில் செயலமர்வு ஒன்றை புனித செபஸ்ரியார் பேராலய பணிமனையில் நடாத்தியது.

இச்செயலமர்வினை அருட்பணியாளர் ஜெயபாலன் குருஸ் அவர்கள் தலைமைதாங்கி முன்னெடுத்துச் சென்றார். தற்கால போர் சூழல்களில் மனித உரிமைகள் மீறப்படும்போது திருச்சபை அதற்கு எவ்வாறு பதில் கொடுக்கின்றது? அதற்குத் திருச்சபையின் பங்கு என்ன? சேவகர்களின் பங்களிப்பு தற்காலகட்டத்தில் எவற்றை மையமாக வைத்து அமைய வேண்டும்? மனித உரிமைகள் மீறப்படும் போது உடனடியாக செய்யவேண்டிய பணிகள் எவை? அவைகளை எவ்வாறு வெளி உலகிற்கு கொண்டுவரலாம் என்பது தொடர்பான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இச்செயலமர்வில் மன்னார் பிரதேச செயலர் திருமதி ஸ்ரான்லி டி மெல் மற்றும் வாழ்வுதய இயக்குனர் அருட்பணி. பெப்பி சோசை, வாழ்வுதயத்தின் திட்ட அலுவர் திரு. செல்வின் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## முரண்பாடு தொடர்பான செயலமர்வு



முரண்பாடு தொடர்பான செயலமர்வு கடந்த 18.09.2007 அன்று உயிலங்குளத்தில் நடைபெற்றது. *முரண்பாடுகளைத் தீர்த்தல* என்னும் தலைப்பில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வாக இது நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் முருங்கன் மறைக்கோட்டத்தை சேர்ந்த 35 முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் வாழ்வுதயத்தின் சமாதான இணைப்பாளரும் நிர்வாக அலுவலருமான E. A. ஜெயதாஸ், ஆசிரியர் ஜோன் பொஸ்கோ, நானாட்டான் பிரதேச சமாதான ஊக்குவிப்பாளர் V. J. பிரதீபன் (ஜீவன்) என்பவர்கள் கலந்து கொண்டனர். இதில் வளவாளராக ஆசிரியர் பொஸ்கோ கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வை வாழ்வுதயத்தின் சமாதான ஊக்குவிப்பாளர் ஏ. ஜே. பிரதீபன் (ஜீவன்) அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார்.

# கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)


போஷகர்
அதிவந்தனைக்குரிய
ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்தந்தை பெப்பி சோசை

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2222140, Fax : 023-2222893, E-mail : valvum@sltnet.lk


## நீதி நேர்மையுடன் ஒருவருக்கொருவர் உதவிபுரிந்து ஒற்றுமையுணர்வுடன் செயற்படுங்கள்!

### மன்னார் மறைமாவட்ட ஆயர்



அண்மையில் வேதசாட்சிகளின் புனித பூமியாகிய தோட்டவெளிக் கிராமத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் வாழ்வுதயத்தின் நிரந்தர வீட்டுத்திட்ட அத்திவாரக்கல் நாட்டும் நிகழ்விலேயே மேற்கண்டவாறு கூறினார்.

கறிற்றாஸ் வாழ்வுதயமூடாக முன்னெடுக்கப்படும் இவ்வீட்டுத்திட்டத்தை பெருமனம் படைத்துத் தந்துள்ள கறிற்றாஸ் - பிரான்ஸ் நிறுவனத்திற்கும் ஆயர் தனது நன்றிகளைக் கூறினார். கறிற்றாஸ் - பிரான்ஸ் அமைப்பானது அங்குள்ள மக்களின் ஒறுத்தல் முயற்சியின் மூலம் சேகரித்த பணத்தையே எமக்கு இங்கு அனுப்புகின்றது. அந்நாட்டில் உள்ள மக்களின் ஒறுத்தல் முயற்சியில் கிடைத்த இப்பணத்தை நாம் மிகவும் பெறுமதி மிக்கதாக மதிக்க வேண்டும். வீண் விரயம் மேற்கொள்ளாமல் அனைத்து மக்களும் கல்லால் கட்டப்பட்ட வீடாக இந்த வீடுகளை நினைக்காமல், ஒற்றுமையுணர்வுடனும், விட்டுக்கொடுப்புடனும் கட்டப்பட்ட வீடாக இவற்றை மாற்ற வேண்டும். அப்போதுதான் இப்புனித பூமியின் மாண்பு மதிக்கப்படும்.

இவற்றைவிட இவ்வீட்டுத்திட்டத்தை மிகவும் சிறப்பாகத் திட்டமிட்டு வழிநடாத்த இருக்கும் கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் இயக்குனர், பணியாளர்களுக்கு மக்கள் தங்களின் பூரண ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டும். அத்தோடு அடிக்கடி பல்வேறு முன்னேற்றகரமான ஒன்றுகூடல்களையும், ஏனைய சமூக குழுமங்கள் போன்றவற்றையும் அமைத்துச் சிறப்பாக முன்னெடுக்க வேண்டும். அப்போதுதான் இவ்வீட்டுத்திட்ட நிர்மாணப் பணிகளை நாம் குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் நிர்மாணித்து முடிக்க முடியும் என்று கூறி இறையாசீரையும் வேண்டி தனது உரையினை நிறைவு செய்தார்.

இந்நிகழ்வில் கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்தந்தை எஸ். ஜே. பெப்பி சோசை அடிகளார் மற்றும் பங்குத்தந்தை, பங்குமக்கள், வாழ்வுதயக் கட்டிட தொழில்நுட்ப அலுவலகர்கள், வாழ்வுதயப் பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## கறிற்றாஸ் சிறிலங்கா செடேக்கின் கள மீளாய்வு

கறிற்றாஸ் சிறிலங்கா செடேக் (SEDEC)இன் திட்ட முகாமைத்துவத்தின் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்டத்தில் கடந்த 7 வருடங்களாக அமுல்படுத்தப்பட்டுவரும் கிராமிய விழிப்பூட்டல் செயற்பாடுகளையும், அத்தோடு அப்பிரிவினால் மேற்கொள்ளப்படும் நுண் கடன் திட்டங்களையும் மீளாய்வு செய்வதற்காக கறிற்றாஸ் சிறிலங்காவின் திட்ட முகாமைத்துவக் குழுவினர் மன்னாருக்கு வருகை தந்தனர்.

இவர்கள் 15 - 17ம் திகதிவரை மன்னார் வவுனியா மாவட்டங்களில் வாழ்வுதயக் கிராமிய செயற்பாடுகள் பற்றிய மீளாய்வினை மேற்கொண்டார்கள்.

இவர்களின் இம்மீளாய்வு தேசிய மட்டத்திலான இச்செயற்பாடுகளுக்கு மிகவும் பயனுள்ள ஒன்றாகவும், இச்செயற்பாடுகளை எதிர்காலத்தில் எவ்வாறான முறையில் மேலும் சிறப்பாக முன்னெடுக்க முடியும் என்பதை தீர்மானிப் - பதற்குப் பேருதவியாகவும் அமைந்தது. இம்மீளாய்வு இரண்டு பிரிவுகளாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதில் ஒரு குழுவினர் கிராமிய விழிப்பூட்டல் பிரிவின் குழுச் செயற்பாடுகளை மீளாய்வு செய்தனர். மற்றைய குழுவினர் கிராமிய விழிப்பூட்டல் செயற்பாடுகள் ஊடாக முன்னெடுக்கப்படும் நுண்கடன் திட்டங்களையும் SIYB, GYB பயிற்சித்திட்டங்களையும் மீளாய்வு செய்தனர். இம்மீளாய்வில் இப்பிரிவு வாழ்வுதயப் பணியாளர்கள் தமது பூரண ஒத்துழைப்பையும், தமது கருத்துக்களையும் வெளிப்படுத்தியதோடு சமகால் சூழ்நிலைகள் பற்றியும் கலந்துரையாடினர்.



*வவுனியா மாவட்டத்தில் இயங்கும் கோமரசன்குளம் பங்கிற்குட்பட்ட வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழு உறுப்பினர்களுக்கு முருகனூர் விவசாயப் பயிற்சிப் பண்ணையில் இயற்கைப் பசளை தயாரிக்கும் பயிற்சி கொடுக்கப்பட்டபோது வவுனியாப் பிரதேச வாழ்வுதய அலுவலர் திரு. ஏ. விமலநாதன் அவர்களையும் குழு உறுப்பினர்களையும் காணலாம்.*

## கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் "உதவிக்கரம்" பிரிவின் செயற்பாடுகள் எமக்கு பூரண திருப்தியைத் தந்துள்ளது

### யுனிசெப் நிறுவனத்தின் பொறுப்பதிகாரி திரு. அன்ரிபுறூக்ஸ்

மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் மனித நேயப்பணிப் பிரிவுகளில் உதவிக்கரப்பிரிவும் ஒன்றாகும். இதன் பணிகளைச் சிறப்பாக முன்னெடுப்பதற்கு நிதியுதவிகளை வழங்கும் நிதிநிறுவனங்களுள் யுனிசெப் நிறுவனமும் அடங்கும். அண்மையில் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்தந்தை எஸ். ஜே. பெப்பி சோசை அடிகளார் தலைமையில் இச்செயற்பாடுகள் தொடர்பான ஒன்றுகூடல் உதவிகரப் பணிமனையில் நடைபெற்றது.

இதில் யுனிசெப் நிறுவனத்தின் பொறுப்பதிகாரி திரு. அன்ரிபுறூக்ஸ் மற்றும் திரு. வெடஸ்ரோ ஆகியோரும் வவுனியா, மன்னார் யுனிசெப் நிறுவனப் பொறுப்பாளர்களும், C.T.F. நிறுவன அலுவலர்களும், உதவிக்கரப் பிரிவு இயன் மருத்துவர் திரு. றாஜ்குமார் மற்றும் உதவிக்கரப்பிரிவு இணைப்பாளர் திரு. ஜோண் மற்றும் உதவிக்கரப் பிரிவு அலுவலர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இவ்வொன்று கூடலிலேயே யுனிசெப் நிறுவன அதிகாரி மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில், இவ்வுதவிக்கரப் பிரிவுப் பணிகள் மேலும் முன்னேற்றம் பெறுவதற்கு எதிர்கால செயற்பாடுகளில் கூடிய கவனம் செலுத்தப்படும் என்றும் கூறி, கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் பணிகளையும் பாராட்டினார். இவ்வொன்றுகூடலில் உதவிக்கரப் பிரிவுக்குத் தேவையான மூலப்பொருட்களுக்கு தற்போதைய சூழலில் தட்டுப்பாடுகள் நிலவுவதுபற்றியும், இப்பிரதிநிதிகளுக்கு எடுத்துக்கூறப்பட்டது.

இவ்வொன்றுகூடல் உதவிக்கரப் பிரிவின் மனித நேயப்பணிகளை மேலும் வளர்ப்பதற்கு பயனுள்ளதாய் அமைந்துள்ளது. இவ் உதவிக்கரப்பிரிவானது தற்பொழுது நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளாவன:

❖ செயற்கைக் கால் பொருத்துதல்.
❖ கால், கை சோர்வடைந்த நிலையில் அல்லது வளைந்த நிலையில் காணப்படும் பயனாளிகளுக்கு பட்டி தயாரித்து வழங்கல்.
❖ சக்கர நாற்காலி வழங்கல்.
❖ ஊன்றுகோல் (ஆம், எல்போ) வழங்குதல் (போரினால் பாதிக்கப்பட்டவர்கள்)
❖ போலியே சப்பாத்து தயாரித்து வழங்குதல்.

இதுபோன்ற பல பணிகளை உதவிக் கரம் பிரிவு ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







வாழ்வுதய உதவிக்கரப் பிரிவினூடாக கைப்பிடி உதவிபெற்ற எருக்கலம்பிட்டி சகோதரி பர்மிலா

## க.பொ.த.சா/த பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான கணனிப் பயிற்சி நெறி

கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் கணனிப் பயிற்சிப் பிரிவு தனது கல்விசார் செயற்பாடுகள் போன்றவற்றைக் கடந்த பல வருடங்களாக செயற்படுத்தி வருகின்றது. பல நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனப் பணியார்கள் எனப் பலர் இக்கணனிப் பிரிவூடாக கணனி அறிவைப் பெற்று பயன் அடைந்துள்ளார்கள்.

கடந்த காலங்களைவிட தற்பொழுது கணனியின் புதிய பாடநெறிகளையும் உடனுக்குடன் கொடுத்து இப்பிரிவு தனது பணியை செவ்வனே ஆற்றி வருகின்றது. பெரும்பான்மையாக க.பொ.த. சாதாரணதர, க.பொ.த. உயர்தர மாணவ மாணவிகளே இப்பயிற்சிகளை கறிற்றாஸ் - வாழ்வுதயத்தினூடாக பெற்றுக்கொள்கின்றனர்.

மேற்காட்டப்பட்டவாறு கடந்த மாதம் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு புதிய கணனிப்பயிற்சியை வாழ்வுதயம் ஆரம்பித்து நடாத்தி வருகின்றது. தற்பொழுது மென்பொருள் (Soft ware) பயிற்சி இம்மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது.

இவற்றைவிட கறிற்றாஸ் வாழ்வுதயத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் JRS நிறுவனத்தின் திட்டத்திற்கு அமைய கணனிப் பயிற்ச்சியானது நேர அட்டவணையின் அடிப்படையில் பகுதிபகுதியாக நடாத்தப்பட்டு வருகின்றது. குறிப்பாக தற்பொழுது Microsoft Office, Desktop Programme, Tally போன்ற பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன.

இப்பயிற்சியானது கறிற்றாஸ் வாழ்வுதய நிறுவனத்தின் இயக்குனர் அருட்தந்தை எஸ். ஜே. பெப்பி சோசை அடிகளாரின் எதிர்கால நற்சிந்தனையின் பேரிலேயே விசேடமாக பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இவற்றைவிட வாழ்வுதயப் பணியாளர்களின் ஆங்கில அறிவை மேலும் வளர்ப்பதற்கான ஆங்கில வகுப்புக்களும் பகுதி பகுதியாக பணியாளர்களுக்கு கொடுக்கப்பட்டு வருகின்றன. இவ் ஆங்கில வகுப்பானது தரமாக கல்வியூட்டக்கூடிய ஆசிரியர் திரு. எஸ். அந்தோனி பிச்சை அவர்களினால் நடாத்தப்படுகிறது. இவ்வாறான வலுவூட்டல்கள் இப்பணியாளர்களின் பணிகளை இலகுவாக்குவதற்கும், துரிதமாக்குவதற்கும் பேருதவியாக அமைகின்றது.

## உள்ளூர் இடப்பெயர்வால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் கடந்த மாத நிவாரணப் பணிகள்

சமகாலத்தில் எமது நாட்டில் போர் விஸ்பரூபம் அடைந்திருக்கும் காரணத்தால் மக்கள் உள்ளூருக்குள்ளேயே தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி வருகின்றனர். இம்மக்கள் தற்காலிகமாகக் குடியிருக்கும் பிரதேசங்களுக்கு சென்று வாழ்வுதயம் தனது மனிதநேய நிவாரணப் பணிகளை ஆற்றிவருகின்றது.

உடனடி நிவாரணமாக முசலிப் பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் முருங்கன் பாடசாலையில் தங்கவைக்கப்பட்டபோது 13 நாட்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டது. இவற்றைவிட தற்காலிக குடிசை மேய்வதற்கான கிடுகுகள் 8 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2 குடும்பங்களுக்கு மரணவீட்டுச் செலவுக் கொடுப்பனவும், அத்தோடு மருத்துவத்திற்கு கொழும்பு சென்று திரும்புதவற்கான போக்குவரத்துச் செலவுக் கொடுப்பனவுகள் கடந்த மாதத்தில் மட்டும் வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அடுத்த படியாக முசலிப்பிரதேசத்தில் இருந்து



இடம்பெயர்ந்த மக்களுக்கு கறிற்றாஸ் வாழ்வுதயம் உலர் உணவுக் கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றது.


செய்தித் தொகுப்பு :
**எஸ். அன்ரன் ராஜகாரியர் (ராஜன்)**
இணைப்பாளர், கிராமிய விழிப்பூட்டல் பிரிவு, வாழ்வுதயம், மன்னார்

# பழைய கேள்விகளும் புதிய பதில்களும்

**அடிப்படைவாத பெந்தக்கோஸ்தே சபைச் சகோதரர்களின் கேள்விகளுக்கு விவிலிய அடிப்படையில் தெளிவான, அழுத்தமான பதில்களைத் தாங்கி இத்தொடர் வருகிறது.**

தருவது தஞ்சை டோமி

தொடர் – 03

## 3) மரியா எனும் சாதாரண பெண்ணை எப்படி 'தேவதாய்' அல்லது 'இறைவனின் தாய்' என்பது?

'தாயில்லாமல் நானில்லை' என்பதும், 'தாயில்லாமல் சேயில்லை' என்பதும் யாரும் எப்போதும் மறுக்க முடியாத உண்மைகள். காரணம், தந்தையில்லாமல் கடவுளால் மனிதராகப் பிறக்க முடிந்தபோது தாயில்லாமல் அவரால் மனிதராகப் பிறக்க முடியவில்லை. இங்கே அன்னை மரியாவால்தான் கடவுள் மகிமைக்குள்ளானார் என்று கூறவரவில்லை. ஆனால், மகிமை பொருந்திய கடவுளை ஈன்றெடுத்ததால் மரியா இறைவனின் தாயாகும் பேறுபெற்றார் என்பதே கத்தோலிக்க விசுவாசம். பசுவை அது தரும் பாலுக்காகவும் நிலவை அது தரும் குளிர்ச்சிக்காகவும், பூவை அது தரும் மணத்திற்காகவும் புகழும்போது, மரியாவை அவர் பெற்றெடுத்த இறைமகன் இயேசுவுக்காக "இறைவனின் தாயே!" என்று புகழ்வதில் என்ன தவறு இருக்க முடியும்?

### பாரம்பரியத்தின் பார்வையில்...

வீரனைப் பெற்றெடுத்த தாயை 'வீரத்தாய்' என்றும், அறிஞனைப் பெற்றெடுத்த தாயை 'அறிஞனின் தாய்' என்றும், தியாகியைப் பெற்றெடுத்த அன்னையைத் தியாகத் தாய்' என்றும் அழைக்கும்போது இறைமகன் இயேசுவைப் பெற்றெடுத்தவரை இறைவனின் தாய்!' என்று அழைக்காமல் வேறு எப்படி அழைப்பது? அன்னை மரியாவுக்கு ஆயிரம் சிறப்பியல்புகளை இறைவன் மகிமையாகச் சூடி இருந்தாலும் 'இறைவனின் தாய்!' என்பது அன்னைக்குரிய மகிமையைச் சேர்ப்பதாக உள்ளது.

அனஸ்தேசியுஸ் மற்றும் நெஸ்தோரியுஸ் போன்றோர் "மரியாவை இறைவனின் தாய் என்று அழைக்கலாகாது. மாறாக இயேசுவின் தாய் என்றே அழைக்க வேண்டும்" என்று வாதாடி வந்தனர். அவர்களது வாதம், 'எப்படி ஒரு படைப்பான மரியா, படைத்தவரையே பெற்றெடுக்க முடியும்? என்பதாகும்.

இப்போதனை தவறானது, தப்பறையானது, கண்டனத்திற்குரியது என்று புனித சிறில் வாதிட்டார். பின்பு கி. பி. 431ஆம் ஆண்டு எபேசு நகரில் கூடிய திருச்சங்கம் "கிறிஸ்து மெய்யான இறைவன், மெய்யான மனிதன் என்ற திருச்சபையின் போதனை உண்மையென்றால் அன்னை மரியா இறைவனின் தாய்" என்று உறுதியாக அறிவித்தது.

### விவிலியத்தின் பார்வையில்...

ஆண்டின் தொடக்க நாளான ஜனவரி 1 ஆம் தேதி 'அன்னை மரியா இறைவனின் தாய்!' என்ற திருநாளை கத்தோலிக்க திருச்சபை நினைவுகூர்ந்து கொண்டாடுகின்றது. காரணம் இறையன்பின் உதவி நம் வாழ்வுக்கு மிகவும் தேவை என்பதாலேயே.

கபிரியேல் வானதூதர் மண்ணிற்கு கொண்டு வந்து மரியாவிடம் அறிவித்த மங்களகரமான செய்தியில், "தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப்போகும் குழந்தை இறைமகன் எனப்படும்" (லூக் 1:35) என்று அறிவித்தார். இதிலிருந்து மரியா ஈன்றெடுத்த மைந்தன் இறைவனின் மகன் என்பது உறுதியாகிறது. இன்னொன்று, மரியா எலிசெபெத்தம்மாளைச் சந்திக்கச் சென்றபோது, எலிசபெத்து பரிசுத்த ஆவியால் நிரம்பியவராக, மரியாவைப் பார்த்து, "பெண்களுக்குள் நீர் ஆசீர் பெற்றவர். உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசீர் பெற்றதே. என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்?" (லூக் 1:42-43) என்று கூறினார். பரிசுத்த ஆவியே மரியா சாதாரண பெண்ணல்ல. மாறாக, இறைவனின் தாய் என்று எலிசபெத்தம்மாள் வழியாக கூறியுள்ளபோது ஆவியானவரின் சான்றைவிட வேறு சான்றும் நமக்குத் தேவையோ!

மேலும் யோவா 1:1-4இல் "தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. கடவுளாயும் இருந்தது.... வாக்கு மனிதர் ஆனார். நம்மிடையே குடிகொண்டார்" என்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து கடவுளாயிருந்த அதே வாக்கு மனிதரானார் என்றால் அவரைப் பெற்றெடுத்த தாயும் இறைவனின் தாய் என்று பொருள் கொள்ளலாம் இல்லையா?

### மரியா இயேசு என்ற முழு இறைமகனின் தாய்!

இயேசுக் கிறிஸ்துவிடம் இறையியல்பு, மனித இயல்பு என்ற இரு இயல்புகள் இருக்கின்றன. ஆனால் ஆள் வடிவில் ஒரே ஆள் - இறை ஆள். மரியா மனித இயல்பில் கிறிஸ்துவைப் பெற்றெடுத்திருந்தாலும், இயேசு என்ற இறை ஆளின் தாயாக இருக்கின்றார். இதைச் சாதாரண வாழ்க்கையில்கூட பொருத்திப் பார்க்க முடியும். என் தாயும் தந்தையும் என் உடலுக்கு உருக்கொடுத்தவர்கள். என் ஆன்மா இறைவனின் படைப்பு. என் பெற்றோர் நான் உருவாக மட்டுமே காரணமாக இருந்தபோதும், முழு மனிதனாகிய எனது பெற்றோர் என்றே அழைக்கப்படுகின்றனர். உலகில் எந்தப் பெற்றோரும் உடலின் பெற்றோராக மட்டும் அழைக்கப்படுவதில்லை. மாறாக, குறிப்பிட்ட முழு நபரின் தாய், தந்தை என்றே அழைக்கப்படுகின்றனர். அதுபோல் மரியாவை 'இறைவனின் தாய் என்று கூறும்போது மரியா' 'இறைவனைப் பெற்றெடுத்தவர்' என்று நாம் கூறுவது கிடையாது. மாறாக, 'இறைவனும், மனிதனுமான இயேசுக் கிறிஸ்துவைப் பெற்றெடுத்தவர்' என்றே கூறுகின்றோம்.




அன்னை மரியா அனைவரின் தாய். யோவான் 19:21ல் இயேசு தம் அன்புத் தாயிடமும், அன்புச் சீடரிடமும் கூறிய வார்த்தைகள் (இயேசு தம் தாயிடம், 'அம்மா இவரே உம் மகன்" என்றார். பின்னர் தம் சீடரிடம், "இவரே உம் தாய்" என்றார்). நம் அனைவரையும் பெற்றெடுத்த தாய் உண்டு என்றாலும் இயேசு, 'இவரே உம் தாய்' என்று கூறியதனால் அன்னை மரியா நமது ஆவிக்குரிய வாழ்வில் நம் தாயாகிறார்.

### இரண்டாம் வத்திக்கான் சங்கம் ...

அன்னை மரியா திருச்சபையின் தாய்' என்பதை பின்வருமாறு கூறுகிறது. "இவர் இறை மீட்பரின் அன்னையாகவும், எவரையும் மிஞ்சும் முறையில் ஆண்டவரோடு தாராளமாக ஒத்துழைத்த துணையாளராகவும், தாழ்மை கொண்ட அடியாராகவும் விளங்கினார். கிறிஸ்துவைக் கருத்தாங்கி பெற்றெடுத்துப் பேணி வளர்த்தார். கோயிலில் தந்தைக்கு அர்ப்பணித்து இறுதியாகச் சிலுவையில் உயிர்விடும் தம் மகனோடு அவரும் துன்புற்றார். இவ்வாறு மனிதருக்கு அருள் வாழ்வைத் திரும்பப் பெற்றுத் தரக் கீழ்படிதல், நம்பிக்கை, விசுவாசம், பற்றியெரியும் அன்பு என்பவற்றால் நிறைவாழ்வு அலுவலில் மிகச்சிறப்பான விதத்தில் ஒத்துழைத்தார். இதனால்தான் அருள் நிலையைப் பொறுத்தமட்டில் மரியா நமக்குத் தாயாக அமைந்தார். (திருச்சபை எண் - 61) இப்படி கத்தோலிக்கப் பாரம்பரியப் போதனையின் பார்வையிலும், விவிலிய பார்வையிலும், சாதாரண மனிதப் பார்வையிலும் அன்னை மரியா இறைவனின் தாய் என்பது ஏற்றுக்கொள்ளவும், புரிந்துகொள்ளவும்கூடிய ஒரு விசுவாச உண்மையாகும்.

*(கேள்வி பதில் தொடரும்...)*



"பணம் உடையவருக்கு நண்பர் பலர் இருப்பர். ஏழைகளுக்கு இருக்கும் ஒரே நண்பரும் அவரைவிட்டுப் பிரிவர்."
*க. சிறோமி*
*இலுப்பைக்குளம், நேரியகுளம்.*

"அழகிய குறிஞ்சி மலர் ஆண்டுக்கொருமுறை பூப்பதில்லை. அருமையான சந்தர்ப்பம் அடிக்கடி கிடைப்பதில்லை"
*லாசரஸ் நிரஞ்சலா*
*சிதம்பரபுரம்*

"உன்னால் முடிந்தவரை அடுத்தவருக்கு உதவிசெய். நீயே விழுந்து விடாமல் எச்சரிக்கையாய் இரு"
*த.யாழினி பெரிய பண்டிவிரிச்சான், மடுக்கோயில்.*

"வாழ்க்கை என்பது இயற்கை அழிக்கும் செல்வம். ஆனால் நல்ல வாழ்க்கை என்பது ஞானம் அளிக்கும் செல்வம்"
*தே. ஜெர்மா, சாளம்பன்.*

"பிரச்சினை வரும்போது அதைக் தீர்க்கும் வழியை நாடு. இல்லையெனில் அப்பிரச்சனையே உன்னைப் போர்வையாகப் போர்த்திவிடும்."
*வி. டனிஸ்டன்*
*இலுப்பைக்குளம், நேரியகுளம்.*

"மண் கோட்டை கட்டினால் மண்ணாவது மிஞ்சும். ஆனால் மனக் கோட்டை கட்டினால் நாம்தான் மண்ணுக்கே போகவேண்டும்."
*வி. டனிஸ்டன்*
*இலுப்பைக்குளம், நேரியகுளம்.*

"ஐந்து லட்சத்துக்கு வாங்கினாலும் செருப்பைக் காலில்தான் போடவேண்டும். ஐந்து சதத்துக்கு வாங்கினாலும் குங்குமத்தை நெற்றியில்தான் வைக்கவேண்டும்."
*வி. டனிஸ்டன்*
*இலுப்பைக்குளம், நேரியகுளம்.*

## மன்னா விளம்பரப் பலகை

"தோல்வியைக் கண்டு அஞ்சுபவனிடமிருந்து வெற்றி விலகுகிறது" *தே. காஞ்சணன், சாளம்பன்*

"முயற்சி செய்து பார்க்கும்வரை தன்னால் முடியும் இதுவென்று ஒருவருக்கும் தெரியாது"
*ம.சிந்து மொறாய்ஸ், வங்காலை, மன்னார்.*

"நீங்கள் ஆசைப்பட்டு செய்யும் காரியத்திற்காக அதிக நேரத்தை ஒதுக்குங்கள். அது உங்களை மேலே உயர்த்தும்"
*ம.சிந்து மொறாய்ஸ், வங்காலை, மன்னார்.*

"கொடுக்கக் கடினமானவற்றைக் கொடுத்தல், செய்யக் கடினமானவற்றை செய்தல், பொறுக்க கடினமானவற்றை பொறுத்தல் இவை மூன்றும் உள்ளதே நட்பாகும்."
*ம. சிந்து மொறாய்ஸ்*
*வங்காலை, மன்னார்.*

"மனதில் வெறுப்பு ஏற்பட ஆரம்பித்துவிட்டால் சிறிய சம்பவங்களும் மிகவும் மன்னிக்க முடியாத பெரும் தவறுகளாகத் தோன்றிவிடும்"
*ஜெ. ஷமிலா, பள்ளிமுனை, மன்னார்.*

"இளைஞர்களே நீங்கள் நந்தவனங்களின் முகவரிகள். சோதனை வருவது உங்கள் சாதனைகளை எல்லாம் வாழ்வில் சரித்திரமாக்கவே."
*ஜெ. ஷமிலா .*
*பள்ளிமுனை, மன்னார்.*

இந்த விளம்பரப் பலகை உங்களுக்கானது.
இதில் நீங்களும் எழுதலாம். இதுபோல 'சுருக் 'நறுக் சுவையாய் ...... எழுதி அனுப்புங்கள்.

முகவரி :

மன்னா விளம்பரப் பலகை
மன்னா பணியகம்,
மறைக்கல்வி நிலையம்,
புனித செபஸ்தியார் பேராலய வீதி,
மன்னார்.

## அகதிகள்

அழுதழுது கண்ணீரும் தீர்ந்துவிட்டது.
இனிக் கண்ணைப் பிழிந்தாலும்
இரத்தம் வருமே தவிர கண்ணீர் வராது
கண்களைப் படைத்து
கண்ணுக்கு பார்வையும் கொடுத்த இறைவன்
ஏன் எம் கண்ணீரை துடைக்க மறுக்கிறான்.

ஆனந்தமாய் வாழ்ந்த எம்மை அடிமைப்படுத்தி
அகதிகளாக்கி ஆனந்தம் கொண்டாடும்
ஆணவம் படைத்த மனித சமுதாயத்தை என்ன செய்வது?
ஆண்டவன் ஏன் எம்மை மட்டும் அகதி ஆக்கினான்.

காலை உணவு அருந்தினால் பகல் என்ன உண்ணுவது?
பகல் உண்டால் இரவென்ன உண்பது?
மொத்தத்தில் உண்மையே உறங்கிப்போன பின்னும்
உணவு என்ன வேண்டிக் கிடக்கின்றது?
போர்வையில் உறங்காமல் உறையும் மனிதர் நாம்....!

இறந்த பின்பு மரணத்தின் அனுபவத்தை
எவனும் / எவளும் திரும்பி வந்து கூறுவதில்லை.
ஆனால் அகதிகள் நாம் அதை அனுபவிக்கின்றோம்.
எங்கள் உடலை கொசுக்களும், எறும்புகளும்,
கறையான்களும், தவளைகளும்
பதம் பார்த்து மகிழ்கின்றன.

மழை, வெயில், குளிர் காற்று,
பனி, பசி, வருத்தம் இவைகளை உணராது
சிப்பிகள் ஆக்கப்பட்டோம், ஆக்கப்படுகிறோம்.

சிறகு உடைந்த நிலையில் பறவை பறக்குமோ,
சிப்பியின்றி சிலை உருவாகுமோ?
உண்மையின்றி சிம்மாசனம் கிடைக்குமோ?
உண்மையின் இறைவா நீ எங்கே!
எம் அழுகுரல்கள் உனக்குக் கேட்கிறதா?

*அருட்சகோதரர் மோஸஸ்*
*குருக்கள் மடம், மட்டக்களப்பு.*

### இளைஞர்

இலட்சியமில்லாத இளைஞர் கூட்டமே
நீ ஏன் இலட்சத் தீவுகளாய்
சிதறிக் கிடக்கிறாய்?

### நீதி

நீதியைப் போதிக்க நிறையப்பேர் வந்ததால்
நீதியைக் கேட்க நிறையப்பேர் இல்லை.




*சிலை, மூர்வீதி, மன்னார்.*

# இளைஞர் மொழிவு

# மறுமணம்*

அ. மரிய திரேசா
கீரி, மன்னார்.



"அன்ரி... அன்ரி..." ஓசை கேட்டு மறுபக்கம் திரும்பிப் படுத்தான் சூரி. மீண்டும் அதே ஓசை... அந்த ஓசைக்கு சொந்தக்காரி வேறு யாருமல்ல அவனது மனைவி... இல்லை... மனைவியாகப் போகிறவள், மாமாவின் மகள், பெயர் ரிஷபா.

"ம்... எங்க போய்ற்ரா இவ..." என்றபடியே அவனது அறைக்கதவை திறந்துகொண்டு உள்ளே வந்து, அவனது கால்மாட்டில் அமர்ந்தாள். அப்பிள் கன்னத்திலும் வரிச்சங்கு கழுத்திலும் பூத்திருந்த முத்துப்போன்ற வியர்வைத் துளிகளைத் துடைத்தபடியே கேட்டாள், "என்னப்பா... அன்ரி எங்க? ஏன் நீங்க இன்டைக்கு வேலைக்குப் போகல...? என்ன ஒரு மாதிரியாய் இருக்கீங்க காய்ச்சலா...?" அடுக்கடுக்காய்க் கேள்விகளை கேட்டபடியே எழுந்து வந்து அவன் கன்னத்தில் தன் கைகளை வைத்துப் பார்த்தாள்.

அவனது கண்ணினுள்ளே விழலாமா... வேண்டாமா .... என்று முட்டிநின்ற கண்ணீர்த்துளி அவளது கை பட்டதும் பட்டென்று பெருக்கெடுத்தது. சிறிது நேரம் மௌனமாய் இருந்தவள் அவன் கண்ணீரை துடைத்துவிட்டுக் கேட்டாள், "என்ன நடந்தது? ஒப்பிசில் ஏதும் பிரச்சினையோ? ஏன் அழுறீங்க...?" அவனது கண்கள் ரிஷபாவின் முகத்தை ஏறிட முடியாது களைத்திருந்தது. "இல்லை ஒப்பிசில ஏதும் பிரச்சினை இல்லை. நேற்று அம்மா கடிதம் போட்டிருந்தா அதிலேதான் பிரச்சினை" என்றான்.

"ஏன் அத்தைக்கு என்ன? ஏதும் வருத்தமோ...?" "அம்மாவுக்கு ஒரு வருத்தமும் இல்லை" "பிறகு என்ன?" என்றாள். சிறிது மௌனத்தின்பின் சொன்னான், "என்னை கலியாணம் பண்ணட்டாம்." "கல்யாணமா?" வாயைப் பிளந்தாள் அவள். சந்தோஷமா, துக்கமா என்றே அவனால் உணர முடியவில்லை. அதுக்கு ஏன் அழுறீங்க? "ஐயோ உன்னை இல்லை, வேறொரு ஆளைப் பார்த்து வச்சிட்டினம்" திறந்திருந்த வாய் பட்டென்று மூடியது. அவன் சுவரை வெறித்தான். சிறிது நிமிட மௌனத்தின்பின் அவன் கன்னத்தில் மீண்டும் இளம் சூட்டில் கண்ணீர்த்துளி எங்கிருந்தோ வந்தன, ரிஷபாவை நோக்கினான். அவன் கன்னத்தில் இருந்த கண்ணீரைத் துடைத்தவள், தன் கண்களில் வழிந்ததை மறந்துவிட்டாள்.

"என்னங்க சொல்லுறீங்க" கண்ணைத் துடைத்தபடியே கேட்டாள். விழிகள் அகல விரிந்திருந்தன. இடிந்து போனாள்.

உடனே தன்னைச் சுதாகரித்தவள், "அதுசரி, நீங்க முழுகி எத்தனை நாள், பத்து நாளா? கிட்ட வரவே வாசம் கமகமக்குது" பேச்சை வேறுபக்கம் நகர்த்தினாள். "எழும்புங்க... எழும்புங்க..." கொடியில் கிடந்த துவாயை எடுத்து தன் தோளிலே போட்டுக்கொண்டு சோப் கேசையும் கையில் எடுத்துக்கொண்டு அவனது முதுகில் தன் கையை வைத்து பாத்ரூமுக்குள் தள்ளிக்கொண்டு போய்விட்டாள். அவனுக்கு இன்னும் ஆச்சரியம் அகலவில்லை.

"ஏய் உனக்கு என்ன ஆச்சு .....? நான் சீரியசா .......? யாரு உங்களுக்கா? பேசாம முழுகுங்க. அப்புறம் ஆஸ்பத்திரிக்குப் போங்க" என்று சொன்னபடியே அவனது ஊத்தை உடுப்புக்களை துவைத்தாள். அவன் முழுகி முடிக்கவும் அவள் உடுப்புத் தோய்த்து முடிக்கவும் சரியாக இருந்தது. உடுப்பை காயப்போட்டு வந்து அவனது சரத்தில் கையை துடைத்தபடியே சொன்னாள், "அம்மா சொல்லுறதை கேளுங்க" "ஏய் என்ன சொல்லுறாய்... உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு...?" "ஆமா... பைத்தியம்தான். பைத்தியத்தை கட்டிக்காம அம்மா பாத்து வைச்சிருக்கிற பொண்ணை கட்டிக்கோங்க." அவனால் அவளைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இதில் ரெண்டு பார்சல் இருக்கு. ஒன்றை நீங்க எடுத்திட்டு ஒன்றை அன்ரிக்கு குடுங்கோ என்று சொன்னவாறே கிளம்பினாள். வாசல் வரையும் பின்னால் சென்றான் சூரி.

"மிஸ்ரர் சூரி... உங்களுக்கு மூக்கும் முளியுமா ஒரு பொண்ணு கிடைக்க வேணுமென்று நான் கடவுளை மன்றாடுறன்" என்றவாறே சைக்கிளை உருட்டினாள். "மிசிஸ் சூரியிடம் என்னைப் பத்திச் சொல்லுங்க" ஓட ஆயத்தமானாள். "நான் போறன்" "ஏய் போய்ற்று வாறன் என்டு சொல்லு" அவனைப் பார்த்தபடியே சைக்கிள் ஓட்டிச் சென்றாள்.

அவளது கண்களையே நோக்கிக் கொண்டிருந்தான் சூரி. எதிரே வந்த மண் லாறி அவனது கண்களுள் மங்கலாகத் தெரிந்தது.

"ரிஷபா... லொறி... ரிஷபா... முன்னுக்கு லொறி... விலத்து ரிஷபா..." தொண்டை கிழியும்படி கத்தினான். வீதியில் இறங்கி ஓடினான்.. அவன் செல்வதற்கு முன்பே நாடகம் அரங்கேறி விட்டது. மண் லொறியின் முன் சக்கரம் அவன் கண்மணியைப் பதம்பார்த்திருந்தது. "ஐயோ..." இடிந்துபோய் அவன் உயிரைக் கையில் ஏந்தினான். அவன் கண்மணியின் கண்ணில் துடிப்பு இருப்பது தெரிந்தது. கையில் ஏந்தியபடியே அருகில் இருந்த வைத்தியசாலைக்குப் பறந்தான். அவசர சிகிச்சைப் பிரிவில் அவன் சித்திரம் வைக்கப்பட்டது. அதிக நேரம் போகவில்லை. ஐந்து நிமிடத்திற்குள் அவன் மனம் ஐந்து கோடி தெய்வங்களின் கால்களில் விழுந்திருக்கும்.

கை, கால், உடல் ஏன் அவனது மனம்கூட விறைத்துவிட்டது. அருகில் லொறி ட்டிறைவர் ஆறுதல் சொல்லும் தோரணையில் நின்றார். "யோவ் என்னய்யா... எங்கய்யா பாத்துகிட்டு வண்டி ஓட்டினாய்? என்னோட ரிஷபா.... ரிஷபா... அவவுக்கு மட்டும் ஏதும் நடந்தா நீ உயிரோடயே இருக்க மாட்டாய். அவ உனக்கு என்னய்யா செய்தா..." அவனது ஷேட் கொலறைப் பிடித்துக் கதறினான். "என்னோட ரிஷபாவை என்னட்ட குடுத்திருப்பா..." அவனது ஷேட்டிலிருந்து கை நழுவி கால்களைப் பற்றியது. வைத்தியர் வந்தார். "டொக்டர் என்னோட மனைவி..." கையெடுத்துக் கும்பிட்டான். அவனது கையை பற்றியவாறே சொன்னார், "சொறி மிஸ்ரர். எங்கட கையில ஒன்றுமேயில்லை. நீங்க கொண்டு வரும்போதே மூச்சு நின்று போச்சு..." "டொக்டர்... பிளீஸ் அப்படி சொல்லாதீங்க. அவவைக் காப்பாத்துங்க." அவரது காலில் வீழ்ந்து கதறினான். ஆஸ்பத்திரி அதிரும்படி குளறினான். றிலாக்ஸ்... றிலாக்சா இருங்க. சொறி மிஸ்டர். டொக்டர் அவனை தூக்கி நிறுத்தினார். பொலிஸ் விசாரணை போஸ் மோட்டம் என்று பலவற்றின்பின் அவளது உயிரற்ற உடல் அவனிடம் ஒப்படைக்கப்பட்டது.

"இன்ஸ்பெக்டர் நான்தான் லொறி ஓடி வந்து இந்தப் பொண்ணை அடிச்சிட்டன்" என்றான். விசாரணையின்போது லொறி ட்றைவர் அவன் அருகில் வந்து கேட்டார். "என்ன? என்ன சொல்லுறீங்க? நான்தானே அடிச்சன். இல்ல மிஸ்ரர்." "நீங்க அடிக்கல. உங்கள ஜெயிலுக்கு அனுப்புறதால எனக்கு என்ன ஆயிடப்போகுது. என்னோட ரிஷபாவை எனக்குக் கொடுக்க உங்களால் முடியுமா? எல்லாம் முடிஞ்சு போச்சு. நான் மட்டும் இங்கு இருந்து என்ன பண்ணுறது? நீங்க உங்கட வீட்டுக்குப் போங்க." உறுதியாகச் சொன்னான் சூரி. அவனைக் கையெடுத்து கும்பிட்டுவிட்டுச் சென்றார் ட்றைவர். அழுது அவன் கண்களில் கண்ணீர் வற்றிவிட்டது. இறுதிக்கிரிகையை ஜடம்போல் செய்து முடித்தான். கடமைகள் முடிந்ததும் பொலிஸ் நிலையத்தில் அவனாகவே சென்று ஆஜரானான். 7 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. கடைசி வினாடிகளில் அவன் கையிலிருந்து ரிஷபாவின் முகமே கனவுகளிலும் வந்துபோயிற்று.

வெளி உலகைப் பார்ப்பதற்கே மனம் இடம்கொடுக்கவில்லை. ரிஷபா இல்லாத ஒரு வாழ்க்கையை அவனால் கற்பனை பண்ணக்கூட முடியவில்லை. "இன்னுமொரு கொலை செய்துவிட்டு இங்கேயே வாழ்நாள் முழுதும் இருப்போமா? என்று அவனது மனம் எண்ணியது. ஏழை என்பதால் ரிஷபாவை ஏற்க மறுத்த அவன் தங்கை, அவன் ரிஷபாவை காதலிக்கின்றான் என்று தெரிந்தும் அவன் எத்தனை எடுத்துக் கூறியும் அவனுக்கு வேறு பெண் பார்த்த தாயார் இவர்களைப் பார்க்கப் போகின்றோம் என்றதுமே சாகவேண்டும்போல இருந்தது. அவனையும் மீறி. அவன் கண் முன்னே அவனது உயிரைப் பறித்தெடுக்க லொறி ட்றைவர்... இவர்களை நினைத்தாலே அவனது உடல் கொதித்தது. கன்னத்தைத் தொட்டு கழுத்தில் ஓடிய கண்ணீரால் சுய நினைவுக்கு வந்தான்.

அவனது தண்டனைக் காலம் முடிந்தது. அழைத்துப்போக ரிஷபாவின் தாயார் வந்திருந்தார். தன் மகளைப் பிரிந்ததில் உருகி உருக்குலைந்து போயிருந்தார். துன்ப இழை எடுத்து தனி ஆடை பின்னி அதை அணிந்திருந்தார். அவனைப் போலவே அவரிலும் எலும்பு மட்டுமே மிஞ்சியிருந்தது.

"அத்தை..." வரண்ட தொண்டையிலிருந்து வார்த்தை வெளிவர மறுத்தது. கண்ணீர் திரையிட சூரியை அணைத்து, "ஓ..." வென்று ஒப்பாரி வைத்தார். தனது வீட்டிற்கு அவனை அழைத்துச் சென்றார். தனியார் நிறுவனமொன்றில் வாயில் காப்பாளன் வேலைக்கு செல்லுவதன் மூலம் கிடைக்கும் சம்பளத்தை அத்தையிடமே கொடுத்தான். ஒரு நாள் அவன் வீட்டுக்குச் சென்றதும், "தம்பி உங்களுக்கு கடிதம் வந்திருக்கு" என்று அத்தை கவரை கையில் வைத்தார். யாராக இருக்கும்? விரக்தியோடே பிரித்தான். வெறுப்போடே படித்தான். அம்மா எழுதியிருந்தார். கடிதத்தைக் கிழித்து குப்பைக் கூடைக்குள் போட்டான். "யாருப்பா கடிதத்தில் ..." அத்தை கேட்டார். 'அம்மா' என்றான் மொட்டையாக. "என்னவாம்..." என்றார். "கல்யாணம் பண்ணிக் கொள்ளட்டாம்" சிறிது மௌனத்தின்பின் சொன்னான்.

"அத்தை எனக்கு ஏற்கனவே ரிஷபாவோட கலியாணம் முடிஞ்சுது. மறு கலியாணத்தைப் பற்றி கதைக்குறதென்றால் கடிதம் போட வேண்டாமென்று அவவுக்கு கடிதம் அனுப்பிவிடுங்கோ" உறுதியாய்ச் சொல்லிவிட்டு சென்று படுக்கையை விரிக்கின்றான். ரிஷபாவின் கனவுக்குள் கண் விளிப்பதற்காக... ●

# மகிழ்ச்சியாய் இருப்பது நன்று

- எஸ். ஜே. யோகராசா



நாம் அன்றாடம் பல மனிதர்களைச் சந்திக்கின்றோம். அவர்களில் சிலர் எப்போதும் சிரித்த முகத்துடனேயே இருப்பார்கள். வேறுசிலர் எப்போதும் சோகமான முகத்துடன் காட்சியளிப்பார்கள். இதைக்கொண்டு சிரித்தவண்ணம் இருப்பவர்களுக்கு வாழ்க்கையில் எந்தப் பிரச்சினையும் இல்லையென்றோ அல்லது சோக முகத்துடன் இருப்பவர்களுக்கு பிரச்சினை அதிகம் என்றோ எண்ணுவது தவறு. எல்லோருக்கும் பிரச்சனை உண்டு.

மகிழ்ச்சி என்பது ஒரு மனநிலையாகும். துன்பம் வந்துவிட்டதே என்று துயரப்பட்டுக்கொண்டிருந்தால் மேலும் துன்பம் அதிகரிக்குமே தவிர குறையாது. சிரித்தால் பிரச்சினை, துன்பம் ஓடிவிடுமா? இல்லை, ஆனால் சிரிக்கும்போது மனம் அமைதியடைகின்றது. துன்பத்தை நீக்குவதற்கான மனநிலையை அது கொடுக்கின்றது எனலாம். பிரச்சனை, துன்பம் சொல்லிக்கொண்டு வருவதில்லை. இவற்றை எதிர் கொண்டு சமாளிக்க வேண்டுமானால் நாம் மகிழ்ச்சியுடனும், மனத்தெளிவுடனும் இருக்கவேண்டும்.

எப்பொழுதும் சிரித்த முகத்துடன் இருப்பது எமது தோற்றத்துக்கு அழகைக் கொடுக்கக்கூடியதாகும். மற்றவர்களும் அதைப் பார்த்து மகிழ்ச்சியடைவார்கள். உங்களிடமுள்ள மகிழ்ச்சி உங்களைச் சுற்றிலுமுள்ளோரையும் மகிழ்ச்சியாய் இருக்கத் தூண்டுகிறது. அதாவது அவர்களும் மகிழ்ச்சி உணர்வைப் பெறுகிறார்கள். நாம் மகிழ்ச்சியாய் இருக்கும்போது மற்றவர்களும் எம்மை விரும்புவார்கள். நாம் தனிமையில் வாழப்பிறந்தவர்கள் அல்லர். மற்றவர்களுடன் சேர்ந்து வாழவேண்டும். மனித உறவு மனிதனுக்குத் தேவை. இந்த உறவுக்கு மகிழ்ச்சியான முகம் அவசியம். சோகத்தோடும், வெறுப்போடும் இருப்போருடன் உறவுகொள்ள மற்றவர்கள் விரும்புவதில்லை.

பிரச்சினைகளும், போராட்டங்களும் நிறைந்த மனிதனால் எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடியும்? என்பது ஒரு கேள்வி. மகிழ்ச்சி என்பது ஒரு மனோநிலையாகும். பிரச்சனை, துன்பம் சோர்வு இவைகள் மனிதனை வெளியிலிருந்து தாக்குகின்றன. மகிழ்ச்சியோ உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்கிறது. ஒருவன் தான் மகிழ்ச்சியாய் இருப்பதாக முதலில் எண்ண வேண்டும். எமக்குள் இருக்கும் மகிழ்ச்சியை நாம் வெளிக்கொணர வேண்டும். மகிழ்ச்சியாக இருக்கப் பழகிக்கொண்டுவிட்டால் வாழ்க்கை நிகழ்ச்சிகள் சாதாரணமாகிவிடுகின்றன.

"முட்டாள் மகிழ்ச்சி தூரத்திலிருப்பதாக எண்ணி அதைத் தேடுகின்றான். ஞானம் பெற்றவன் அதைத் தனது காலுக்கு அடியிலேயே வளர்த்துக் கொள்கின்றான்" என்றார் ஜேம்ஸ் ஒப்பன்ஹிம் என்பவர். சிரிக்கத் தெரிந்தவன் மனிதன் ஒருவனே. மிருகங்கள் சிரிப்பதைக் காணமுடிவதில்லை. மகிழ்ச்சியாக இருப்பவர்களது முகத்தில் ஒரு கவர்ச்சியிருக்கும். மகிழ்ச்சியாக இருப்பவர்களை எல்லோரும் விரும்புவார்கள். ●

# மன்னித்தல்

- எஸ். ஜே. யோகராசா

"குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று. குற்றங்களை மறந்துவிடும் மனத்தால் ஒன்று" என்ற பாடல் மன்னிக்கும் மனப்பான்மையை எடுத்துக் கூறுகிறது. மன்னிக்கும் பண்பு தெய்வீகப் பண்பு என்பர். இதையே வள்ளுவரும்,

*இன்னா செய்தாரை ஒறுத்தல் - அவர் நாண*
*நன்னயம் செய்துவிடல்*

என்று கூறுகிறார்.

அதாவது பிறர் நமக்குத் தீமை செய்யும்போது அவர்கள் வெட்கப்படும்படியாக அதனை மன்னித்து விடவேண்டும் என்று கூறுகிறார். ஒரு குழந்தை மற்றக் குழந்தைகளுடன் சண்டை பிடிக்கிறது. ஆனால் சிறிது நேரத்தில் மன்னித்து மறந்து ஒன்றாக விளையாடுகிறது. ஆனால் வளர்ந்த பின்பு மன்னிப்பது கடினமாக இருக்கிறது.

ஒருவர் தவறு செய்தால் மற்றவர் அவனை மன்னித்து மறக்கும்போது அவன் திருந்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. தனக்குத் தீங்கு செய்தவனை மன்னிக்காது அவன்மீது வர்மம் வைப்பது மனதின் தூய்மையை மட்டுமல்லாது உடலின் சுகத்தையே கெடுத்து விடுகின்றது. மற்றவர்கள் எமக்குச் செய்தவற்றை மன்னிக்காது மனதிற்குள்ளே வைத்துக் குமுறும்போது குடற்புண், புற்றுநோய் போன்ற நோய்கள் வரவும் கூடும். அது மட்டுமல்ல பிறரை மன்னிக்கத் தயாராக இல்லாத மனது மகிழ்ச்சியாகவே இருக்க முடியாது. அப்படிப்பட்ட மனம் எப்போதும் பிறருடைய குற்றங்களையே நினைத்துக்கொண்டு இருக்கும். மற்றவர்களையும் மன்னித்து மறக்காதவன் தானும் மகிழ்ச்சியாக இருக்க மாட்டான் மற்றவர்களையும் மகிழ்ச்சியாக இருக்க விடமாட்டான். பலர் ஒன்றுகூடி வாழும்பொழுது பிரச்சினைகள் உருவாகத்தான் செய்கின்றன. ஆனால் மற்றவர்களுடைய குற்றங்களை மன்னிக்கிற மனப்பக்குவம் இல்லாதுபோனால் வாழ்க்கை கசப்பாகிவிடும். மன்னிப்பின் அவசியத்தைப் புரிந்துகொண்டால் மற்றவர்களைத் திருத்தும் நோக்கத்துடன் மன்னிக்கத் தொடங்க வேண்டும். எமது வாழ்வில் ஏற்படும் சிறு சிறு நிகழ்ச்சிகளில் மன்னிப்புப் பழக்கத்தைப் பயிற்சி செய்ய வேண்டும். மன்னிப்பை மற்றவர்கள் பிழையாகப் பாவிக்க இடம்கொடுக்கவும் கூடாது.


ஒருவருக்கு நாம் தண்டனை கொடுக்கும் போது அன்பில் என்னைத் தண்டிக்கிறார் என்ற உணர்வு தண்டனை பெறுபவருக்கு ஏற்படும் விதத்தில் தண்டிக்க வேண்டும். மற்றவர் என்னைத் தண்டிப்பது என்னை உருவாக்கவே என்ற உணர்வு தண்டனை பெறுபவருக்கு உருவாக வேண்டும்.

மன்னித்து மறப்பதும், மன்னிப்புக் கேட்பதும் சிறந்த பண்பு. இதற்குப் பயிற்சி தேவை. இதனாலேயே இயேசு பிரான் தம்மைக் கொலை செய்பவர்களைப் பார்த்து, "பிதாவே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னியும்" என்றார். "பகை கொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம். தீராத கோபம் யாருக்கு இலாபம்" என்பதற்கேற்ப மன்னித்து வாழ்வோம். மகிழ்ச்சியாக வாழ்வோம். ●

வழிபாடு பற்றிய ஆழமான அர்த்தங்களை
இலகு தமிழில் வெளிக்கொணரும் புதிய தொடர்!

# வாழ்வும் வழிபாடும்

தருவது வலண்டின் ஜோசப்



## மௌன மொழிகள்

தொடர் – 11

நாடகத்திற்கும், வழிபாட்டிற்கும் என்ன வேறுபாடு என்று சில சமயங்களில் எண்ணத் தோன்றுகின்றது. நாடகத்தில் பரபரப்பாகத் தொய்வின்றி காட்சிகள் தொடர வேண்டும். இல்லாவிட்டால் "இயக்கம் சரியில்லை" என்று ரசிகர்கள் எழுந்துவிடுவார்கள். அதேபோன்று வழிபாட்டிலும் அடையாள நிகழ்ச்சிகள் தொடர வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். "சிறிது நேரம் மௌனமாக இறை பிரசன்னத்தை உணர்வோம்" என்று பணியாளர் சொன்னவுடன் ஆலயத்தில் எத்தனை சலனங்கள்! பாடல் புத்தகத்தை புரட்டுகின்றவர்கள் ஒருபுறம், அடுத்த நிகழ்ச்சிக்கு ஆயத்தப்படுத்துகின்றவர்கள் ஒருபுறம். சிறுவர்களை சீர்படுத்துகின்றவர்கள் ஒருபுறம். 'இந்தப் பாதர் ஏன் இப்படி உட்காந்திருக்கின்றார், எழுந்து திருப்பலியை தொடரவேண்டியதுதானே' என்று சலித்துக்கொள்பவர்கள் ஒருபுறம். இப்படி பல்வேறு சலனங்கள் அலைமோதி சில மணித்துளிகளைச் சில மணிநேரங்களாக பெருக்க வைத்து விடுகின்றன.

### மௌனமே மொழியாக

வழிபாடு என்ற நிகழ்வின் தனிப்பெரும் ஊடகம் மௌனம் என்ற உணர்வே இல்லாத நிலையைத்தான் இன்று பார்க்கின்றோம்.

வழிபாட்டில் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு மொழி 'மௌனம்'. வழிபாட்டுச் சமுதாயம் முழுவதும் இறைபிரசன்னத்தில் சில மணித்துளிகள் அமைதி காக்கின்றது. அந்த நேரங்கள் வழிபாட்டிலேயே மிக அற்புதமான நேரங்கள். இறை வல்லமையை இந்தப் பூமிக்கு இழுத்துவரும் நேரங்கள். வழிபாட்டுச் சமுதாயம் முழுவதையும் இனம் புரியாத இறைத் தோழமையில் இணைக்கின்ற நேரங்கள். வழிபாட்டில் உள்ள பல்வேறு ஆர்ப்பரிப்புக்களையும், பகிர்வுகளையும் செபங்களையும் இணைக்கின்ற வலிமை மௌனம் என்ற இந்த ஊடகத்திற்கு உண்டு.

### மௌனமான நேரம்

நற்கருணை வழிபாட்டில் பல இடங்களில் இந்த அற்புதமான தருணங்கள் வருகின்றன. தொடக்க வழிபாட்டில் மன்னிப்புச் செபத்திற்கு முன் சில மணித்துளிகள் அமைதி காக்கின்றோம். வழிபாட்டு சமுதாயத்தில் உள்ள அனைவரையும் ஏற்றுக்கொள்கின்ற, ஒரே உடலாக உருமாற்றிக் கொள்கின்ற நேரம் இது. சபை மன்றாட்டிற்கு முன் ஒரு மௌன ராகம் இசைக்கப்படுகின்றது. நமது தேவைகளையெல்லாம் நறுமணப் புகைபோல் இறைபாதம் எழுப்புகின்ற நேரம் இது. நலிந்தவர்களின் தேவைகள் நம்மைச் சாடுகின்றபோது இந்த மௌனம் சக்தி பெறுகின்றது.

இறைவார்த்தையையும் அதன் விளக்கமான மறையுரையையும் கேட்டவுடன் சில மணித்துளிகள் அனைவரும் மௌனம் காக்கின்றோம். அந்த நேரத்தில் இறைவார்த்தையை உள்வாங்கி நம்மை உருமாற்ற நாம் அனுமதிக்கின்றோம். ஆவியின் ஆற்றலால் ஆண்டவரின் வார்த்தைக்கு பதில் தரும் நேரம் இது. நற்கருணைப் பவனி முடிந்தவுடன் சில மணித்துளிகள் மௌனமாக அமர வேண்டும் என்பதைத் திருச்சபை வலியுறுத்துகின்றது. அந்த நேரத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரே உடலாக மாறுகின்றோம். சமுதாயத்தின் நன்றி உணர்வுகளில் ஒன்றுபடுகின்றோம்.

### மௌனத்தின் மோனத்தில்

வழிபாட்டுச் சமுதாயம் முழுவதும் அமைதி காக்கும் நேரங்களை இறை ஆவி செயலாற்றும் நேரங்களாகத் திருச்சபை உணர்கிறது. *மௌனம* என்ற இந்த அடையாள மொழி மனித - இறை உறவுகளை இணைக்கின்றது. வழிபாட்டு அனுபவத்தை உருவாக்குகிறது. ஆரவாரமில்லாமல் அமைதியாக இருக்கின்ற பல்வேறு மக்களின் இதய உணர்வுகளைக் கேட்க வாய்ப்பளிக்கின்றது. வழிபாட்டுச் சமுதாயம் முழுவதையும் மதிக்கின்ற, ஏற்றுக்கொள்கின்ற, ஏன் வணங்குகின்ற நேரமாக அமைகின்றது.

நம்முடைய வழிபாடுகளில் மௌனமாக இருப்பதற்கு நாம் பக்குவப்படவில்லை என்பதே உண்மை. பணியாளர் மௌனம் காக்கச் சொல்லும்போதும்கூட பரபரப்பாக அங்கும் இங்கும் அலைமோதிக்கொண்டிருக்கும் பல்வேறு நபர்களைப் பார்க்கின்றோம். அடுத்து, எந்தப் பாடலை எடுக்க வேண்டும்? இசைக் கருவிகளை எவ்வாறு தயாராக வைத்திருக்க வேண்டும்? என்பதில் பாடகர் குழுவின் கவனம் செல்கின்றது. அமர்வதற்குத் தயாரிப்பதில் பலருடைய கைகள் துடிப்பதை நாம் காணலாம். மௌனமாக இருந்தால் கைக்கடிகாரங்களைச் சரி பார்க்கும் நபர்கள் பலர் நம்மிடையே உண்டு.

### பயிற்சிகள் தேவை

வழிபாட்டில் மௌன மொழிகள் பேச சரியான பயிற்சிகள் தேவைப்படுகின்றன. நம்முடைய வழிபாட்டின் அனுபவமே இந்த மௌனத்தில் ஊற்றெடுக்கின்றன என்ற உண்மையை அனைத்துத் தரப்பு மக்களும் உணர்கின்றபோதுதான் நம்மிடையே வழிபாடு வல்லமை மிக்கதாக உருவாக முடியும். மேலோட்டமான சில செயல்கள் மட்டுமே வழிபாடாக, தெய்வீகச் செயலாக அமைய முடியாது.

திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் 19.03.2004 அன்று உரோமை திருவழிபாட்டு ஆணையம் வெளியிட்ட "மீட்பின் அருளடையாளம்" என்ற ஆவணத்தில் வழிபாட்டில் பயன்படுத்தப்படும் மௌன மொழியின் மகத்துவத்தை, "ஆற்றல் மிக்க குரலை ஏற்றுக்கொள்ளும் நேரம், இறைவார்த்தையோடு ஒன்றித்து, அதைத் தனிப்பட்ட செபமாக மாற்றுகின்ற நேரம். திருச்சபையின் பொதுவான வாய்மொழியோடு இணைகின்ற நேரம்" என்று கூறுகின்றார்.

வழிபாட்டு நிகழ்ச்சி ஒவ்வொன்றிலும் இந்த மௌன மொழியைப் பயன்படுத்த வேண்டும். குறிப்பிட்ட வயது அறிவுப் பின்னணியில் இந்த மௌன மொழியின் அர்த்தங்களைக் கற்றுத்தர வேண்டும்.

### ஆன்மீகத்தின் இயல்பே மௌனம் தான்

இந்திய ஆன்மீகம் இந்த அமைதியின் மொழிக்கு அதிக முக்கியத்துவம் தருகின்றது. இந்த மொழியை நம்முடைய வழிபாட்டில் புகுத்தும் நேரங்களில் நம்முடைய அடையாளச் செயல்கள், பாடல்கள் கொண்டாடும் கோலங்கள் ஆகிய அத்தனை செயல்களும் புதிய அர்த்தங்கள் பெறும் என்பது எனது நம்பிக்கை.

வாழ்க்கையின் மிக உன்னதமானவை எல்லாம் மௌனத்தில்தான் பிறக்கின்றன. வழிபாட்டுச் செயல் வல்லமையாக வாழ்வின் இராகமாக உருவாகும் ஒப்பற்ற நேரம் வழிபாட்டு மௌனம் என்ற உன்னத நேரம். இதை உணர்வதும் பிறருக்கு உணர்த்துவதும் அனைவரின் கடமையல்லவா!

(தொடர்ந்து வழிபடுவோம்......)

# மரணித்தும் வாழ்பவர்!

ஆக்கம்
மு. சுந்தரம் பாண்டியன்

## அருட்சகோதரர் ஆரோக்கியம் ஜேம்ஸ் பீரிஸ் (FC) அவர்களின் மட்டக்களப்பு மாவட்ட கல்விப் பணிகள்

மாதோட்ட மாநகராம் மன்னாரின் தென்பால் வங்கம் மலிகின்ற கடற்கரைக் கிராமம் வங்காலை. இங்கு வாழும் மக்கள் மூவேந்தர்களில் முதன்மையான பாண்டிய மன்னர்களின் கடற்படையினரின் வழிவந்தோரென வரலாறு கூறுகின்றது.

கல்வியும், செல்வமும், வீரமும் நிறைந்த தமிழையும், கத்தோலிக்க மறையையும் தம் இரு கண்களெனப் போற்றி வாழும் பெருங்குடி மக்கள் இவர்கள். இத்தகைய சிறப்புகள் நிறைந்த கிராமத்தில் அன்பும், அறனும் குடிகொண்ட ஆரோக்கியம் பீரிஸ் தம்பதிகளின் அன்பு மைந்தனாகப் பிறந்தவர்தான் ஜேம்ஸ் பீரிஸ் அவர்கள்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை மன்/ புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை கல்முனை பாத்திமா கல்லூரியிலும், பட்டப்படிப்பினை யாழ். பல்கலைக்கழகத்திலும் பயின்றார். இறைபணி வாழ்வில் நாட்டங்கொண்ட அன்னார் மும்பாய் இறையியல் கல்லூரியில் பயின்று துறவறப்பணி வாழ்வை மேற்கொண்டார். சந்நியாசிகளை உருவாக்கும் குருமடத்தின் பொறுப்பாளராகவும் இறைபணி-யாற்றியுள்ளார். இறுதிவரை இலங்கை நாட்டின் அன்புச் சகோதரர் துறவறசபையின் மேலாளராகவும் இறைபணியாற்றினார். தாம் சார்ந்த துறவற சபையின் நம்பிக்கைக்கும், இறைபணிக்கும் தம்மை முற்று முழுதாக அர்ப்பணம் செய்துள்ள அன்னார் அதனோடு இணைந்த அரச ஆசிரியப் பணியாற்றியதன் மூலம் அளப்பரிய சேவையாற்றியுள்ளமையை அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட மாணவச் செல்வங்களின் அழுகையும், கதறலும் வெளிக்காட்டின.

ஆசிரியப் பணியில் இணைந்துகொண்ட அருட்சகோதரர் அவர்கள் மலையகத்தின் பதுளையில் கடமையாற்றியதன் பின்னர் மட்டக்களப்பு புனித மிக்கேல் தேசிய கல்லூரிக்கு மாற்றமாகி தனது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார். இக்காலப்-பகுதியில் திருகோணமலை தொழில் நுட்பக்கல்லூரியில் ஆங்கில விரிவுரையாளராகக் கடமையாற்றி மாணவர்களுக்கு கிடைத்தற்கரிய சேவையாற்றியுள்ளமையை அன்னாரிடம் பயின்ற மாணவர்கள் நன்றியுடன் நினைவுகூருகின்றனர்.

1987ஆம் ஆண்டுகளில் மிக்கேல் கல்லூரியில் ஆசிரியராக இணைந்துகொண்ட ஜேம்ஸ் பீரிஸ் அவர்கள் இரவுபகல் பாராது மாணவர்களுக்கு ஆங்கிலம், கணக்கியல், அரசியல் போன்ற பாடங்களைச் சிறப்பாகப் போதித்து தனது அபரிதமான ஆற்றல்கள் மூலம் தனக்கென சிறப்பானதோர் இடத்தினை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்திக்கொண்டார்.

உயர் வகுப்புக்களில் கற்பித்தல் நடவடிக்கைகளுடன் மேற்படி கல்லூரியின் ஆரம்பப் பிரிவுக்கு பொறுப்பாளராகவும் பத்து ஆண்டுகள் காலம் தனது கடமையைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளார். மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரின் மத்தியிலும் மிகுந்த செல்வாக்கினைப் பெற்று மட்டக்களப்பில் தனக்கென ஓர் இடத்தினை ஏற்படுத்திக்கொண்டார்.

நேரங்காலமின்றி மாணவர்களின் நலனிலே அதிக அக்கறை காட்டியவர், தனது உடல்நலனை அவ்வளவு கரிசனையுடன் பாதுகாக்கவில்லையென்றே நினைக்கத் தோன்றுகின்றது.

1997ஆம் ஆண்டளவில் புனித மிக்கேல் கல்லூரியின் அதிபர் பதவியை மாணவர்கள், பெற்றோர்களின் முழு அளவிலான வற்புறுத்தலின் - அன்பு வேண்டுகோளின் பேரிலேயே ஏற்றுக்-கொண்டார் எனலாம். தயக்கத்துடனே ஏற்றுக்கொண்ட அவருடைய பணியின் நினைவுகள் பத்து ஆண்டுகள் கடந்தும் - அவர் மறைந்தும் விட்ட இன்றும்கூட - பசுமையாக நிழலாடுவதை எண்ணும்போது மிகுந்த வேதனையாக உள்ளது.

மட்டக்களப்பு பேராலய வளவுக்குள் அமைந்துள்ள பொதுமண்ட-பத்துள் பெற்றோர் பல நூற்றுக்கணக்கானவர்கள் அமர்ந்து அருட்சகோதரர் அவர்களுக்கு அதிபர் தரம் இல்லாவிட்டாலும் கூட அவரை அதிபராக நியமிக்க வேண்டுமென ஏகோபித்து முடிவெடுத்தனர். ஒவ்வொரு பெற்றோரும் அன்னாரின் கல்விப்பணிகள், பத்தாண்டுகளாகக் கற்பிக்கும் அவருடைய ஆற்றல், மக்களுடனும், மாணவர்களுடனும் உரையாடும் பாங்கு, பவ்வியம் என்பனபற்றி புகழ்ந்து உரைத்தார்கள். அப்போது அருட்சகோதரர் அவர்களும் அங்கே அமர்ந்திருந்தார். அப்போது ஒரு பெற்றோர் சகோதரர் அவர்களை உள்ளே அழைத்துச் சென்று அமரவைத்துவிட்டு மக்கள் மத்தியில் வந்து, "சகோதரர் அவர்களை வைத்துக்கொண்டு புகழ்வது அவருக்கு அறவே பிடிக்காது. அதனால்தான் நான் அவரை உள்ளே அழைத்துச் சென்றேன்" என்று கூறியதிலிருந்து எத்தகைய மனப்பான்மையோடு தனது இறைபணியையும், கல்விப்பணியையும் தம் கண்ணெனப் போற்றி வாழ்ந்தார் என்பதை அறியமுடிகிறது.

பத்து ஆண்டுகள் கற்பித்தல் பணி, ஆரம்பப்பிரிவு பொறுப்பாளர் பணி என்பவற்றைத் தொடர்ந்து பத்து ஆண்டுகள் பாரம்பரியம் மிக்க மிக்கேல் கல்லூரியின் முதல்வராக மகத்தான கல்விப்பணி ஆற்றியுள்ளார். பாடசாலை தவிர மட்டக்களப்பு தொழிநுட்பக் கல்லூரி, மட்டகளப்பு ஆசிரிய பயிற்சிக் கல்லூரி என்பவற்றில் சிறப்பான முறையில் பகுதி நேர ஆங்கில விரிவுரையாளராகக் கடமையாற்றி பன்னூறு மாணவப் பரம்பரையினரை உருவாக்கிய பெருமை இவரைச் சேரும்.



கல்லூரியின் கணனித்துறை, இலங்கையில் குறிப்பிடக்கூடிய அளவில் முன்னணியில் திகழ்வதற்கு அவரின் திறமையும், அத்துறைசார் ஈடுபாடுமே காரணமாகும்.

பாடசாலை சார்ந்த அனைத்து வளங்களும் கல்விசார் துறை வளர்ச்சிகளும் அவரது அயராத உழைப்பின் வெளிப்பாடுகளாகும். மக்களும், ஆசிரியர்களும், மாணவர்களும், மாவட்டக் கல்வியாளர்களும் உத்தியோகத்தர்களும் இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட விதத்திலிருந்து அவர் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஆற்றியுள்ள கல்விப்பணியினை அறிந்து கொள்ளமுடியும். சமகாலத் தலைமுறையினர் பலர் இம்மாவட்டத்தில் ஆங்கில ஆசிரியர் சேவையினைத் திறம்படச் செய்து வருகின்றனர். இவர்களில் பலர் அன்னாரின் மாணவர்களாவர். பாடசாலையின் கல்வி வளர்ச்சியிலும், பௌதீக வளங்களைப் பெற்றுக்கொள்வதிலும் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார் என்பதே உண்மை.

அன்னாரது இறுதி நிகழ்வின்போது மாவட்ட அரச அதிபர், ஆயர் அவர்கள், இராமகிருஷ்ன மிஷன் மகாராஷ் அவர்கள், பௌத்த தேரர் அவர்கள், மௌலவி அவர்கள் ஆகியோரின் இரங்கல் உரைகளிலிருந்தும், இன்னும் பல துறைசார்ந்த நிபுணர்-களினது உரைகளிலிருந்தும் அவரின் சிறப்பை நன்கு அறிய முடிந்தது. சுமார் இருநூற்றுக்கும் மேற்பட்ட மாணவ அமைப்புக்கள், நிறுவனங்கள், பாடசாலைகள், தனியார் என பல வகையினர் இவரின் இறப்பைத் தெரிவிக்கும் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு தத்தமது நன்றியுணர்வினைத் தெரிவித்தது இதுவரைகாலமும் மட்டக்களப்பில் காணாத வரலாற்று நிகழ்வாகவே தென்பட்டது.

அத்துடன் அருட்சகோதரர் அவர்களின் இறுதி ஊர்வலத்தில்

*(தொடர்ச்சி 19ம் பக்கம்...)*

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

விறு விறுப்புத் தொடர் 46

*சொல்லின் செல்வர்*
*இளவாலை அமுது*

## சந்தன மரத்தில் நந்தவனம்



அன்புப் பணி புரியும் சகோதரிகள் ஏன் துணி கழுவும் இயந்திரத்தைப் பயன்படுத்தவில்லை? மின்விசிறிகளைப் பயன்படுத்துவதால் என்ன குறை? ஏன் திரை அரங்குகளுக்குப் போவதில்லை? களியாட்டங்களில் பங்குபற்றுவதை ஒதுக்குவதன் காரணம் என்ன? இவ்வாறு பலர் கேட்கிறார்கள்.

"இவற்றால் தீமையில்லை. இவையெல்லாம் பொதுவான நிகழ்ச்சிகள்தான். ஆனால் நாங்கள் இவற்றை ஒதுக்கி வைத்துவிட்டோம். வறியவர்களை விளங்கிக்கொள்வதற்கு நாம் வறுமையை அறிந்துகொள்ளவேண்டும். வறுமை என்பது இல்லாமையே! நாங்கள் அரசாங்க உதவியைப் பெற்றுக்கொள்வதில்லை. எங்களுக்கு சம்பளம் இல்லை. எந்த வேலைக்கும் பணம் பெறுவதில்லை. எங்களுக்கு வருமானமும் இல்லை. மலர்கள், பறவைகள் வேலை செய்வதில்லை. இறைவன் அவற்றைக் கவனிக்கின்றார். எங்களையும் இறைவன் கவனித்துப் பேணுகிறார். ஏனெனில் ஏனைய பொருட்களிலும் மனிதர் சிறப்பு பெற்றவர்கள்" என்கிறார் அன்னை.

சகோதரிகளுக்கு ஒழுங்கான வருமானம் கிடைக்க நேரிட்டபோது அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். நியூயோர்க் பட்டணத்தில் உயர்ந்த இடத்திலுள்ள சமயத் தலைவர், ஒரு சகோதரிக்கு 500 டொலர் மாத வேதனம் கொடுக்கலாம் என்று கூறியபோது அன்னை திரேசா, "இறைவன் நியூயோர்க் நகரில் ஓட்டாண்டியாய் போய்விட்டாரென நீங்கள் நினைக்கிறீர்களா?" என்று திருப்பிக் கேட்டார்.

கிறிஸ்துவே கூறியிருக்கின்றார். "வயலில் உள்ள பூக்களிலும், வானத்தில் நீந்தும் பறவைகளிலும் நீங்கள் மேலானவர்கள் எனது தந்தையாகிய இறைவனுக்கு."

எங்களுக்கு வருமானம் இல்லை. ஆனால் எல்லாம் வந்து சொரிகின்றன. எங்களிடம் உணவில்லை என்று இதுகால வரையில் எவரையாவது நாங்கள் திருப்பிவிட்டதில்லை. படுக்கையில்லை உங்களுக்கு தேவையானது இல்லை என்று கைவிரித்தது கிடையாது. 53,000 தொழுநோயாளர்களைக் கவனிக்கிறோம். ஒருவரையாவது இல்லை என்று திருப்பி அனுப்பியது கிடையாது. இலவசமாய் பெற்றுக்கொள்கிறோம். இலவசமாய்க் கொடுக்கிறோம். இவை இறைவனின் அழகான அன்பளிப்புகள்.

எத்தியோப்பியாவில் ஓர் இடம் தேவை என்று பல இடங்களுக்கும் திரிந்தோம். வாடகைக்கு என்று விளம்பரம் தொங்கிய இடத்துக்கு வந்தோம். மாதம் 450 டொலர் வாடகை என்று சொந்தக்காரன் அதை இலவசமாய்த் தந்தார். லண்டனில் அலைந்து திரிபவர்களுக்கு நத்தார் பண்டிகை வைக்க நிதியில்லை. துணைத்தொண்டர்கள் சிறப்பான வேண்டுதல் செய்தனர். மறுநாள் ஆயிரம் பவுணுக்கான காசோலை கிடைத்தது. அதில் அலைந்து திரிபவர்களை அழைத்துப் பயன்படுத்துமாறு எழுதியிருந்தது என்றார்கள்.

செபத்தில் மிக நம்பிக்கையும் உறுதியும் உள்ளவர் அன்னை திரேசா. அது அவருடைய குடும்பச் செடியின் வேரில் இருந்து தோன்றியது. செபத்தை நாம் நேசிக்க வேண்டும். செபத்தால் எங்கள் இதயம் விரிகிறது. கடவுளின் வரங்களால் அது நிரம்பும் வரையில் விசாலமாகிறது. கேளுங்கள் கொடுக்கப்படும் என்றவர் அவர்தான். அவரைப் பெற்றுக்கொள்ளத் தக்கதாக இதயம் விரிந்து அவரை நம்முடையவராக்கி அடக்கி வைக்கிறது. மௌனத்திலே செபம் நடைபெற வேண்டும். சத்தத்திலும், சந்தடியிலும், அமைதியீனத்திலும் அவரைக் காணமுடியாது.

அவர் மௌனத்தின் நண்பன். சேரிகளில் வறியவர்களுக்குக் கடவுளைக் காட்டவில்லையா? அவர் செத்த கடவுளல்லர். உயிரோடு உள்ள அன்பான ஆண்டவர். சொற்கள் உற்பத்தியாக வேண்டிய இடம் உள்ளது. அங்கிருந்து வெளிவராத சொற்கள் இருளையே பரப்புகின்றன. இறைவனுடன் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் உரையாடலாம்.

"இறைவா! நான் உம்மை நேசிக்கிறேன். நான் உம்மில் நம்பிக்கை வைக்கின்றேன். நீரே எனக்குத் தஞ்சம். இவ்வேளையில் என்னோடு வந்திடும்" என்று இப்படியான சின்னச் செபங்களே அழகானவை. சந்தனமரம் நறுமணம் உள்ளது. ஏனைய மரங்களுக்கும் அந்த மணத்தைப் பரப்பும். சந்தனமரம் பட்டுப்போனாலும் மணம் மாறாது. அதை அரைத்தாலும் மணம் கமழும். கிறிஸ்துநாதரும் ஒரு சந்தன மரம். செபம் சந்தன மரத்தைச் சூழ்ந்த நந்தவனம்.

அன்னை திரேசா நோபல் பரிசைப் பெற்ற பின்னர் சச்சரவுகள், மோதல்கள் உள்ள இடங்களில் சமாதானத்தின் குரல் கொடுக்குமாறு அழைப்புகள் வந்தன. வட அயர்லாந்தில் பெல்பாஸ்ற் என்ற தலைநகரில் இருந்து 50 மைல் தூரத்தில் கடலைப் பார்த்தபடி அமைந்திருந்தது மாபெரும் கூடாரம். சச்சரவுகளும் முரண்பாடுகளும் உள்ள இரு பகுதியினர் (புரட்டஸ்தாந்தர், கத்தோலிக்கர்) அங்கே வந்து நிரம்பியிருந்தனர். வன்செயல்களால் ஒரு நண்பரை அல்லது இனத்தவரை இழந்து போவதால் ஏற்படும் இதயநோவை ஒவ்வொருவரும் உணர்ந்திருந்தனர். மறியலில் இருப்போரை நினைந்து பிரிவால் துயருறுவோரும் அங்கே இருந்தனர்.

அன்னையின் உரை, உணர்ச்சிகளைத் தூண்டித் தெய்வீக ஊக்கம் அளித்தது. 1976இல் நோபல் பரிசு பெற்ற திருமதி கொரிக்கன் அந்த உரையைக் கவனமாய்க் கேட்டபடி நின்றார். அவர் சொல்கிறார், "நான் முன்னர் கேள்விப்படாதவற்றையோ விவிலியத்தில் வாசியாதவற்றையோ அன்னை அவர்கள் சொல்லவில்லை. ஆனால் அவர் சொல்வதை முற்றும் வாழ்க்கைக்குக் கொண்டு வருகிறார். கனிவாகவும் அதே வேளையில் வழக்கத்துக்கு மாறாக வற்புறுத்தி எம்மைக் கிறிஸ்தவ வாழ்வு வாழ வருமாறு அறைகூவுகின்றார்.

அன்னை திரேசாவுடைய சொற்கள் பெறுமதி உடையனவாய் இருப்பதற்கான காரணம் அவர் சொல்வதற்கு ஏற்பச் சீவியத்தில் வாழ்ந்து வருகிறார். நான் சமுதாயத்திலுள்ள மக்களை நேசிக்கிறேன். அதனால் கடவுள் என்னை நேசிக்கிறார் என்று அன்னை சொல்லும்போது அந்த உண்மையில் எனக்குச் சந்தேகம் வரவில்லை. அந்தப் பெரிய கூடாரம் மக்களால் நிரம்பி விட்டமையால் நான் அந்தக் குன்றில் கடலைப் பார்த்தபடி நின்று கேட்டேன். துல்லியமாக விழுந்த மழைத்தூற்றல் எனக்குப் புத்துணர்ச்சி தந்தது.

இறைவன் உங்களை நேசிக்கிறார் என்று அன்னை திரேசா சொன்னபோது என் மனதில் ஆழ்ந்த சமாதானம் வந்து குவிந்தது. நான் களைப்புற்றிருந்தாலும் என்னை மீளவும் தியாகம் செய்யவும் சமாதானத்துக்காக என் பணிகளை இருமடங்குக்கு நான்கு மடங்காக்கவும் நரம்புகள் துடித்தன" எனக் கூறுகிறார்.

*(கங்கை தொடர்ந்து பாயும்)*

# உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் பகுதி இல.54

இம்மாதப் போட்டிக்கான வினாக்கள் திருத்தூதர் பணியின் 7ம் அதிகாரம் வரையுள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளன.

உங்கள் வீட்டில் ஒரு விவிலியம் உண்டல்லவா? இல்லாவிட்டால் ஒன்று கட்டாயம் வாங்கிக்கொள்ளுங்கள். மறையறிவுப் போட்டிக்கான விடைகளைத் தேடுவதற்காக மட்டுமல்ல, இறைவார்த்தை நம் இல்லத்தில் இருந்தால்தான் நம் உள்ளத்திலும் இருக்கும். இஸ்ராயேல் மக்கள் நானூறு ஆண்டுகளாக எகிப்தின் அடிமைத்தனத்தில் வாழ்ந்தார்கள். நமக்கு அப்படி ஏற்பட்டுவிடுமோ என்று அச்சமாக உள்ளது. இறைவார்த்தை நம்மில் இருந்தால் நமக்கு நிச்சயமாக விடுதலை கிடைக்கும். சமாதானமாகவும் வாழ்வோம்.

இனி வினாக்களுக்கு வருவோமா?

1. யாக்கோப்பினதும் மூதாதையர்களினதும் உடல்கள் எங்கே அடக்கம் செய்யப்பட்டன?
2. இங்கிருந்த கல்லறைகளை ஆபிரகாம் யாரிடம் இருந்து வாங்கினார்?
3. "எங்களுக்கு உன்னைத் தலைவனாகவும், நடுவனாகவும் நியமித்தவர் யார்? நேற்று எகிப்தியனைக் கொன்றதுபோல் என்னையும் கொல்லவா பார்க்கின்றாய்" இவ்வார்த்தைகள் யாரால் யாருக்குக் கூறப்பட்டன?
4. மோயீசன் தப்பியோடிச் சென்ற நாடு எது?
5. மோயீசனுக்கு எத்தனை பிள்ளைகள் இருந்தனர்?
6. இறைவன் மோசேக்கு எந்த மலையருகே இருந்த பாலை நிலத்தில் காட்சி தந்தார்?
7. தாவீதரசன் யாக்கோப்பின் வீட்டார் வழிபட கடவுளுக்கு ஆலயம் ஒன்றைக் கட்ட விரும்பினார். ஆயினும் அவரால் அது முடியவில்லை. ஆலயத்தைக் கட்டியவர் யார்?
8. ஸ்தோவான் எப்படி இறந்தார்?
9. திருச்சபை வரலாற்றில் ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவர்களை வதைசெய்யத் துணை நின்றவர் யார்?
10. சமாரியா நகர் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் எப்படி அழைக்கப்பட்டது?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 52 இற்கான கேள்விகளுக்கு 30 பேர் விடை அளித்திருந்தனர்.

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:**

**ஏ. மேரி கொண்சலீனா**
**பி - 06, மடுக்கோவில், மடு.**

**பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும்**

**10 அதிஸ்ரசாலிகள்**

1. செ. மேரி ஜெசில்டா, சி - 08, மடுக்கோவில், மடு.
2. வ. டெனிமல், தரம் 9, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
3. வெ. சங்கீதா, உயிர்த்தராசன்குளம், முருங்கன்.
4. நற்குணம் தர்ஷிக்கா, பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்.
5. ஜே. சகிலா, மன்/ சித்திவிநாயகர் இ.கல்லூரி, மன்னார்.
6. செ. வளன் நியூமன் துரம், மாட்டீனார் குருமடம், யாழ்ப்பாணம்.
7. அ. சுபாஜினி, கனகராயன்குளம் தெற்கு, வவுனியா.
8. அ. வேஜின் நிலானி, ஆவணம், நானாட்டான்.
9. ஆர். பற்றிமா நவறோஸ், டென்மார்க்.
10. என். மரியம்மா பீரிஸ், 8ம் வட்டாரம், வங்காலை.

# பாக்கியா! நீர் ஓர் பாக்கியமே

*செல்வி பெனடிக்ரா அந்திரேஸ்பிள்ளை*
*ஜே. ஆர். எஸ். மன்னார்.*



பாரினிலே பலர் பிறப்பதுண்டு, பலர் இறப்பதுண்டு
பிறப்பினின்று வருவது இறப்பு
இறப்பினின்று பிறப்பது இறை வாழ்வு.

பாக்கியறஞ்சித் எனும்
பண்புடை நாமம் பூண்டு
பரமனுக்காய் பாரினில் பணிசெய்ய
பரிவுடை பெற்றோர் பணிவுடன் ஈந்தனர்.

குருவாக உருவாகி
குறுகிய காலத்தில், குருவியாய்ப் பறந்தீர்
பரமன் யேசு பகர்ந்த ஈர்நான்கு வாக்கியங்கள்
பதித்தீர் மனத்தில் பாக்கியமே நீர்.

சிட்டாய்ப் பறந்து சேவை பல புரிந்தீர்
சிறுவர் நலன் காக்க மாதர் மாண்புற
மனம் ஒன்றிப் பாடுபட்டீர்
மாணிக்கப் பெட்டகமே மறைந்தீரே சட்டென்று.

வேறுபாடில்லை, வஞ்சகம் மனதில் கொஞ்சமுமில்லை
ஏழைகளை மதித்தீர் இன்னலுற்றோர் துயர் களைந்தீர்
நேயமுடன் பேசி சிரித்த முகம் காட்டி
பாசமுடன் பழகி பாரபட்சம் காட்டாத பாக்கியமே நீர்.

வீடிழந்தோர், பொருளிழந்தோர் வீதியிலே நின்றவேளை'
வாருங்கள் என்றணைத்தீர்
சிரித்த முகமெங்கே? சீரான பேச்செங்கே?
சீரிய சிந்தையனே! செல்வமே! எம் குருவே!

மக்கள் சேவையே மகேசன் சேவையென
மங்காப் புகழ் ஓங்க அறத்தோடு நின்று
ஆன்மீகப் பணிபுரிந்த, பாக்கியமே நீர் ஓர் பாக்கியமே!

செய்திக் கட்டுரை

# முத்திப்பேறு பெற்ற அன்னை திரேசா வழியாக
# மீண்டும் ஒரு புதுமை!

இந்தியக் குருவானவர் ஒருவருக்கு சிறுநீரகத்தில் உள்ள கல்லடைப்பு முத்திப்பேறுபெற்ற அன்னை திரேசாவின் பரிந்துரையால் நீங்கியுள்ளது.

அஸ்ஸாம் மாநிலம் கௌகாட்டியைச் சேர்ந்த அருட்தந்தை வி. எம். தோமஸ் அவர்களுக்கு சிறுநீரகக் கல் அடைப்பில் அடி வயிற்றில் அதிகமான வலி இருந்திருக்கின்றது. சிறுநீரக் கல்லடைப்பை நீக்குவதற்காக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். மருத்துவரின் ஆலோசனையின்படி செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி அறுவைச் சிகிச்சை நடைபெற வேண்டும்.

அதற்கு முந்தைய நாள் செப்ரெம்பர் 5ஆம் திகதி மருத்துவரின் அனுமதியோடு அன்பின் பணியாளர் அருட்சகோதரிகள் (அன்னை திரேசாவின் அருட்சகோதரிகள்) பணிபுரியும் சிசு பவனில் முக்திப்பேறுபெற்ற அன்னை திரேசாவின் 10ஆம் ஆண்டு நினைவுத் திருப்பலியை நிறைவேற்றியுள்ளார். திருப்பலியில் முக்திப்பேறுபெற்ற அன்னை திரேசா வழியாக தன்னுடைய நோய் நீங்க வேண்டுமென்று செபம் செய்துள்ளார்.

அன்று மாலை மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். மறுநாள் அறுவைச் சிகிச்சை நடத்துவதற்கான ஆயத்தப் பணிகளை மருத்துவர்கள் ஆரம்பிப்பதற்கு முன்னதாக மீண்டும் எக்ஸ்ரே எடுத்து கல் இருக்கும் இடத்தை தெளிவாகக் கண்டுணர முயன்றனர். எக்ஸ்ரேயில் கல் அடைப்பு முழுமையாக நீங்கியுள்ளதையும், கல் இருந்ததற்கான அடையாளமே இல்லை என்பதும் உறுதிசெய்யப்பட்டது. அறுவைச் சிகிச்சைக்கு முன்பாகவே கல் அகன்றுள்ளது.



நிச்சயம் இது புதுமை என்று மருத்துவச் சான்றிதழ் கொடுத்திருப்பதாகவும், அறிவியல் பூர்வமான ஆய்வுக்கு இது அப்பாற்பட்டது என்றும் தெரிவித்துள்ளனர். கௌகாட்டி பேராயர் தோமஸ் மெனம்பரம்பில் அருட்தந்தை தோமஸ் குணம் பெற்றிருப்பது அறிவியல் மற்றும் மனித விளக்கங்களுக்கு அப்பாற்பட்டது என்று உறுதிசெய்துள்ளார்.

"நான் சுகம் அடைந்துள்ளது அன்னை திரேசாவின் வழியாக பெற்றுக்கொண்ட புதுமை" என்று அருட்தந்தை தோமஸ் கூறியுள்ளார். இந்திய இளம் பெண்ணின் அடிவயிற்றுப் புற்றுநோய் அன்னை திரேசாவின் பரிந்துரையால் நீங்கியுள்ளதை ஏற்கனவே 2002ஆம் ஆண்டு வத்திக்கான் ஏற்றுக்கொண்டுள்ளது. மீண்டும் நிகழ்ந்துள்ள இந்தப் புதுமை வழியாக அன்னைக்கு புனிதர் பட்டம் விரைவில் கிடைக்க வாய்ப்புள்ளது என்று ஆசிய செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

## குடும்பக் குவலயம்





# வேற்றுமையிலும் ஒற்றுமையை வெளிப்படுத்தும் ஆரோக்கியமான குடும்பங்கள்



"ஒரு முடிவை நாடி ஆண்கள் மணம் செய்கிறார்கள்; ஒரு தொடக்கத்தை நாடி பெண்கள் மணம் முடிக்கிறார்கள்" என அலெக்ஸீஸ் ரூப்பை என்ற அறிஞர் பெண்களின் மனத்தை வெளிப்படுத்தினார். இதில் பல அர்த்தங்கள் உண்டு.

கனவுகள், கற்பனைகள் என்பன எல்லோருக்கும் உண்டு. இந்த உலகில் வித்தியாசமான புதுவாழ்வை வாழ்ந்து காட்ட வேண்டும் எனச் சிலர் எண்ணுவதில் என்ன தவறுண்டு? வாழ்க்கையில் நாம் நினைத்தவை எல்லாம் நிறைவேறுவது இல்லைத்தான். சில தடைகள் ஏற்பட்டதுமே சிலர் தீயில் விழுந்த புளுவைப்போல வாழ்வையே வெறுப்போடு எதிர்கொள்கின்றார்கள். இது தவறானது.

இன்பத்தை, மகிழ்ச்சியை எதிர்கொள்ள ஆவலுறும் மனங்கள், துன்பங்கள், சவால்களை எதிர்கொள்ளவும் மனதைப் பக்குவப்படுத்த வேண்டும். எதிலும் தடையின்றிச் செல்வதற்காய் குறுக்குவழிகளை நாடக் கூடாது. தவறான முடிவுகளை எடுக்கும் நிலைக்கு குடும்ப உருவாக்கம் காரணமாகிவிடக்கூடாது.

நடைமுறை வாழ்வை ஏற்றுக்கொள்ள, உண்மைகளை உணர்ந்துகொள்ள, சந்தர்ப்பங்களை பொறுப்புக்களை எதிர்கொள்ள குடும்பத்தில் பகிர்ந்துகொள்ளும் பண்பு மலர வேண்டும். தொலைக்காட்சிக் குடும்பமாக, வெளியார் வழிகாட்டும் குடும்பமாக, எப்படியும் வாழலாம் என வழிப்படுத்தும் குடும்பமாக, வருவாய்க்காக வீட்டில் எவரையும் வாடகைக்கு அமர்த்தி வாழும் குடும்பமாக உள்ள குடும்பங்கள் திசைமாறிச் செல்வது தவிர்க்க முடியாததே.

ஒருமுறை தனது பிள்ளைக்கு மன அழுத்தம் இருப்பதாக தாயார் ஒருவர் உள ஆற்றுப்படுத்தும் நிலையத்தை நாடி வந்தார். மிகவும் வசதிபடைத்தவர்கள்போல அவர்களது நடை, உடை பேச்சுக்கள் அமைந்திருந்தன. வெளிநாட்டவர்கள்போல் தம்மை வெளிப்படுத்தினார்கள். தாயார் பிள்ளையை அறிமுகப்படுத்திய போது, "இவள் வெளிநாடு செல்ல இருக்கிறாள். இவள்தான் எங்கள் மூத்த பிள்ளை. பொறுப்பில்லாமல் எங்கள் சொல்லை கேட்காமல் பிடிவாதமாய் இருக்கிறாள்" எனக் கூறி ஒரு படத்தைக் காட்டி, "இதுதான் இவள் முடிக்க இருப்பவர்" என விபரித்தார். "நான்கு பிள்ளைகளில் மூத்தவள் இவள் சென்றால்தான் நாங்களும் முன்னேறி வாழலாம்" எனத் தாய் கூறியபோது, "அம்மா இப்படித்தான் எல்லோருக்கும் சொல்லுவா. எப்பவோ ஒருநாள் நான் வேலையிலிருந்து வீட்டுக்கு வரும்போது வீட்டில் பலர் இருந்தார்கள். கூடிக் கதைத்தார்கள், விருந்துண்டார்கள், படங்கள் எடுத்தார்கள். அப்போது நான் படித்துக்கொண்டிருந்தேன். இப்போ இவர்தான் மாப்பிள்ளையாம். அன்று நடந்தவை கலியாண எழுத்தாம் என்று நான்கு வருடங்களாக கூறி வருகின்றார்கள். எனக்கோ எதுவும் ஞாபகத்தில் இல்லை. இதையே பலருக்கும் சொல்லித் திரிகிறார்களே தவிர எந்தத் தொடர்பும் எமக்கில்லை. இதுபற்றி பலரும் என்னைக் கேட்கிறார்கள். இது எனக்கு வெட்கமாய் இருக்கின்றது" என்றாள் 24 வயது நிரம்பிய அந்த மகள்.

குடும்பக் கட்டமைப்புக்கள் இன்றும் இறுக்கமானவையாக உள்ளன. யாருக்குத் திருமணம் நடைபெற இருக்கிறதோ அவர்களுக்கே எதுவும் தெரியாத நிலை எவ்வளவு விசித்திரமானது. எதிர்பார்ப்புக்கள் பெரியோருக்கு வேறாகவும், திருமணத்தில் இணைவோருக்கு வேறாகவும் இருப்பது மிகவும் சங்கடமானதாகும்.

இப்படி எத்தனையோ நிகழ்வுகள் உண்டு. ஒருவர் ஒருவர்மீது *உளநோயாளி* எனப் பட்டம் சூட்டி குழப்பமடைவதைக் காண்கின்றோம். இப்படி உருவாகும் குடும்ப உறவுகள், செல்லும் இடங்களிலும் பல விபரீத விளைவுகளை, முடிவுகளைச் சந்திக்கின்றன.

***உறவுகளின் இராகங்கள்*** எனும் நூலில் நூலாசிரியர் வின்சன்ற் பற்றிக் (அமதி) அவர்களின் கூற்றுப்படி, "ஒவ்வொரு மனிதனும் விசித்திரமானவர், மனிதத்துவம் மிக்கவர், ஒருவர் மற்றவரில் இருந்து உடல், பால், அனுபவங்களில் மட்டும் வேறுபட்டவர் அல்ல, முக்கியமாக மனோ நிலையில் அதாவது உள்ளம், சிந்தனைத்திறன், செயற்றிறன் இவற்றிலும் வேறுபட்டவரே. இவ்வாறு வேறுபாடுகள் எல்லோருக்கும் பொதுவானது" என்கிறார்.

இந்த வேற்றுமையிலும் ஒற்றுமையுடன் வாழும் குடும்ப உறவுகள் எமது கலாச்சார பண்பாட்டிலும் புனிதமாகப் போற்றப்படுகின்றது. இவை சில சமயம் ஆணாதிக்க சக்தியாக இருப்பதாகத் தோற்றம் பெற்றாலும் இதனைப் போற்றுவதில் குடும்பக் கட்டமைப்புக்கள் ஆரோக்கிய சமுதாயத்தைப் படைக்கவே முயல்கின்றன எனலாம். ஒருவனுக்கு ஒருத்தி என்ற வாழ்வு முறைகள் மேற்கத்திய வாழ்வுக்கும் அதன் மோகத்திற்கும் சவாலாக உள்ளது. எமது பண்பாட்டைப் பேணுவதில் ஒருவர் ஒருவரது விட்டுக் கொடுப்பும், புரிந்துணர்வும், எங்கு சென்றாலும் முன்மாதிரிகையான வாழ்வுமுறையும் தனித்துவமாகப் பேணப்படுவது சிறப்பானதாகும்.

வெளிநாடு சென்று ஆன்மீக உரையாற்றும் பெரியார் ஒருவர் தனது திருமண முப்பத்தைந்தாண்டு நிறைவை நினைவுகூர்ந்த போது மேற்கத்திய நண்பர்கள் ஒரு மனைவியுடன் முப்பந்தைந்து ஆண்டுகளாக வாழ்ந்தீர்களா? என வியப்படைந்து வாழ்த்து மடல்களை அனுப்பினார்களாம்.

போர் வரலாம், இயற்கை அழிவுகளை எதிர்கொள்ளலாம், ஆனால் எமது குடும்ப கட்டமைப்பைச் சிதைத்தால் அதனைச் சீர்செய்வதற்கு எவராலும் முடியாமல் போகலாம். உள்ளத்து உணர்வுகளில், எதிர்பார்ப்புக்களில், விருப்பு வெறுப்புக்களில், மற்றவர் மனநிலையை அறிந்து வாழ்வதில் தடங்கல்கள், சங்கடங்கள் ஏற்படலாம். சில சமயம் தன் மனத்தைக்கூட சரியாக புரிந்துகொள்ளாது தடுமாறும் நிலை ஏற்படலாம்.

மற்றவரது மன உணர்வுகளை முழுமையாகப் புரிந்துகொள்ளல் கடினமானதாக இருக்கலாம். ஒருவர் தன் மனநிலையை மற்றவருக்கு வெளிப்படுத்தும்போது, வார்த்தைகள் மூலம் 7% மும், சைகைகள் மூலம் 30% மும், முகவேறுபாடுகள் மூலம் 55% மும் வெளிப்படுத்துவதாக மனோதத்துவ ஆராய்ச்சிகள் கூறுகின்றன. இதை நாம் புரிந்துகொள்வது முக்கியமானது. திருமண வாழ்விலும் எமது எதிர்பார்ப்புக்கள், தெரிவுகள் முழுமையாக நிறைவேறாமல் இருப்பதற்கு ஒருவர் ஒருவருடைய மனநிலையைப் புரிந்துகொள்ளாமல் இருப்பது முக்கிய காரணமாக இருக்கலாம்.

எத்தனையோ குறைகள் மறைந்து நிறைகள் வளர சிலரது திருமண உறவு காரணமாய் அமைந்துள்ளது. அதேவேளை குடும்பத்தில் இணையுமுன் சிறந்த வாழ்வு வாழ்ந்தவர்கள் இணைந்தபின் சீர்கெட்டுப் போனதையும் பார்க்கின்றோம். திருமணத்தில் இணைவோருக்கான எதிர்பார்ப்பு, தேடல்கள், முன் ஆயத்தங்கள் குடும்பத்தில் இருந்தே கற்றுக்கொள்ளப்பட வேண்டும். உறவுகளைப் பலமாக்கிக்கொள்வதில் குடும்ப புதுப்பித்தலும், புனரமைப்பும், மீள்பார்வையும் இணையும் தம்பதிகளிடையே அடிக்கடி நடைபெறுவதே வேற்றுமையிலும் ஒற்றுமையாக வாழும் மகிழ்வான குடும்பத்தை கட்டி வளர்க்க முடியும்.

நல்ல குடும்பம் மலர்வதற்கு நாம்தான் பொறுப்பு என்பதை குடும்ப உறவில் இணையும் இருவரும் உணரவேண்டும். பணம், பொருள், பதவி, வசதி வாய்ப்புக்கள் மட்டும் மகிழ்வான வாழ்வைக் கொடுக்காது என்பதை உணரவேண்டும். உளமார உறவாடல், உரையாடல் மற்றும் ஏற்றுக்கொள்ளலுடன், பால்நிலை உறவாடலும், ஆன்மீக அன்பும், பகிர்தலூடான சுயநலமற்ற நட்புறவே மகிழ்வான குடும்பத்தின் நலமான வாழ்வைக் கொண்டுவரும். அதுவே வேற்றுமையிலும் ஒற்றுமையை வெளிப்படுத்தும் ஆரோக்கிய குடும்பமாகத் திகழும். ●

# மருத்துவப் பொழிவு

## வாழைப்பூ சாப்பிட்டால் வாழ்வுதான்...!

- வாழைப்பூவில் விதவிதமான கூட்டு, குழம்பு, வடை, அடை, தோசை என்று செய்து சாப்பிட்டு வரலாம். துவர்ப்பு சுவையுடையது. இதனால் வயிற்றுப்புண் வராது.
- வாழைப்பூவை இடித்துச்சாறு எடுத்து கடுக்காய் சேர்த்துச் சாப்பிட்டால் மூலநோய் குணமாகும். கர்ப்பப்பை பத்திர மாகும்.
- வாழைப்பூவை அரிந்து, சுத்தப்படுத்த சற்றே அதிக நேரம் எடுக்கும். கழிவு நீக்கி, அரிந்து சுத்தப்படுத்தியும் விற்பனைக்குக் கிடைக்கிறது. வெளிப்புறத்தில் உள்ள சற்றே பெரிய இதழ்களை வேகவைத்து ஊறவைத்துக் கடலைப் பருப்புடன் சேர்த்து பெருஞ்சீரகம் வெங்காயம், பச்சைமிளகாய், கறிவேப்பிலை, கொத்தமல்லி இவற்றைப் பொடியாக நறுக்கி சேர்த்து உருண்டைகளாக வேகவிட்டு கோளா வடைகளாக சுட்டெடுப்பது புதிதில்லை.
- உள்ளிருக்கும் பாகம் மிருதுவாக வெந்து, சற்றும் துவர்ப்பின்றி ருசியாக இருக்கும். தேங்காய்ப் பாலில் வேகவிட்டு, குழம்பு வைக்கலாம்.
- வெயில் நேரம் அதிக காரம் சேர்க்காமல் இருப்பதே நல்லது.
- காய்கள் தார்விட்ட பின்னும் வாழைப்பூ கிடைக்கிறது. பூவை எடுத்து விட்டால் காய்கள் கிடைப்பதில் குறைவில்லை.
- இந்த வாழைப் பூ பெண்களுக்கு பிரத்தியேக நன்மைகள் செய்கிறது.



## உடனடி வைத்தியம்

**தலைவலி :**

ஐந்து துளசி இலைகளை மென்று தின்றுவிட்டு இரண்டு இலைகளைக் கசக்கி தலையில் நோயுற்ற இடத்தில் சிறிது நேரம் அழுத்தித் தேய்த்தால் எவ்வகைப்பட்ட தலைவலியும் உடனே நீங்கும்.

**தலைச் சுற்று :**

துளசியை காயவைத்து இடித்துச் சலித்து வைத்துக்கொண்டு இந்தத் தூளை மூக்கில் உறிஞ்சிவந்தால் தலைச் சுற்று, தலைவலி, தலைக்குடைச்சல் மற்றும் மூக்கடைப்பு குணமாகும்.

**பல்வலி :**

துளசிச் சாற்றில் சிறிது கிராம்புத்தூளும் கற்பூரமும் கலந்து சொத்தைப் பல்லிலும் ஈறுவீக்கமுள்ள பல்லிலும் வைத்து அழுத்தி வந்தால் வலி குறையும்.

**படைதேமல் :**

துளசிச் சாறு எலுமிச்சைச் சாறு, கற்பூரம் ஆகியவற்றை சம அளவு சேர்த்து தடவிக் குளித்து வந்தால் படை, தேமல், சொறி போன்றவை குணமாகும்.

**முகப் பருநீங்க :**

அம்மான் பச்சரிசி என்பது ஒரு மூலிகைச் செடி. இதன் இலைகளைக் கசக்கி சாறு எடுத்து அதே அளவுக்கு துளசி இலைச் சாற்றைக் கலந்து பரு உள்ள இடத்தில் தொடர்ந்து தடவி வர முகப்பரு மறைந்துவிடும்.

*யோ. றொபேட்சில்வா றொபினா*
*கற்கிடந்த குளம், முருங்கன்.*

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது
ப. அருளப்பு குயின்ரா
சாவ‌ம்பன்

### தேங்காய்ப் பொடி



**தேவையான பொருட்கள்**

முற்றின தேங்காய் - 2
செத்தல் மிளகாய் - 25
புளி - தேசிக்காய் அளவுக்கு
பெருங்காயம் - 1 துண்டு
கடலைப்பருப்பு - 2 மே.க
உழுத்தம்பருப்பு - 2 மே.க
நல்லெண்ணெய் - 3 தே.க

**செய்முறை :**

துருவிய தேங்காய்ப்பூவை பொன்நிறமாக வறுத்து தட்டில் எடுத்துக்கொள்ளவும். அதே தாச்சியில் ஒரு தேக்கரண்டி நல்லெண்ணெய்விட்டு கடலைப் பருப்பு மற்றும் உழுத்தம் பருப்பை சிவக்க வறுத்து தேங்காய்ப் பூவையும் அத்துடன் கலக்கவும். பெருங்காயத்தையும், செத்தல் மிளகாயையும் தனித் தனியாக எண்ணெய்விட்டுப் பொரித்து எடுத்து எல்லாவற்றையும் 2 - 3 நாட்கள் நல்ல வெய்யிலில் உலர்த்திய பின்னர் எல்லாவற்றையும் கலந்து ஒரு போத்தலில் போட்டுவைக்கலாம்.

நீண்ட நாட்களுக்குக் கெடாமல் இருக்கும். தேவை ஏற்படும்போது உப்பு, புளி சேர்த்து மிக்சி, அல்லது அம்மியில் லேசாக அரைத்தெடுத்துப் பயன்படுத்தலாம். தோசை, இட்லி, ரொட்டி, பாண், இடியப்பம் என எல்லாவற்றுடனும் தொட்டுச்சாப்பிடுவதற்குச் சுவையாக இருக்கும்.

## மருதாணிப் பூக்களை உதிர விடாதீர்கள்

*உங்கள் வீட்டில் மரமிருக்கிறதா? மருதாணி பூக்கிறபோது அந்தப் பூக்களை வீணாக உதிர்ந்துபோக விடாமல், பறித்தெடுத்து உலரவைத்து தேங்காய் எண்ணெயில் போட்டு அந்த எண்ணெயை தலைக்குத் தேய்த்து வந்தீர்கள் என்றால் தலை குளிர்ச்சியடைந்து முடி உதிர்வது குறைந்து, நன்கு செழித்து வளரும் வாய்ப்பு உள்ளது. வாசம் மனதை அள்ளும்.*

# பெரியப்பா பதில்கள்





கேள்வி : 'வார்த்தை ஜாலம்' என்று சொல்லுகிறார்களே. அப்படி என்றால் என்ன பெரியப்பா?

*- மகாதேவன், வவுனியா*

பதில் : இதுதான் அது! என். எஸ். கிருஷ்ணனும், அவர் மனைவியும் பக்கத்து வீட்டுத் தம்பதிகளோடு ஒரு விழாவுக்கு செல்லவிருந்தார்கள். பக்கத்து வீட்டுப் பெண் என். எஸ். கிருஷ்ணனிடம், "யாரெல்லாம் விழாவுக்குப் போகிறோம்" என ஆவலுடன் கேட்டார். உடனே "நான் உன் புருஷன், நீ என் மனைவி" என்றார் என். எஸ். கிருஷ்ணன். அந்தப் பெண் அதிர்ந்துவிட்டார். அதன்பின் சொற்களைப் பிரித்து "நான், உன் புருஷன், நீ, என் மனைவி நான்கு பேரும் போகிறோம்" என்றார்.

கேள்வி : ஒரு மனிதனது உழைப்பிற்கும், வளர்ச்சிக்கும் முடிவு என்பதே இல்லையா? *- அன்ரனிஸ், செட்டிகுளம்.*

பதில்: இல்லை என்றுதான் நான் நம்புகின்றேன். இதோ இந்த உரையாடல் அதற்குச் சான்று.



உலகின் பெரும் பணக்காரர்களில் ஒருவர் ராக்பெல்லர். ஒரு சமயம் அவர் விமானத்தில் பயணம் செய்யும்போது, அவர் பக்கத்தில் அமர்ந்திருந்த ஓர் இளைஞர், "நீங்கள்தான் கோடிக்கணக்கில் பணம் வைத்திருக்கிறீர்களே. ஏன் இன்னும் இயந்திரம்போல் உழைக்கவேண்டும்" என்று கேட்டான். "தம்பி இந்த விமானம் வெகு உயரத்திற்கு வந்துவிட்டது. உயரத்திற்கு வந்துவிட்டோமே என்று என்ஜின் வேலை செய்யாமல் போனால் விமானம் என்ன ஆகும்? நாம்தான் என்ன ஆவோம். எனவே உயரத்திற்கு வந்தால் மட்டும்போதாது தொடர்ந்து உழைத்தால்தான் அந்த நிலையைத் தக்கவைக்கலாம்" என்றார்.

கேள்வி : சாவைத் தீர்மானிப்பது மனிதனா? கடவுளா?

*- பீற்றர்சன், மன்னார்.*



பதில் : ஒரு சமயம் காந்தி அடிகள் சில தலைவர்களுடன் காரில் பயணம் செய்து கொண்டிருந்தார். அப்போது காந்தி அடிகளைக் குறிவைத்து யாரோ ஒருவன் துப்பாக்கியால் சுட்டிருக்கிறான். குறி தவறியதால் அசம்பாவிதம் எதுவும் நடக்கவில்லை.

காரில் இருந்தவர்கள் சாரதியிடம் காரை வேகமாகச் செலுத்தச் சொல்லியுள்ளார்கள். ஆனால் காந்தி அடிகளோ காரை நிறுத்தச் சொன்னார். சாரதி காரை நிறுத்தியவுடன் காந்தி அடிகள் இறங்கி சர்வசாதாரணமாக நடக்க ஆரம்பித்துவிட்டார். எல்லோரும் செய்வதறியாது தவிக்கையில் காந்தி அடிகள், "எவ்வளவு காலத்திற்கு நான் இருக்க வேண்டும் என்று இறைவன் நினைக்கின்றானோ, அவ்வளவு காலம் இருந்தே தீருவேன். என்னைக் கருவியாகக்கொண்டு சில காரியங்களை நடத்தி வரும் கடவுள் அவை பூர்த்தியாகும் முன் என்னை அழைத்துக் கொள்ள மாட்டார்" என்றார்.

கேள்வி : இன்று விலைவாசி உயர்வினால் குடும்பங்களில் குழப்பங்கள்தான் ஏற்படுகின்றன. மாதச் சம்பளம் கொஞ்சம்கூட போதுமானதாக இல்லை. என்ன செய்வதென்றே தெரியவில்லை பெரியப்பா?

*- வித்தியாதரன், அடம்பன்.*

பதில் : உண்மைதான்! "கையிலே வாங்கினேன். பையிலே போடலே. காசு போன இடம் தெரியல" என்றுதான் இன்று பலரும் அங்கலாய்க்கின்றனர்.

கேள்வி : வாழ்க்கையில் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாமல் தவிக்கின்றேன். என்ன செய்யலாம்?

*- சத்தியசீலன், வவுனியா*

பதில் : "மனிதனின் எல்லாப் பிரச்சினைகளுக்குமான தீர்வுகள் அவற்றை அவன் புரிந்துகொள்ளுவதில்தான் ஒளிந்திருக்கிறது" என்கிறார்கள் ஞானிகள்.

கேள்வி : 'புறமுதுகு' காட்டுவது அழகா? அல்லது அழுக்கா? *- நித்தியா, அடம்பன்*

பதில் : நடிகைகள் புறமுதுகு காட்டினால் அழகு! போரில் புறமுதுகு காட்டினால் அழுக்கு... இல்லை... இல்லை... இழுக்கு.

கேள்வி : மற்றவர்களிடம் மோதிக்கொண்டே இருப்பவர்களின் வாழ்க்கை எப்படியிருக்கும்...!

*- புனிதக்குமார், வங்காலை.*

பதில் : கரையேறாக் கடல் அலைகள் மாதிரி இருக்கும். சில சமயங்களில் மற்ற அலைகளுக்கு அது இரையாகவும் கூடும்.

கேள்வி : கல்வியா, செல்வமா என்ற விவாதம் இன்று அடங்கிப்போய்விட்டதுபோல் தெரிகிறதே?

*- முடியரசு, முருங்கன்.*

பதில்: கல்வியா, செல்வமா என்ற விவாதம் அடிபட்டுப்போய், இன்று கல்வியே செல்வம் என்ற நிலை தோன்றியுள்ளது.

கேள்வி : பெரியப்பா, 'Good Bye' என்று சொல்கிறார்களே. அதன் அர்த்தம் என்ன? *- அமிர்தலிங்கம், மட்டக்களப்பு.*

பதில் : God be with you என்பதன் சுருக்கம்தான் "Good bye"

கேள்வி : கூழாங்கற்கள் எதிர்காலத்தில் வைரங்கள் ஆகும் என்று என் நண்பன் வாதிடுகின்றான்?

*- மதிவதனி, கொழும்பு*

பதில்: கருவாடு மீண்டும் மீனாகுமா? என்று அவனிடம் கேளுங்கள்.

# நீங்காத நினைவுகள்

## 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 11 - 09 - 1916

உதிர்வு 19 - 11 - 2006

**அருட்தந்தை. ஜே. ஏ. கருணாகரர்**
**(யாழ் மறைமாவட்டம்)**

*ஆண்டவரே நீர் அபிஷேகம் செய்த அருட்தந்தையின் ஆன்மாவின்மேல் உமது பார்வையைத் திருப்பியருளும்.*

*நம் கண்கள் ஆண்டவராகிய கடவுளையே பார்க்கின்றன. நம்மீது இரக்கம் காட்டும்வரை அவரைப் பார்த்தபடியே இருக்கும்.* அருட்தந்தை நோயுற்றிருந்தபோது மன்னாரில் இருந்துவந்து பார்த்து, உதவிகள் பல செய்து, அவருக்கு ஆறுதல் கூறி, திருப்பலி ஒப்புக்கொடுத்து ஆசீர்வதித்த மன்னார் ஆயர், திருமலை, மட்டுநகர் ஆயர், கண்டி ஆயர், இறைமக்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நண்பர்கள், அனைவருக்கும் எமது நன்றிகள்.

*இவரின் பிரிவால் துயருறும்:*
*அன்புத் தம்பிமார், செல்வி. குணா*

## நினைவஞ்சலி

**10ம் ஆண்டு**



மலர்வு 23 - 12 - 1922

உதிர்வு 04 - 10 - 1997

**வஸ்ரீயான் அந்தோனி ரோச்**

**1ம் ஆண்டு**



மலர்வு 05 - 05 - 1927

உதிர்வு 15 - 12 - 2006

**அந்தோனி ஆனாள் பெரேரா**

**"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"**

"நெஞ்சமதில் நிறைந்த அம்மை அப்பனே!
நேசமாய் எம்மை வளர்த்த பெற்றோரே!
கொஞ்சிடும் அன்பு மொழி கேட்டு ஆண்டு
ஒன்றென்ன, பத்தென்ன சென்றாலும்
உங்கள் பிஞ்சுகளாய் கலங்குகின்றோம்.
எம் பெற்றோரே! தெய்வங்களே!"

*இவர்களின் ஆன்ம சாந்திக்காக 15.12.2007 அன்று காலை 6.00 மணிக்கு பள்ளிமுனை புனித லூசியா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.*

இவர்களின் பிரிவால் துயருறும்:
*மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 5ம் ஆண்டு நினைவு



மலர்வு 05 - 10 - 1920

உதிர்வு 19 - 11 - 2002

**திருமதி. அ.மேரி மாக்றேட்**
**(பாலைக்குழி, அடம்பன்)**

பாசம்மிகு எங்கள் தாயே!
நீங்கள் பாரினில் வாழ்ந்து முடித்தது ஐந்து ஆண்டுகள். வாழ்ந்த காலம் எண்பது ஆண்டுகள்.
வாழவைத்த இறைவனின் பாதத்தில் நீங்கள்
வாழ்ந்துகொண்டு இருக்கின்றீர்கள்.
உம் நினைவுகளுடன் நாங்கள்.
பாசம்மிகு தாயே, ஏன் எங்களைவிட்டு பிரிந்து சென்றீர்கள்? உங்களுக்காக மன்றாடுகின்றோம்.

*இவரின் பிரிவால் துயருறும்:*
***பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.***

*தகவல்: அற்புதமலர் குமார், சுவிஸ்.*

*இவரின் ஆன்ம சாந்திக்காக புனித அந்தோனியார் ஆலயம் திருகோணமலை, புனித மரியாள் ஆலயம் அரந்தாங்கி (இந்தியா), HIEILGKREUZ, SWITZARLAND ஆகிய இடங்களில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.*

## 2ம் ஆண்டு நினைவு



மலர்வு 10 - 10 - 1934

உதிர்வு 08 - 11 - 2005

**திருமதி. செ.அருளம்மா பேதிரு**
**(முருங்கன்)**

எங்களைப் பிரிந்து ஆண்டுகள் இரண்டாக
உருண்டோடி விட்டாலும் அம்மா ...
உங்கள் அன்பின் பகிர்வும் பாசத்தின் பரிவும்
நேசத்தின் உறவும்... என்றும் அழியாத
நினைவுகளாக எங்கள் நெஞ்சங்களில்
தினம் தினம் மலரும் புதிய பூக்களாக...!
அன்னையே! உங்கள் ஆன்மா
இறைவனின் ஒளியில் நித்திய மகிமைபெற
நித்தமும் பிராத்திக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
*கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், அன்பர்கள்.*

*தகவல் :- திரு. எம். பேதிரு,*
*முருங்கன் பிட்டி, முருங்கன்.*

**ஓர் அனுபவப் பகிர்வு**

# வேண்டுதலினால் கிடைத்த வெற்றி

செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றுக் கொண்டு இருக்கும் கு. கட்சன் போல்ராஜ் ஆகிய நான் நடந்து முடிந்த 2007ஆம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் பரீட்சைக்கு என்னை ஆயத்தப்படுத்திக்கொண்டு இருந்தேன்.

அப்போது எனது தந்தையான கிறிஸ்ரி குணராஜா அவர்களும் எனது தாயாரான மரிய றீற்றா ஆகிய இருவரும் என்னிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தனர். அதாவது இந்தப் பரீட்சையில் 170 புள்ளிகள் பெற்று இந்தப் பாடசாலையில் புதிய சாதனை நிலைநாட்ட வேண்டும் என்பதே அந்த வேண்டுகோள். எமது குடும்பச் செபத்திலும் அவர்களது தனிச் செபங்களிலும் எனது பரீட்சைக்காக செபித்து வந்தார்கள்.

அவ்வாறே நானும் தனித்துச் செபிக்கத் தூண்டப்பட்டேன். எனது அப்பா ஒரு சிறிய செபம் ஒன்றை எழுதித் தந்து, இந்தச் செபத்தை பயன்படுத்திச் செபிக்கும்படி கூறியிருந்தார்கள். அந்தச் செபத்தினால் கிடைத்த வெற்றியை எல்லோருக்கும் சாட்சியாக முன்வைக்கின்றேன்.

**அந்தச் செபம் இதுதான்:**

*அன்பான நேச இயேசுவே, நீங்கள் இப்பூவுலகில் நடமாடியபோது உங்களைத் தேடிவந்த சிறுவர்களை அணைத்துக்கொண்டு அவர்களை எல்லாம் ஆசீர்வதித்தீர்களே, பலவிதமான சந்தேகங்களோடு உங்களிடத்தில் வந்த வாலிபன் ஒருவன்மீது அளவில்லாத அன்பைக் காட்டினீர்களே. இப்பொழுதும் உங்களைத் தேடி வந்திருக்கும் பாவியாகிய என் வேண்டுதலையும் ஏற்றுக்கொள்ளுங்கள். ஆவியானவரே என் வேண்டுதலில் கூட இருந்து துணைசெய்யுங்கள்.*

*இயேசுவே, உங்களுடைய பன்னிரண்டாவது வயதில் உங்களுக்கிருந்த ஞானத்தைக் கண்டு யாவரும் வியந்தனர். அது மட்டுமல்ல நீங்கள் அந்த ஞானத்தில் வளர்ந்துகொண்டே வந்தீர்கள் என்று வேதம் கூறுகிறது. உங்களுடைய வார்த்தையைக் கேட்ட யாவரும் வியந்துபோனதை அறிவோம். அந்த ஞானத்தில் கொஞ்சமாவது தரும்படியாக ஞானத்தின் ஆவியானவரான உங்களிடம் இந்தவேளை இரந்து வேண்டுகின்றேன். "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் இறைவனிடத்தில் கேட்கக்கடவான். அப்பொழுது அவனுக்கு கொடுக்கப்படும்" என்று வாக்குரைத்தீர்களே, அந்த வார்த்தையை நம்பி உங்களண்டை வந்திருக்கும் எனக்கும் உங்களது ஞானத்தைத் தந்து என்னுடைய ஞாபக சக்தியை அளவில்லாமல் பலுகிப் பெருகச் செய்தருளும்படியாக கெஞ்சிக் கேட்கின்றேன்.*

*என் ஆண்டவரே, ஆவியானவரே, நான் படிப்பவைகளையும், படித்தவைகளையும், படிக்கப் போகிறவைகளையும் அப்படியே மனதில் பதியும்படி செய்யுங்கள். அத்துடன் பரீட்சை எழுதும் நேரத்தில் ஆவியானவரே நீரே கூட இருந்து துணைசெய்ய வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன். நான் படித்து பட்டம் பெற்று உங்களுக்குரிய பிள்ளையாக என்றும் இருப்பேன் என உறுதியளிக்கின்றேன்.*

*எனது செபத்தைக் கேட்டதற்காக உங்களுக்கு நன்றி. எனக்கு நல்ல ஞாபக சக்தியை தந்தமைக்காக நன்றி. ஆவியானவர் என்னை விட்டு விலகாமல் இருப்பதற்காகவும் நன்றிகள். என் இனிய வகுப்பாசிரியை யெசிந்தா ரீச்சர் அவர்களையும், கணேசலிங்கம் ஆசிரியரையும் எனக்காக உங்களிடம் வேண்டுதல் செய்யும் எனது பங்குத் தந்தை அவர்களையும் எனது குடும்பத்தையும் ஆசீர்வதியுங்கள். ஆமென்.*

இந்தச் சிறிய செபத்தைக் கேட்டு அவருடைய வாக்கை நிறைவேற்றிய யேசுவுக்கே எல்லாப் புகழும் உரித்தாகுக. "நாம் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் மேலாக அனைத்தையும் செய்ய வல்லவரான" (எபே. 3.20) கடவுள் எனக்கு 175 புள்ளிகள் தந்து செட்டிகுளம் கோட்ட மட்டத்தில் சாதனை நிலைநாட்டச் செய்துள்ளார் என்பதை மன்னா வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன். நன்றி.

*கு. கட்சன் போல்ராஜ், வவு/ செட்டிகுளம் மகாவித்தியாலயம்.*

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல - 67
## எஸ்தர் 1 - 10

உங்கள் விடைகளை 10. 12. 2007க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | 03 | | | | | ★ | | | 04 | |
| | | | | 05 | | | | | | |
| | ★ | | | | | 06 | | | | |
| | | | | | 07 | ★ | | 08 | | 09 |
| | 10 | | | | | | 11 | | | |
| | | | | | 12 | | | | | |
| 13 | | 14 | | | | | | | 15 | |
| | 16 | | | ★ | | | | | | |
| | ★ | | 17 | | | 18 | | | ★ | 19 |
| | 20 | | | | 21 | | | | 22 | ★ |

### இடமிருந்து வலம்

1. எனவே அவர் காலங்கள் பற்றிய ...................... டைய ஞானிகளிடம் கலந்துரையாடினார்.
3. இவ்வார்த்தை அரசர் மற்றும் தலைவர்களின்................ நலமெனத் தோன்றியது.
5. மொர்தக்காய் அவ்வாறே சென்று எஸ்தரின் வாக்கின்படியே அனைத்தையும் .................... (2வது எழுத்து இறுதியாக உள்ளது)
10. உன் வேண்டுகோள் ............ அது உனக்குக் கொடுக்கப்படும்.
13. இவ்வார்த்தை ஆமானுக்கு நலமெனப்பட்டதால் அவன் ........................ ஒன்று செய்வித்தான்.
16. நீ ...................... வற்றில் எதையும் விட்டுவிடாதே.
17. மன்னருக்கு உண்டாகும் இழப்பிற்கு எதிரியால் ................ செய்ய முடியாது.
20. இதுவே அரசர் தாம் மரியாதை செய்ய ........................ மனிதருக்குச் செய்யும் சிறப்பாகும். (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. அரச வாயிலுள் சாக்கு உடை அணிந்து எவரும் ...................... என்பதால் அவர் வாயில்வரை சென்றார்.
2. ......................... தோற்றமும், வடிவழகும் கொண்ட இளம்பெண்.
4. அனைத்து யூதருள்ளும் அரச மாளிகையில் உள்ள நீ மட்டும் காப்பாற்றப் ..................... என உனக்குள் கற்பனை செய்ய வேண்டாம். (2வது எழுத்து இறுதியாக உள்ளது)
8. அவர்தம் ..................... மற்றெல்லா மக்களின் நியமங்களிலும் மாறுபட்டவை.
11. மன்னர் அணிகின்ற ஆடைகளும், அமர்கின்ற .................... தலையில் சூடும் மகுடமும் கொண்டுவரப்பட வேண்டும்.
13. அன்றிரவு மன்னருக்குத் .................. வரவில்லை.
14. எனவே அவர்தம் ஆட்சியின் ....................கள் அடங்கிய ஏட்டைத் தம்மிடம் கொண்டுவந்து வாசிக்குமாறு பணித்தார்.
15. சூசான் அரண்மனையில் ஐநூறு .................. யூதர்கள் கொன்றொழித்தனர்.

### வலமிருந்து இடம்

2. அவ்வாணை பாரசீக, மேதியச் சட்டங்களில் நிலையாய் இருக்கும்படி ....................ல் வேண்டும்.
5. மன்னர் தம் கைகளிலிருந்து பொற் .................... எஸ்தரிடம் நீட்ட, எஸ்தர் அருகில் சென்று செங்கோலின் நுனியைத் தொட்டார்.
6. ஆனால் நீயும் உன் தந்தையின் ....................... அழிவீர்.
7. எஸ்தரின் அழைப்பிற்கிணங்கி மன்னர் ஆமானை விரைந்து வருமாறு ............................
9. எஸ்தரை முன்னிட்டுக் ....................... மன்னர்களுக்கும் தம் அலுவலர் அனைவருக்கும் பெரிய விருந்து வைத்தார்.
11. சட்டத்திற்குப் ...................... எனினும் நான் மன்னரிடம் செல்வேன்.
12. எனக்காக .................. மூன்றுநாள் இரவு பகல் உண்ணாமலும், குடியாமலும் இருப்பீராக.
22. யூதருக்கு ..................க் கைநீட்டிய ஆமான் தூக்கிலிடப்பட்டான்.

### கீழிருந்து மேல்

7. இது மன்னருக்கு நலமெனப் ...................... அவரும் அவ்வாறே செய்தார். (3வது எழுத்து இறுதியாக உள்ளது)
8. இவ்வேலையைச் செய்வோருக்குக் கொடுக்குமாறு நானூறு 'டன்' வெள்ளியை ................. மன்னரின் கருவூலத்தில் சேர்ப்பேன்.
11. உடனே அக்காரியம் .................... செய்யப்பட உண்மை வெளிப்பட்டது.
15. அவர் முன்னிலையில் தம் மக்களுக்காகப் பரிந்து ................ வேண்டினார்.
18. இதற்காக மொர்த்க்காய்க்கு என்ன மரியாதையும் ............... செய்யப்பட்டன. (2வது எழுத்து இறுதி எழுத்துக்கு மேலே உள்ளது)
19. மன்னரும், ஆமானும் அரசி எஸ்தர் வைத்த .............ச் சென்றனர்.
21. நீ வேண்டுவது என் அரசின் ................. ஆனாலும் அது உனக்குக் கொடுக்கப்படும்.

# மரணித்தும் வாழ்பவர்

*(15ம் பக்கத் தொடர்ச்சி...)*

சுமார் எழுபத்தைந்தாயிரம் மக்கள் கலந்துகொண்டமையும் பிரதேசத்தின் முதல் நிகழ்வாகவே தென்பட்டது. அந்தளவுக்கு அன்னாரின் கல்விச்சேவைகள் பிரதேச மக்களை சென்றடைந்திருந்தன. பிரதேச பத்திரிகையின் 'தமிழ் அலை' அன்னாரின் சேவையினைப் பாராட்டி சிறந்த முறையில் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாக அமைந்திருந்தது. அத்துடன் பிரதேச தேசிய ஊடகங்களும் அன்னாரின் மறைவுக்கு இரங்கல் வெளியிட்டு சேவையினைப் பாராட்டியிருந்தமை நல்லதோர் சான்றாக அமைந்தது.

அன்னாரின் மறைவு குறித்து மன்னார் வங்காலையில் இருந்து வந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர் கூறுகையில், 'மன்னார் வங்காலையைப் பொறுத்தவரையில் அருட்சகோதரர் அஞ்ஞாதவாசம் புரிந்தவராகவும், மட்டக்களப்பின் கல்விச் சேவையில் மன்னனாகவும் விளங்கியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. வங்காலையில் பிறந்த மூன்று முத்துக்கள் மட்டக்களப்பில் சிறந்த கல்விப் பணியாற்றியுள்ளார்கள்" என்று தமது உள்ளத்துணர்வினை வெளிப்படுத்தினார். மூன்று முத்துக்கள் என அவ்வாசிரியர் குறிப்பிட்டது. அறுபதுகளில் ஆசிரியராகக் கடமையாற்றிய லீனா மாஸ்ரர், ஜேம்ஸ் பீரிஸ் மூன்றாமர் யாரைக் குறிப்பிட்டாரெனப் புரியவில்லை.

மன்னார் வங்காலையில் பிறந்து மறைப்பணியில் தன்னை இணைத்துக்கொண்ட அருட்சகோதரர் ஜேம்ஸ் பீரிஸ் அவர்கள் மட்டக்களப்பு புனித மிக்கேல் தேசிய கல்லூரியில் பத்து ஆண்டுகள் ஆசிரியராகவும், பத்து ஆண்டுகள் அதிபராகவும் சேவையாற்றி பல்லாயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கி விட்டு இடைநடுவே மறைந்த செய்தி அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. மாணவர்களும், மக்களும் கதறி அழுதமை இதற்கு சான்றாகும். அன்னாரின் ஆன்மா இறைமாட்சியில் சாந்தி பெற வேண்டுவோமாக.

## வவுனியா மறைக்கோட்டம்

# திருப்பாலத்துவ சபை போட்டி முடிவுகள்

### பாடல் போட்டி

குழு - 01
1ம் இடம் - தே. டுறிஸ்ரலா - செட்டிகுளம் பங்கு
2ம் இடம் - பா. ஜசிந்தா - செட்டிகுளம் பங்கு
3ம் இடம் - ப. ஜெரி லக்ஷிகன் - பம்பைமடு பங்கு

குழு - 02
1ம் இடம் - செ. விதூஷிகா - செட்டிகுளம் பங்கு
2ம் இடம் - ஜெ. சதூசன் - பம்பைமடு பங்கு
3ம் இடம் - ச.றொக்ஷினி - பம்பைமடு பங்கு
சே. றொமில்டா - கோமரசன்குளம் பங்கு

குழு - 03
1ம் இடம் - சி. திருச்செல்வநாயகி - செட்டிகுளம் பங்கு
2ம் இடம் - ஜெ. மரிய நிருபன் - செட்டிகுளம் பங்கு
3ம் இடம் - வே. அனுஜா நிரோஜினி - செட்டிகுளம் பங்கு

### கவிதைப் போட்டி

குழு - 01
1ம் இடம் - கு. சரூபனா - கோமரசன்குளம் பங்கு
2ம் இடம் - றொ. பிறிஸ்சில்டா - செட்டிகுளம் பங்கு
3ம் இடம் - ஜே. ரியாந்தன் - செட்டிகுளம் பங்கு

குழு - 02
1ம் இடம் - ஆ. ஜெறோன் - பம்பைமடு பங்கு
2ம் இடம் - சி.அனோஜா றொக்ஷினி - கோமரசன்குளம் பங்கு
3ம் இடம் - அ. அருண்ராஜ் - செட்டிகுளம் பங்கு

குழு - 03
1ம் இடம் - தோ. சுபேனா - செட்டிகுளம் பங்கு
2ம் இடம் - றொ.அன்ஸ்ரின் றொபின்சலா - செட்டிகுளம் பங்கு
3ம் இடம் - க. மெடோனா - வவுனியா பங்கு

### பேச்சுப் போட்டி

குழு - 01
1ம் இடம் - ஞா. மேரி கிறோஜினா - கோமரசன்குளம் பங்கு
2ம் இடம் - வெ. கனிஸ்ரன் - வவுனியா பங்கு
3ம் இடம் - த. பிரவீனா - கோமரசன்குளம் பங்கு

குழு - 02
1ம் இடம் - ஆ. ஜெறோன் - பம்பைமடு பங்கு
2ம் இடம் - அ. றொக்ஷினி - கோமரசன்குளம் பங்கு
3ம் இடம் - வி. ஆன்விபூஷா - வவுனியா பங்கு

குழு - 03
1ம் இடம் - வே. தர்ஷினி - கோமரசன்குளம் பங்கு
2ம் இடம் - யோ. சாள்ஸ் கிளிங்டன் - செட்டிகுளம் பங்கு
3ம் இடம் - ம. சாளினி - வவுனியா பங்கு

கடந்த 06. 10. 2007 அன்று வவுனியா மறைக்கோட்டத்தில் நடைபெற்ற மேற்படி திருப்பாலத்துவசபைப் போட்டியில் பங்கேற்ற மாணவர்களையும், வெற்றியீட்டிய மாணவர்களையும் மன்னா மனதார வாழ்த்துகின்றது. இப்போட்டிகளை ஒழுங்கமைத்த குருக்கள், துறவியர், திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்கள் ஆகியோரையும் மன்னா பாராட்டுகின்றது. - பதிப்பாசிரியர்

# விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 65ல்

## சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
ஆ. றட்நாதன்,
புனித வளனார் மாணவர் இல்லம்,
130, சின்னக்கடை, மன்னார்.

***இரண்டாம் பரிசு:***
கவுசி
தி. கு. கன்னியர் மடம்
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு

***மூன்றாம் பரிசு:***
ம. சிந்து மொறாய்ஸ்
1ம் வட்டாரம்
இரத்தினபுரி
வங்காலை

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 119 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 112 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.65ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. ந. ஜெகப்பிரியன், புதுக்கமம், உயிலங்குளம்.
2. லூ. நிகாஷன் கூஞ்ஞ, தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.
3. அன்ரனி புஸ்பம், பாண்டியன்தாழ்வு, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
4. சா. டெனிலா, கோயில் வீதி, உயிலங்குளம்.
5. அ. கவினா டனுஷியா, ஆண்டு 10, பு.ச.பெ.கல்லூரி, மன்னார்.
6. ஏ. பிறேம் லோகு, 5ம் வட்டாரம், பேசாலை.
7. திருமதி. பொபிதா அன்புராஜ் லெம்பேட், வங்காலை - 02
8. ஆர். யேசுராஜா, சின்னக்கரிசல், பேசாலை, மன்னார்.
9. யே. மிலோசா, முதலைகுத்தி, உயிலங்குளம்.
10. நற்குணம் தர்ஷிக்கா, பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்.
11. பி. ஜே. சிந்துஜா, எழுத்தூர், மன்னார்.
12. என். ஜனார்த்தனா, மணற்குளம், உயிலங்குளம்.
13. ச. ஆன் றொமிலா லெம்பேட், தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.
14. அ. சுபாஜினி, கனகராயன்குளம் தெற்கு, வவுனியா.
15. றீற்றஸ் மரிய கொறற்றி, பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்.
16. மி. ஆன் சுஷாந்தினி, முருங்கன்பிட்டி, முருங்கன்.
17. ஜே. மனோ, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
18. அ. கரோலின் கீர்த்திக்கா, 70, பேராலய வீதி, திருகோணமலை.
19. றெ. ஜோர்ஜ் ஸ்ரீவின்சன், கடைவீதி, நானாட்டான்.
20. அ. அருண், தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.
21. இ. ஒலின்ரா, நல்லாயன் கன்னியர் மடம், பூவரசன்குளம்.
22. க. சிறோமி, இலுப்பைக்குளம், நேரியகுளம்.
23. அ. மேரி ஜஸ்மின், யோசப்வாஸ்வீதி, இறம்பைக்குளம், வவுனியா.
24. செ. மெலானி நிஷாந்தினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
25. நற்குணம் பிரதீபா, பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்.
26. யூஜின் றொகானி டயஸ், கற்குழி, வவுனியா.
27. ச. மேரி றெஜினா, கங்காணிதீவு, நானாட்டான்.
28. றொ. றெபேக்கா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
29. அ. பஸ்ரி, பிச்சைகுளம், முருங்கன்.
30. ம. ஆன் தர்ஷி, சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்.
31. ம. சஜீவன் றொமி, ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி, மன்னார்.
32. வி. விதுசனா, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
33. அ. ஜெனித்தா, தி.கு.க.மடம், இறம்பைக்குளம், வவுனியா.
34. யே. ஜெஸ்மின், பள்ளக்கமம், முருங்கன்.
35. எஸ். நீக்கிலாப்பிள்ளை, ஒலிமடு, நானாட்டான்.
36. யோ. பவுஸ்ரீனா, கீளியன்குடியிருப்பு.
37. ம. றீற்றம்மா, சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்.
38. அ. சந்துஜன், பிள்ளையார் கோவில்வீதி, வெளிக்குளம், வவுனியா.
39. திருமதி. ஜே. ஜெபநேசன், வாழ்க்கைப்பெற்றான் கண்டல்.
40. எம். பொனிபஸ் றோச், பள்ளிமுனை, மன்னார்.
41. மா. ஞானசவுந்தரி, யோசப்வாஸ்நகர், தோட்டவெளி.
42. பே. நவரட்ணம், புதுக்கமம், உயிலங்குளம்.
43. தே. மியூலின், முதலைகுத்தி, உயிலங்குளம்.
44. ஞா. அமல டினுக்ஷி மடுத்தீன், தலைமன்னார் மேற்கு.
45. மி. சுதர்சன், முருங்கன்பிட்டி, முருங்கன்.
46. எம். நிறோன், கோவில் வீதி, உயிலங்குளம்.
47. அருட்சகோதரி. பற்றீசியா, யாழ்ப்பாண வீதி, றம்பாவ.
48. வெ. கிஷானி, உயிர்த்தராசன் குளம், முருங்கன்.
49. ஜே. கிறிசாந்தன், எழுத்தூர், மன்னார்.
50. ஏ. மேரி கொண்செப்ரா, பி - 06, மடுக்கோவில், மடு.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 65 இற்கான சரியான விடை

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சி[1] | று | மை | யு | ம் | யை | தி | று | கு | க் | வா[2] |
| ன் | ல் | தி | ம[3] | ன | வே[4] | த | னை | யே | ❋ | யி |
| ன | கு | க் | தி | பா[5] | லை | செ[6] | ய் | வ | தி[7] | ல் |
| மு | இ[8] | ர | ல் | வி | யை | ❋ | து | ன் | ரு | வ |
| ம் | ர | க | ட் | ரு | அ[9] | ணி | ந் | து | ம் | ரை |
| ❋ | வு | டை | ட் | கோ[10] | டி | ள் | ர் | ப | பி | ன |
| து | ம் | ஏ[11] | னை | ய | மை | க | ள | ஊ[12] | ❋ | மா |
| த் | ட | ற் | இ[13] | ம் | ம் | ல் | த[14] | யா | ர் | ல |
| ர் | மா[15] | ப | ரே | மு | க[16] | ட | ட் | ட | ❋ | ல் |
| தி | று | கு | க் | வா[17] | க் | ம[18] | லை | வே | வ் | இ[19] |
| எ[20] | தி | ரா | கா | ❋ | து[21] | ந் | ரு | பி | ன் | நோ[22] |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.66ற்கான முடிவுகளை 2007ம் ஆண்டு நவம்பர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

# மன்னா

## வவுனியாவில் இடம்பெற்ற வடமாகாண தமிழ் இலக்கிய விழா 2007






கடந்த ஒக்ரோபர் மாதம் 27, 28ம் திகதிகளில் வவுனியாவில் இடம்பெற்ற வடமாகாண தமிழ் இலக்கியவிழா நிகழ்வுகளை படங்களில் காண்கிறீர்கள். முதல் படத்திலே மேடையில் தமிழ் பெரியார்களாக வேடப்புனைவு செய்த மாணவர்களையும், இரண்டாவது படத்தில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. ஏ. ஒஸ்வோல்ட் அவர்கள் உரைநிகழ்த்துவதையும், செங்கை ஆழியான், டொமினிக் ஜீவா போன்ற எழுத்தாளர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

## நீங்காத நினைவுகள்

### 1ம் ஆண்டு நினைவு

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 26 . 01 . 1927 |  | 25 . 11 . 2006 |

**ஆனந்தம் ஒஸ்பிஸ் குரூஸ்**

[இளைப்பாறிய அதிபர், வங்காலை]

"சீவியத்தில் உம்மை நேசித்தோம். மரணத்திலும் உம்மை மறவோம்"

பண்பில் உறைவிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
ஆனந்தம் பொங்கும் இல்லத்தின்
அன்புத் தலைவனாய் இருந்து
மக்களை நல்மக்களாய் ஆக்கிய ஒளி விளக்கே
உம்பிரிவு ஆண்டு ஒன்றானாலும்
எம் நினைவு என்றும் எம்மனதில் நீங்காது
நீர் காட்டிய நல்வழிகள் என்றும் எம்மில் மாறாது.

என்றும் உம் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### 1ம் ஆண்டு நினைவு

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 17 . 08 . 1982 |  | 23 . 11 . 2006 |

**செல்வன். ஹெறன்ஸ் பேர்னாட்**

(B.sc.computer Engn. M.sc. Wireless Network

[கணனிப் பொறியியலாளர், ஐக்கிய அமெரிக்கா]

"ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை"

இருபத்து நான்கு ஆண்டுகள் வாழ்ந்தது போதுமென்று இமைப் பொழுதில் வாழ்வைத் துறந்தனையோ! நிலையில்லா உலகில் நிஜமில்லா உறவென்று நிரந்தரம் தேடி இறையடி சென்றாயோ. விதை மடிந்து பயிரானதுபோல் – நீ மடிந்து வையத்தில் ஏழு ஜீவன்கள் உயிரானது. மரணித்தும் வாழ்கின்ற மாவீரன் நீ. அதை உன் இதயம் சொல்லும். அது துடிக்கும் ஒவ்வொரு விநாடியும் இறை யேசுவின் புகழ் ஒலிக்கும். வாழும்போது பிறர்க்காக வாழ்ந்தாய், மடிந்த பின்னும் இதயம் பிறர்க்கீந்த வள்ளலே, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பெருமகனே! உன் பெருமை சொல்ல உலகில் வார்த்தைகளே இல்லை. ஆண்டொன்று மறைந்தாலும் மறக்க முடியுமா உன் மகத்துவத்தை? வானுறையும் தெய்வத்துள் வாழ்கின்றாய் என உணர்கின்றோம். நீ புனிதராக வல்லபரன் இயேசுவை வேண்டுகின்றோம்.

என்றும் உம் நினைவுகளுடன்
பெற்றோர், சகோதரி, உற்றார்

### 1ம் ஆண்டு நினைவு

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 25 . 09 . 1936 |  | 28 . 11 . 2006 |

**ஜெறோம் ஜெயசீலன் டலிமா**

[கமநலசேவை பெரும்பாக அலுவலர்]

"சீவியத்தில் உம்மை நேசித்தோம். மரணத்திலும் உம்மை மறவோம்"

ஆண்டொன்று போனாலும் உன்னுருவம் எம்மைவிட்டு அகலவில்லை
ஆற்றலிலும், பண்பிலும் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய் திகழந்தீர்கள்
ஐயா உங்கள் அரவணைப்பில் ஆசையாய் வாழ்ந்தோம்
காலனுக்குப் பொறுக்கவில்லை கடுகெதியில் பிரித்துவிட்டான்
கலங்குகின்றோம், கண்ணீர் வடிக்கின்றோம்.
தனக்கென வாழாத்தியாகியே, சேவையில் சளைக்காத செம்மலே
கவிதையில் கருத்தாளம் கொண்டவனே, மனிதத்தை புனிதமாய் மதிப்பவனே
ஏழைகளின் புன்னகையில் மகிழ்ந்தவனே,
மண்ணின் வாசனையை மணங்கமழச் செய்தவனே
வந்தோரை வாழவைக்கும் வள்ளலே, வெள்ளை உள்ளம் கொண்டவனே
அன்பின் திரு உருவே, அணையாதீபமே
எங்கு ஓடிமறைந்தாய் ஐயா! செய்த சேவை போதுமென்று
அழைத்துவிட்ட பரமன் உன்னை அள்ளிஎடுத்து அணைத்து
ஆறுதல்படுத்திட உருக்கமாய் வேண்டுகின்றோம்

என்றும் உம் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

### நினைவஞ்சலி

| 9ஆம் ஆண்டு | 12ஆம் ஆண்டு |
|---|---|
|  |  |
| மலர்வு : 18.07.1942<br>உதிர்வு : 01.01.1998 | மலர்வு : 05.11.1972<br>உதிர்வு : 06.11.1995 |
| நோபேட் அல்போன்ஸ்<br>[தலைமன்னார்] | இ. ஆ. ரவீந்திரகுமார்<br>[பாபு, தலைமன்னார்] |

மண்ணிலே நீங்கள் இருவர் மறைந்தாலும்
அன்போடு எமை வளர்த்த நாட்கள் எம் மனத்திரையில் விழுதே!
வசந்தம் கமழும் பூக்களாய் அமைதி கொண்ட சுபாவம்!
கோபமது கொள்ளா நேயம்! இரக்கம் கொண்ட நல் இதயம்!
அன்பு கொண்ட உள்ளம் எதையும் தாங்கும் இதயமாய் வாழ்ந்தீர்கள்.
உங்கள் இருவரையும் எம்மால் மறக்க முடியவில்லையே.
காலத்தின் முடிவுரையில் இறைவனடி கலந்துவிட்டீர்கள்
பிரிந்துவிட்ட எம் உறவு மறவாது உங்களை.
உங்களது ஆன்ம சாந்திக்காகவும் விண்ணிலே இறைவனோடு வாழவும்
என்னாளும் வேண்டி நிற்கின்றோம்.

பிரிவால் துயருறும்: திரு ச. சிங்கராயன் குரூஸ், திருமதி சாராள் லியோன், அருட்சகோதரி தியோப்பின் [றெம்சி] [தி.கு], கொன்சி, ஜென்சி, சௌமி, ஜென்ஸ்ரன், தலைமன்னார்

---


மன்னார் மறைமாவட்டத்தின்
தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை.

**மன்னாவை மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்**

உங்கள் உறவினர் நண்பர்களுக்கு மன்னாவை அறிமுகம் செய்யுங்கள். உங்கள் உறவினர் அல்லது நண்பரின் பெயர் முகவரிகளை தெளிவாக எழுதி சந்தாப்பணத்தையும் எமக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் உறவினர், நண்பரின் வீடுதேடி மன்னா பறந்து செல்லும். உள்நாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 400ஐயும் வெளிநாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 2000ஐயும் (20 யூரோ) அனுப்பவும். சந்தாப் பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ அனுப்பலாம். காசோலை மூலம் அனுப்புவதாயின்
வங்கியின் பெயர்:

**Hatton National Bank Ltd., Mannar**

பணம் பெறுபவர் பெயர்: **The Editor - MANNA**
வங்கிக் கணக்கு இலக்கம்: **S/A No.02-1678001-5**
என்று குறிப்பிடவும்.

உங்கள் ஆன்மீகப் பசிக்கு உணவாக - உங்கள் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் வகையில் மன்னா இன்னும் புதிய அம்சங்களுடன் புதுமெருகுடன் தொடர்ந்து வெளிவரும்.

**நினைவுகளைப் பிரசுரிப்போர் கவனத்திற்கு**

இறந்துபோன உங்கள் அன்புக்கு உரியவர்களின் நினைவுகள், யூபிலி மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றிற்கான கட்டணமாக ரூபா 2000 அறவிடப்படும். இவற்றைக் கலர் பக்கத்தில் பிரசுரிப்பதாக இருந்தால் ரூபா 4000 அறவிடப்படும்.

இந்த நினைவுகள் எந்த மாதத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்களோ, அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

- மன்னா நிர்வாகம் -

**மன்னா சந்தாதாரர்களே!**

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்குத் தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவில் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப் பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக்கொள்ளுங்கள். எமது வங்கி இலக்கம் :
**The Editor - MANNA. S/A No.02-1678001-5**

**மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா**

உள்நாடு - இலங்கை ரூபா 400
வெளிநாடு - இலங்கை ரூபா 2000 (20 யூரோ)



**அனைத்துத் தொடர்புகளுக்கும்**

**The Editor,
'MANNA'
St. Joseph's Catechetical Centre,
St. Sebestian's Cathedral Street,
Mannar, Sri Lanka.**



பதிப்பாசிரியர்,
'மன்னா'
புனித வளன் மறைக்கல்வி நிலையம்,
புனித செபஸ்தியார் பேராலய வீதி,
மன்னார்.

தொலைபேசி இல. 023 - 2222377/ 060 - 2233276



இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, கொழும்பு 14, பிறின்ஸ் ஒப் வேல்ஸ் அவனியூ, 784/1 இலக்கத்திலுள்ள கிறேஸ் என்ரபிறைசஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது